
KALKI 1.12.96 ரூ. 3.00
கல்கி
போட்டோ எடுப்பது ரொம்ப ஈஸி!
மடிசார் டீச்சர்!

உங்கள் வளமான எதிர்காலத்திற்கு
எங்கள் விசேஷ சேமிப்புத் திட்டம்

சில்வர் டெபாசிட் திட்டம்



டெபாசிட்டுகள் வரவேற்கப் படுகின்றன

இன்றே எங்களிடம் ஒரு டெபாஸிட்டைத் துவக்கி,
வளமான மகிழ்ச்சியான வருங்காலத்தை எதிர்நோக்குவீர்

EXPRESS
FINANCIAL EXCHANGE LIMITED

பாங்க் ஆப் அமெரிக்காவின் சார்பு நிறுவனம்

- வாகனங்களுக்கான கடன்கள்
- பங்குகள் மீதான கடன்கள்

அங்கீகரிக்கப்பட்ட டீலர் **அமெரிக்கன் எக்ஸ்பிரஸ்** டிராவலர்ஸ் செக்குகள்

பதிவு அலுவலகம்: நெ. 9, அட்லேஸ் டவர், தெற்கு போக் சாலை, சென்னை-600 017.
போன்: 4340325, 4340329, 4341403, ஃபாக்ஸ்: 4341518.

● சென்னை ● ஹைதராபாத் ● விஜயவாடா ● விசாகப்பட்டினம் ● பெங்களூர், ● திருச்சி
● கும்பகோணம் ● கோயம்புத்தூர் ● பாண்டிச்சேரி

1996 மார்ச் 4-ந் தேதி எகனாமிக் டைம்ஸில் வெளியான எமது சட்ட பூர்வ விளம்பரத்தைத் தொடர்ந்து இந்த விளம்பரம் வெளியாகிறது.

Helios & Mathison

பிரபலங்களின் குடும்பங்கள்:
ஃபாத்திமா பாபு

“கருத்து வேறுபாடு வந்தால் பேசித் தீர்த்துக்குவோம்”





“ஃபாத்திமாவின் பலம், பலவீனம் ரெண்டுமே அவளது டக்கென்று முடிவெடுக்கும் குணம் தான். எந்தப் பிரச்னைக்கும் ஓர் உடனடி தீர்வை அவளால் காண முடிகிறது என்பது சாதகமான அம்சம். ஆனால் பின்விளைவுகளைப் பற்றி அவ்வளவாக யோசிக்காமல் படபடன்னு அவள் பேசுவது சரியில்லையோ என்ற எண்ணம் எனக்கு உண்டு” என்கிறார் பாபு.

“பாபுவுக்கு அசாத்திய பொறுமை. கத்திக் கூச்சலிடவேண்டிய நேரங்களில் கூட சொல்ல

வந்ததைப் பொறுமையாக, சாந்தமாகவே சொல்லுவார். ஆனால் எந்த முடிவெடுக்கவும் நிறைய நேரம் எடுத்துக்குவார். நி...றை...ய... நேரம்'' என்கிறார் ஃபாத்திமா.

நமது சந்திப்பின்போதே இது புரிந்தது. கேட்டவுடன் பதிலளிக்கத் தொடங்கி விடுகிறார் ஃபாத்திமா. பாபு? வேறு ஏதேதோ திசைகளைப் பார்த்தபடி அவர் மௌனமாகவே பல நொடிகள் கழிக்கும்போது, 'நம் கேள்வியை அவர் காதில் வாங்கிக் கொண்டாரா?' என்று நமக்குச் சந்தேகமே வந்து விடுகிறது! ரொம்ப முன்னெச்சரிக்கையான குணம்.

இரு துருவங்கள் ஈர்க்கும்தானே? இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தில் இருவரும் ஒரே தினத்தில் வேலைக்குச் சேர்ந்திருக்கிறார்கள். ஒரே பயிற்சி வகுப்புகள்.

''கர்வமில்லாமல் பழகுவா. பொலைட்டாக நடந்துக்குவா. பிடிச்சிருந்தது. திருமணத்துக்கு சம்மதமான்னேன். ஒத்துக்கிட்டா'' என்கிறார் பாபு எளிய வார்த்தைகளில். என்றாலும் இரு வேறு மதத்தைச் சேர்ந்தவர்கள் திருமணம் செய்து கொள்வது என்பது இன்று கூட அவ்வளவு எளிதான விஷயமில்லையே?

''எல்லா கடவுளர்களும் சமமாக நடத்தப்பட வேண்டுமென்ற மத நம்பிக்கை கொண்டவர் பாபு. ராமலிங்க அடிகளாரின் சமரச சன்மார்க்கம்தான் கல்யாணத்துக்கு முன்னமே கூட அவர் பின்பற்றிய நெறி'' என்கிறார் ஃபாத்திமா. பாபுவின் தந்தை கூட இதே மதநெறியைப் பின்பற்றுபவர்தான். ''இருந்தாலும் என் தங்கைகளின் கல்யாணம்,



''எங்க ஆபீஸ்ல எல்லாரும் புயல் நிவாரண நிதிக்கு ஒரு நாள் சம்பளத்தைக் கொடுத்திருக்கோம்.''

''ஹூம்... இது என்ன பெரிசு...? நாங்க ஒரு நாள் லஞ்சத்தையே கொடுத்துட்டோம்!''

– சீர்காழி வி. ரேவதி

எங்க திருமணத்தாலே பாதிக்கப்படுமோன்னு அப்பா கவலைப்பட்டார்.'' (இப்போது இவரது தங்கைகளுக்குத் திருமணம் நடந்துவிட்டது – பெற்றோர் ஏற்பாடு செய்ததுதான்).

''மதம் என்பது எந்தவித மனித உறவுக்கும் குறுக்கே வரக்கூடாது!'' என்கிறார்கள் இருவரும். அது சரி, எந்த முறையில் திருமணம் நடந்தது? ''மோதிரம் மாற்றிக் கொண்டோம்'' எனும் பாபுவின் நெற்றியில் பட்டையாக விபூதிக் கீற்று.

சற்றுத் தயங்கிவிட்டு, ''கல்யாணத்துக்கு முன்னாலே நெற்றியிலே விபூதி இல்லாமல் என்னைப் பார்க்கவே முடியாது. 1989-ல் திருமணமானதைத் தொடர்ந்து, சமூகத்தில் உள்ள சிலரது உணர்வுகளுக்கு மதிப்பளித்து, விபூதி இட்டுக் கொள்ளாமலேயே இருந்தேன். சமீப காலமாக எல்லாம் சரியாகிவிட்டது என்ற நிலை வந்ததும், மீண்டும் தினமும் விபூதி இட்டுக் கொள்கிறேன்'' என்கிறார்.

பாபுவின் உறவினர் வீட்டு விழாவுக்குச் செல்லும்போது ஃபாத்திமாவும் நெற்றியில் பொட்டு இட்டுக் கொண்டு போவதுண்டு என்கிறார்.

ஃபாத்திமாவின் வீட்டில் இந்தத் திருமணத்தை எப்படி ஏற்றுக் கொண்டார்கள்? சுருக்கமான ஆனால் அர்த்தம் பொதிந்த பதில்கள் வெளிவருகின்றன ஃபாத்திமாவிடமிருந்து. ''என் அம்மாவிடம் சொன்ன பிறகு தான், நாங்க கல்யாணம் செய்துக்கிட்டோம். இப்போ எல்லோரும் சமாதானமாயிட்டாங்க!''

பிறந்த வீட்டிலிருந்து வந்து போய்க் கொண்டிருக்கிறார்களா?''

''இருதரப்பு உறவினர்கள் வீட்டுக்கும் நாங்க போய் வந்துக்கிட்டு இருக்கோம்.''

பொதுவாக காதலர்களாக இருக்கும்போது தங்கள் சிறந்த தன்மைகளை மட்டுமே வெளிக்காட்டுவதால், திருமணமானவுடன், (வாழ்க்கைத் துணையின் முழு பரிமாணமும் வெளிவர) பிரச்னைகள் தோன்றலாம். இவர்கள் அனுபவம் எப்படி?

''திருமணமான முதல் வருடம் மற்றவரது

மாறுபட்ட கருத்துகளையும் குறைபாடுகளையும் அறிந்து கொண்டோம். பிறகு ஒருவருக்கொருவர் ஒத்துப் போக ஆரம்பித்தோம். நான்கு வருடங்கள் ஆனதும் மற்றவரது குறைபாட்டையே கூட நேசிக்கத் தொடங்கிவிட்டோம்" என்கிறார்கள்.

எந்த முக்கிய விஷயத்தையும் கணவரைக் கலந்து ஆலோசிக்காமல் ஃபாத்திமா செய்ததில்லையாம். "தொலைக்காட்சித் தொடரில் நடிப்பது, திரைப்படங்களில் பங்கேற்பது இது போன்ற விஷயங்களைக் கூட, பாபு நோ சொல்லியிருந்தா நான் ஏத்துக்கிட்டிருக்க மாட்டேன். ஆனால் ஒருமுறை தொலைக் காட்சித் தொடரில் நடிக்கத் தொடங்கி விட்ட பிறகு வீட்டுக்குத் திரும்ப அவ்வப்போது நேரமானது. வீட்டையும் குழந்தையையும் என்னால் சரியாக கவனிக்க முடியாத அந்தக் கால கட்டத்தை பாபுவால் முதலில் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. பிறகு 'கமிட் செய்து விட்ட வேலையிது. பாதியில் பின்வாங்க முடியாது' என்பதை விளக்கிச் சொன்னதும் ஏத்துக்கிட்டார். இப்படித்தான் எங்களுக்குள் வேறுபட்ட கருத்து வந்தால் பேசித் தீர்த்துக்குவோம். மற்றவரை கன்வின்ஸ் செய்யும் வரை நாங்கள் ஓய மாட்டோம்" என்கிறார் ஃபாத்திமா.

மகனுக்கு ஆஷிக் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். "எந்த மதத்தையும் குறிக்காத வட இந்தியப் பெண் என்று கணவர் கூற, 'பொதுவா 'காதலன்'னு சொல்லலாம்னாலும், 'அன்பு செலுத்துபவன்'னு வச்சிக்கலாம்" என்று பெயருக்குப் பொருளுரை சொன்னார் மனைவி.

ஆஷிக் பாலலோக் மெட்ரிகுலேஷன் பள்ளியில் முதல் வகுப்பு படிக்கிறான். "எந்த மதவேறுபாடும் இல்லாமல்தான் அவனை வளர்த்து வருகிறோம். நீங்க வேணா அவனை கேட்டுப் பார்த்து உறுதி செய்துக்கலாம். ஒருமுறை பள்ளிக்கூடத்திலே ஒருத்தர் "நீ முஸ்லீமா? இந்துவா?"ன்னு வேணும்னே கேட்டிருக்கார். அப்படின்னா என்னன்னு இவன் என்கிட்டே வந்து கேட்க, அப்படி அவனிடம் கேட்டது பற்றி எனக்கு பயங்கர ஷாக்" என்கிறார் ஃபாத்திமா.

பள்ளிக்கூடத்தில் "மதம்" என்ற கேள்விக் கெதிரே பதிலை நிரப்பாமல் இருக்க முடிந்ததா? தலைமை ஆசிரியரிடம் தங்கள் நிலைப் பாட்டை விளக்கினார்களாம்.

காதல் கட்சியின் கொடியை உயரத் தூக்கிப் பிடிக்கிறார்கள் இத்தம்பதியினர். "உலகம் மாறித்தான் ஆகணும். ஜாதி, மதம்ங்கிற தடைகளாலேதான் நிறைய கலவரங்கள் இந்த நாட்டிலே நடக்குது. கலப்பு மணங்களாலேதான் - அதுவும் காதல் மணங்களாலேதான் - இதற்கு ஒரு விடிவு பிறக்கும்" என்கிறார்கள் கோரஸாக.

உங்கள் காதல் திருமணத்தால் இன்ஸ்பயர் ஆனவர்கள் உண்டா என்ற கேள்விக்கு, "தேவி என்ற இந்துப் பெண்ணும், ஏஜிஸ் என்ற முஸ்லீம் இளைஞனும் எங்களிடம் வந்து அவர்கள் திருமணம் செய்து கொள்வதற்கான வழிமுறைகளைக் கேட்டார்கள். நானும் சொன்னேன். இப்போது அவர்கள் திருமணமாகி நலமாகவே இருக்கிறார்கள்" என்று பதிலளித்தார் ஃபாத்திமாபாபு.


- அருண்சரண்யா


படங்கள் : **யோகா**

"குடிநீர்ப்பிரச்னை சம்பந்தமா உங்க வார்டு கவுன்சிலரைப் போய் பார்த்தீங்களே... என்ன செய்தாரு?"

"ஒரு டம்ளர் தண்ணீர் குடுத்தாரு!"

— கே. அனிதா





"இந்தா, ஒரு 107 பேருக்கு சாப்பாடு தயார் பண்ணு!"

"நீங்க பெரிய தலைவரா இருக்கலாம். அதுக்காக உங்க பினாமிகளையெல்லாம் நம் வீட்டுக்குச் சாப்பிட வரச் சொல்லி என்னைக் கஷ்டப்படுத்தணுமா?"

— உ. ராஜாஜி


Life of the People
India is a Vast Country
There are twentyfive States
India The life of the people
இப்படியே வாழுங்க மிஸ்...
இதுவே நல்லாயிருக்கு...!

"விற்பெரு விழவும் கஞ்சனும் மல்லும்..." என்ற திருமங்கையாழ்வாரின் பாசுரத்தைக் கணீர் என்று சொல்கிறார்கள் நான்காவது படிக்கும் குழந்தைகள். அவர்கள் பெயர் : அசமத், சையத் அலி பாத்திமா!

தெருவில் வாழைப்பழம் விற்பவரின் மகனான வெங்கடேஷும், பூக்காரரின் மகளான கோமளாவும் எந்தவித கஷ்டமுமின்றி, அந்தப் பள்ளியில் படிக்க முடிகிறது. மீனவக் குடும்பத்தைச் சேர்ந்த ஹரிபிரஸாத், விவேக் அரசு போன்ற இருவர்கள் ஓட்டப் பந்தயத்திலும், நீச்சலிலும் பரிசுகளைப் பெற்றுப் பிரகாசிக்கிறார்கள்!

இதெல்லாம் எந்தப் பள்ளியில் என்று கேட்கிறீர்களா? நெரிசலான திருவல்லிக்கேணி பகுதியில், பார்த்தசாரதி கோயிலுக்கு அருகிலிருக்கும் டி.பி. கோயில் தெருவில் உள்ள நியூ எவரெஸ்ட் ஆங்கிலப் பள்ளியில்தான்! பெற்றோரிடம் பணம் கறக்கிற மற்ற சராசரி நர்ஸரி பள்ளிகளைப் போல்தானே இதுவும் என்ற எண்ணம், ஆசிரியை கமலம் சிம்ஹனிடம் பேசத் துவங்கிய சில நிமிடங்களில் மறைந்து விடுகிறது.

"பழைய கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுத்து, அதே சமயம் புதிய எண்ணங்களையும் குழந்தைகளின் மனத்தில் புகுத்த வேண்டும் என்பதுதான் எங்கள் குறிக்கோள். வாரம் ஒருமுறை ராமாயணம், மகாபாரதத்திலிருந்து கதைகள், திவ்யப்பிரபந்தம் போன்றவை சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. குரான் மற்றும் பைபிளிலிருந்து நீதிக் கதைகளைச் சொல்லிக் கொடுக்கிறோம்.

இவை தவிர, சுற்றுப்புறச் சூழல், ஒழுக்கம் பற்றியும் போதிக்கப்படுகிறது. மாதக் கட்டணத்தையும் ஸ்பெஷல் கட்டணத்தையும் தவிர வேறு எந்தக் காரணம் சொல்லியும் பிள்ளைகளிடம் இருந்து நாங்கள் பணம் வசூலிப்பது கிடையாது. இங்கு படிக்கும் இருநூறு குழந்தைகளுள், கிட்டத்தட்ட 40 சதவீத குழந்தைகள் மிகவும் ஏழைமையான குடும்பத்திலிருந்து வருகின்றனர். இதில் பாராட்டும்படியான அம்சம் என்னவென்றால் அந்தக் குழந்தைகளின் பெற்றோர்கள் கஷ்டப்பட்டாலும் ஒழுங்காக ஃபீஸ் கட்டி வருவதுதான்!" என்று பெருமையுடன் சொல்கிறார் கமலம்.

இவர், பள்ளிக்கு மடிசார் கட்டு உடுத்தி வருகிறார். இது பற்றிக் கேட்டபோது, "என் கணவர், ராகவசிம்ஹன் ஒரு மூத்த பத்திரிகையாளர். வேத வகுப்புகள் எடுப்பவர். மிகவும் ஆசாரமானவர். அதனால் வீட்டில் நான் மடிசார் கட்டிக் கொண்டிருப்பேன். பின்னர் இங்கு ஆசிரியையாக வந்தபோது, முதல் நாளே குழந்தைகளிடம் 'நான் இப்படியே வரலாமா?' என்று கேட்டேன். 'இப்படியே வாங்க மிஸ். இதுவே நல்லாயிருக்கு!' என்று குழந்தைகள் சொல்லவே, இதே பாணியில் புடைவை கட்டிக் கொண்டு பள்ளிக்கு வருகிறேன்!" என்றார்.

ஒரு காலத்தில் திருவல்லிக்கேணியில் பிரபலமாக இருந்த எவரெஸ்ட் பள்ளி, மற்ற பள்ளிகளோடு போட்டி போட முடியாமல் மூட வேண்டிய நிலை. அந்தச் சமயத்தில் வேத, சமஸ்கிருத, ஹிந்தி வகுப்புக்களை நடத்த இடம் தேடிக் கொண்டிருந்த யோகக்ஷேமா டிரஸ்டைச் சேர்ந்தவர்கள் அணுகினார்கள். 'பள்ளியையே வேண்டுமானால் எடுத்து நடத்திக் கொள்ளுங்கள்' என்று நிர்வாகம் சொல்லவே, டிரஸ்டின் முக்கியப் புள்ளியான ராகவசிம்ஹன், மனைவி கமலத்துடன் கலந்தாலோசித்தார்.

• கமலம்




நெடுநாட்களாகவே, பள்ளியில் ஆசிரியையாகப் பணிபுரிய வேண்டும் என்ற ஆவலில் இருந்த கமலமும் ஓ.கே. சொல்லிவிட 65 பேர் மட்டுமே படித்துக் கொண்டிருந்த எவரெஸ்ட் பள்ளி, 94-ல் இவர்கள் கைக்கு வந்தது. இரண்டே வருடத்தில் மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை இருநூறைத் தொட்டு விட்டது.

"எங்களுடைய இப்போதைய பிரச்னை இடப்பிரச்னைதான். கூடிய விரைவில் வேறு வசதியான இடத்துக்கு போய் விடலாமென்று இருக்கிறோம். பணம் இல்லை என்ற ஒரே காரணத்திற்காக, சமுதாயத்தின் அடிமட்டத்தில் இருக்கும் குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்குத் தரமான கல்வி கிடைக்காமல் போய்விடக் கூடாது என்பதுதான் எங்கள் கவலை!" என்று சொல்கிறார் யோகக்ஷேமா டிரஸ்டின் மானேஜிங் டிரஸ்டியான ராகவசிம்ஹன்.

- ஸ்ரீநிவாசன்

வண்ணப் படங்கள் : மேஜர் கே. மூர்த்தி



அனைவரையும் கலங்கச் செய்த ‘ராகிங்’!

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் க. பொன்னுசாமியின் மகனான நாவரசுவின் மரணம், ராகிங் பற்றிய புதிய பலத்தைக் கிளப்பி விட்டிருக்கிறது. ‘ராகிங்கை தடைசெய்யச் சட்டம் கொண்டு வரப்படும்’ என்று சூழ்நிலைக்குத் தக்கவாறு ஆளும் அரசியல்வாதிகள் அறிக்கைகள் விடுகிறார்கள். கொலை செய்து, உடலை துண்டு துண்டாக வெட்டி, ரயிலிலும் பஸ்ஸிலும் சென்று ஆங்காங்கே வீசியெறிந்து விட்டு, இயல்பு நிலையில் உலவிக் கொண்டிருந்த ஜான் டேவிட் ஒரு மனநோயாளியாகக் கூட இருக்கலாம் என்று விசாரணை அதிகாரிகள் கருதுகிறார்கள். ஓரினச் சேர்க்கை பழக்க முடையவர்கள், தம் இச்சைக்கு உடன்படாதவர்களை தீர்த்துக் கட்டுவது போன்ற சம்பவங்கள் மேலைநாடுகளில் நடைபெற்று இருக்கின்றன.

தொழிற்கல்லூரிகளில் ராகிங் என்பது ஒவ்வோர் ஆண்டுத் துவக்கத்திலும் அடிபடுகிற விஷயம்தான். குறிப்பாக ஹாஸ்டலில் தங்கியிருக்கும் மருத்துவக் கல்லூரி மாணவர்களிடையே ராகிங் நடப்பது தவிர்க்க முடியாதது போலாகி விட்டது.

“இது பற்றி விசாரித்தபோது, நீங்கள் ராகிங் என்று எதைச் சொல்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. 1993-ல் நான் இங்கு சேர்ந்த போது சீனியர்களெல்லாம் என்னைக் கூப்பிட்டு பேரை விசாரித்தார்கள்; கடைக்குப் போய் சிகரெட் வாங்கி வரச் சொன்னார்கள்; ஆடச் சொன்னார்கள்; பாடச் சொன்னார்கள். அவ்வளவுதான். இதன் மூலம் பல சீனியர்கள் எனக்குத் தோழர்களாக மாறி விட்டார்கள். அவர்களுக்கு ரெகார்ட் எழுதிக் கொடுக்கச் சொன்னாலும், என்னுடைய சந்தேகங்களையும் தீர்த்து வைத்தார்கள். ஆக புதிதாக ஒரு சூழ்நிலையில் வசிக்க வரும் மாணவனுக்கு வெட்கம், பயம் தெளிய வேண்டும். அதைப் போக்குவதற்கு செய்யப்படும் செய்கைகளைத் தான் ராகிங் என்று சொல்கிறார்கள் போலும்.

“ஒரு புது மாணவனை ஊர், பேர் விசாரிப்பது எதற்காக என்றால், சீனியர் யாராவது அதே ஊரைச் சேர்ந்தவர்களாக இருக்கக்கூடும். ஆக, இருவரும் தோழமையாகும் சாத்தியம் இருக்கிறதல்லவா! ஆனால் இப்போதெல்லாம், இந்தப் பெயர், ஊர், விசாரிப்பு கூட குறைந்து வருகிறது. அப்புறம் அடிப்பது, உதைப்பது கொடுமைப்படுத்துவது எல்லாம் பற்றி பேசவே கூடாது. காரணம், படிப்பின் சுமைதான்!’ இந்த நிலையில் இதுபோன்ற சிந்தனைகளுக்கு நேரம் எப்படிக் கிடைக்கும்?” என்று கேட்கிறார் சென்னை மருத்துவக் கல்லூரி ஹாஸ்டல் கவுன்சில் உதவிச் செயலாளரான



செல்வராஜ்.

"அண்ணாமலையில் நடந்த சம்பவம் எங்களுக்கு மிகவும் அவமானத்தை உண்டாக்கி இருக்கிறது. ஊரிலிருக்கும் எங்கள் பெற்றோர்கள் என்ன நினைப்பார்கள்? மருத்துவக்கல்லூரி ஹாஸ்டல்களில் "இப்படித்தான்" நடக்கும் போலிருக்கிறது' என்று எண்ண மாட்டார்களா?" என்று செல்வராஜின் அறைத் தோழர்கள் நம்மிடம் புலம்பினார்கள்.

அண்ணாமலையில் ராகிங் என்பது ஒரு பாரம்பரியமாகவே தொடர்ந்து வருகிறது என்று உள்நோக்கர்கள் சொல்கிறார்கள். நிர்வாகம் கடுமையாக நடவடிக்கை எடுத்தாலும், படிக்கும் மாணவர்கள் அரசியல், பணபலம் பெற்றவர்கள். ஆதலால், ஒரு கட்டத்துக்கு மேல் செயல்பட முடியாமல் நிர்வாகத்தின் கைகள் கட்டப்பட்டு விடுகின்றன. மதுரையைச் சேர்ந்த எம்.பி. ஒருவரின் (இந்திராகாந்திக்கு மிகவும் நெருக்கமாக இருந்தவர்) பேரன் அண்ணாமலையில் பொறியியல் படித்துக் கொண்டிருந்தார். அதிகபட்சமாக ராகிங்கில் ஈடுபடவே, நிர்வாகம் இரண்டு வருட காலத்துக்கு அவரை சஸ்பெண்ட் செய்தது. ஆனால் அந்த எம்.பி. தமது செல்வாக்கைப் பயன்படுத்தி சஸ்பென்ஷனை ரத்து செய்து விட்டார். பல்கலைக்கழகத்துக்கு பல விதங்களில் ஆளும் அரசியல்வாதிகளின் தயவு வேண்டியிருப்பதால் ரொம்பவும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க முடிவதில்லையாம்.

இது ஒரு பக்கம் இருக்க, சென்னையில் உள்ள மருத்துவக் கல்லூரியில் பெண்கள் ஹாஸ்டலில், சீனியர் மாணவியர் ஜூனியர்களிடம் பரதநாட்டியம் ஆடு; பாட்டுப் பாடு என்று சொல்வது தவிர துணி துவைத்துப் போடு என்றும் சொல்வார்களாம். ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில், புது மாணவர்களுக்கு என்று தனியாக புதிய பிளாக் ஒன்று வைத்திருக்கிறார்கள்.

"நான் ரொம்ப பயந்து கொண்டு வந்தது உண்மைதான். ஆனால் பயந்தபடி ஒன்றும் நடக்கவில்லை. பேர், ஊர் விசாரிக்கப் பட்டதன் காரணமாக எங்கள் ஊர் சீனியருடன் தோழமை ஏற்பட்டு இருக்கிறது. மேலும் நாங்கள் செய்யப் போகும் டாக்டர் தொழிலில், படிக்கும்போது மட்டுமல்ல, தொழில் செய்யும் போதும் பலரின் தொடர்பைத் தொடர வேண்டியிருக்கும். அப்படிப்பட்ட தொடர்பு, தொழிலில் மேன்மையை உண்டாக்கும். அதற்கு கல்லூரியில் அடித்தளம் போடுவது நல்லதுதானே!" என்கிறார் கடலூரிலிருந்து, எம்.எம்.சி.யில் முதல் வருட மாணவனாகச் சேர்ந்திருக்கும் விக்னேஷ்.

எல்லாத் தொழில் கல்லூரிகளிலும் வருட ஆரம்பத்தில் கூட்டம் கூட்டி, ராகிங் பற்றி கடுமையாக எச்சரிக்கை விடுக்கிறார்கள். தனியார் கல்லூரிகளில், அரசு கல்லூரிகளை விட, கண்டிப்பு அதிகம் என்பதால் அங்கு ராகிங் பற்றி மூச்சு விடக்கூடாது. "எங்கள் கல்லூரியில், எந்த மாணவனாவது ராகிங் செய்யப்பட்டதாகப் புகார் கொடுத்தால், விசாரித்து, தக்க நடவடிக்கை எடுக்கிறோம். குற்றம்சாட்டப்பட்ட மாணவனின் பின்பலம் என்னவாக இருந்தாலும் நானே பளாரென்று அறைந்து விடுவேன்!" என்கிறார் சென்னை மருத்துவக் கல்லூரியின் டீன் டாக்டர் வி. பி. நாராயணன்.


"அந்தக் காலத்தில் நான் ஸ்டான்லியில் படிக்கும் போதும் ராகிங் இருந்தது. ஆனால் அது 'என்ஜாய்' பண்ணும் விதத்தில் இருந்தது. மாறாக உடல்ரீதியாகவோ, மனரீதியாகவோ ஒருவனை கொடுமைப்படுத்துவது தான் ராகிங் என்றால் அதைக் கட்டாயம் ஒழிக்க வேண்டும்" என்றும் சொன்னார் அவர்.


பொதுவாகவே எல்லா தொழிற்கல்லூரி ஹாஸ்டல்களிலும் கல்வியாண்டின் துவக்க சமயத்தில் முதல் நான்கைந்து மாதங்கள் ராகிங் என்ற பெயரில், 'விசாரிப்புகள்' நிகழும். எடுபிடி பையன்கள் போல ஆட்டி வைக்கப்படுவார்கள் ஜூனியர்கள். "இதெல்லாம் எனக்குத் தெரியுமாதலால், வெளியூரில் மருத்துவம் படிக்கும் என் பையனை ஹாஸ்டலில் சேர்க்காமல் சொந்தக்காரர் வீட்டில் தங்க வைத்திருக்கிறேன்" என்று சொன்னார் மயிலாப்பூரைச் சேர்ந்த சதாசிவம்.

"இந்தப் பரபரப்புகள் அடங்கும் வரை அரசியல்வாதிகளும், பத்திரிகைகளும் இதைப் பற்றி பேசியும், எழுதியும் வருவார்கள். அவ்வளவுதான். மற்றபடி, இப்போது என்ன நடக்கிறதோ, அவை தொடர்ந்து கல்லூரிகளில் நடந்து கொண்டுதான் இருக்கும். எல்லைமீறாமல் கண்காணிக்க வேண்டியது எங்கள் பொறுப்பு. இதை யாரும் சட்டம் போட்டுத் தடுக்க முடியாது!" என்று யதார்த்தமாகச் சொன்னார்கள், மருத்துவக் கல்லூரிப் பேராசிரியர்கள் சிலர்.

— தில்லப்பா





பக்தி
கோவிலுக்கெல்லாம் போக ஆரம்பிச்சுட்டியா? எந்த சாமி பிரசாதம்?
சின்னசாமி ஸ்டேடியப் பிரசாதம். அழகிகள் நடந்து வந்த இடத்திலிருந்து ஸ்பெஷலாகத் திரட்டி வந்த அவர்களுடைய காலடி மண்!
ஆகா, என்ன பாக்கியம்! என்ன பாக்கியம்
தூக்கம்
அழகிகள் அணிவகுப்பைப் பிரதமர் கௌடா பார்த்துக் கொண்டிருந்த போதே தூங்கி விட்டாராம்
டூப்விடாதே. தூங்கியிருக்க மாட்டார். அப்படியே தூங்கியிருந்தாலும் இந்தக் கண்ராவியையெல்லாம் வயசான காலத்திலே பார்த்துத் தொலைப்பானேன்னு கண்ணை மூடிக்கொண்டிருந்திருப்பார்
அழகின் சிரிப்பு
என்னப்பா இது? பஜ்ஜி இவ்வளவு நீளம்?
மாரடி ஜென்ரோ பஜ்ஜி!
அப்படீன்னா?


ஹி! ஹி! அழகிய ஜோக்ஸ்! _யோகேஷ்
மயக்கமா? தயக்கமா?
சார்! சார் அழகிப் போட்டியெல்லாம் முடிஞ்சு ஐந்து நாளாச்சு! அழகிலே மயங்க வேண்டியது தான். அதுக்குன்னு இத்தனை நாளா? எழுந்திருந்து வீட்டுக்குப் போங்க சார்
வைரத்தை வைரத்தால்...
அழகிப் போட்டி பார்க்க முதல் வகுப்பு டயமெண்ட் கிளப் டிக்கெட் விலை இருபத்தையாயிரம்
ஏன் இத்தனை வருத்தப் படறே? உன்னாலே பார்க்கப் போக முடியலையா?
புருஷன் என் டயமெண்ட் தோட்டைக் கிளப்பிக்கிட்டு போய் விட்டார்_டயமெண்ட் கிளப் டிக்கெட் வாங்க!
ஆறு அடி மூணு அங்குல உயர இத்தாலிய அழகியின் ஞாபகமாக ஸ்பெஷல் நீள பஜ்ஜி!



• அவுட்டோரில் படமெடுக்கும் பயிற்சியாளர்கள்...



போட்டோ எடுப்பது ரொம்ப ஈஸி!

சினிமா கேமராமேனாக வர விரும்புபவர்கள் திரைப்படக் கல்லூரியில் சேர்ந்து கேமரா பற்றிய விஷயங்களையும் எப்படி படம் பிடிப்பது என்பது பற்றியும் கற்றுக் கொள்ள முடியும். ஆனால் சாதாரண ஸ்டில் கேமராவில் படம் எடுக்க விரும்புகிறவர்கள் - ஸ்டில் போட்டோகிராபராகத் தங்கள் வாழ்க்கையைத் துவங்க ஆசைப்படுபவர்கள் கற்றுக் கொள்வதற்கு ஏதேனும் வசதியிருக்கிறதா?

"எனக்குத் தெரிந்து, ஹைதராபாதிலுள்ள ஜவாஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில், பி.எஸ்ஸி. பட்ட வகுப்பில் போட்டோகிராஃபியும் ஒரு துணைப்பாடமாக இருக்கிறது. ஆனால், செய்முறைகளுக்குத் தேவையான பிலிம், கேமரா, லேப் வசதிகள் முழுமையாக இல்லாததால் அங்கும் போட்டோகிராஃபியை வெறும் தியரியாகத்தான் படிக்கிறார்களே தவிர, செய்முறையில் கற்றுத் தெரிந்து கொள்கிற வாய்ப்பு அவர்களுக்கும் முழுமையாக இல்லை!" என்கிறார், சென்னையிலுள்ள 'இன்ஸ்டிடியூட் ஆப் இமேஜிங் டெக்னாலஜி'யின் டைரக்டர் கே. பொன்னுசாமி.

"நானும் எனது வாழ்க்கையை ஒரு போட்டோகிராபராகத்தான் துவங்கினேன். அதனால் குருகுலவாசம் மாதிரி பல போட்டோகிராபர்களிடம் போய் கற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. இப்படிக் கற்றுக் கொள்ள வருகிற புதியவர்களை சீனியர் போட்டோகிராபர்கள் எப்படி நடத்துகிறார்கள்

தெரியுமா? ஓர் எடுபிடியைப் போலத்தான் நடத்துவார்கள். போட்டோ எடுப்பது பெரிய பிரம்ம ரகசியம் மாதிரி, அவ்வளவு சுலபத்தில் சொல்லிக் கொடுத்துவிட மாட்டார்கள். கேமராவில் பிலிமை லோட் செய்வது, பிறகு படம் எடுக்கப்பட்ட கேமராவிலிருந்து பிலிமைச் சுருட்டி வெளியே எடுப்பது ஆகியவற்றைக் கற்றுக் கொள்வதற்கே பல மாதங்கள் பிடிக்கும். இப்படி வருடக்கணக்கில் காத்திருந்துதான் ஒருவன் போட்டோ எடுப்பதைக் கற்றுக் கொள்ள முடியும்!

"இந்த நிலை மாற வேண்டும் என்று நினைத்தேன். இதற்காக நமது பல்கலைக் கழகங்களில் கூட முயற்சி செய்தேன். முடியவில்லை. பிறகுதான் கோனிகா பிலிம் மற்றும் சாதனங்களை இந்தியாவில் மொத்த விநியோகம் செய்யும் நிப்பான் குரூப் நிறுவனத்தை அணுகினேன். அவர்களின் பக்கபலத்தோடுதான் 'இன்ஸ்டிடியூட் ஆப் இமேஜிங் டெக்னாலஜி' என்கிற போட்டோகிராபி பற்றிச் சொல்லித் தரும் இந்தப் பயிற்சிப் பள்ளி அண்மையில் துவங்கப்பட்டிருக்கிறது!'' என்கிறார் பொன்னுசாமி.

"வெறும் மூன்று வாரப் பயிற்சியில் போட்டோகிராபி பற்றிக் கற்றுக் கொண்டுவிட முடியுமா என்ன?"

"ஒரு போட்டோகிராபரிடம் போய் மூன்றாண்டு காலம் வேலை செய்து கற்றுக் கொள்கிற அடிப்படை விஷயங்களை நாங்கள் மூன்றே வாரங்களில் கற்றுத் தந்து விடுகிறோம். அதன் பிறகு அவரவர் கற்பனைத் திறமையைப் பயன்படுத்தி முன்னேற வேண்டியது அவரவர் பொறுப்புதான்."

"லேப்களில் வேலை செய்வதற்கும் உங்கள் பயிற்சி உபயோகமாக இருக்கிறதா?"

"நிச்சயமாக. பலர் அப்படிப்பட்ட நோக்கத்தோடும் இந்தப் பயிற்சிக்கு வருகிறார்கள். ஏனெனில் இந்தியா முழுமையும் ஆண்டொன்றுக்கு நான்கு கோடி பிலிம் ரோல்களில் படம் எடுக்கப்படுகின்றன. 120 கோடி பிரிண்டுகள் போடப்படுகின்றன. இது இன்னும் சில ஆண்டுகளில் இரண்டு மடங்காக அதிகரிக்கும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அப்போது ஏகப்பட்ட சிறிய லேப்புகள் உருவாகும். அவற்றில் பிரிண்ட் போடுவதற்கான கம்ப்யூட்டர் உபகரணங்களும் எக்கச்சக்கமாக உபயோகப்படும். இந்த நிலையில் அவற்றில் வேலை செய்வதற்கு நிறைய டெக்னீஷியன்களும் தேவைப்படுவார்கள் என்பதால், வேலை வாய்ப்புகளும் அதிகரிக்கும். எனவேதான் அப்படிப்பட்ட லேப்களில் வேலை செய்வதற்குத் தேவையான அடிப்படை விஷயங்களையும் கற்றுத் தருகிறோம். அதனால் ஏற்கெனவே லேப் வைத்திருப்பவர்கள் கூட இங்கே பயிற்சி



• பிரிண்ட் போடுவது எப்படி...

பெற வருகிறார்கள்.

"வெறும் மூன்று வாரப் பயிற்சிக்கே எட்டாயிரம் ரூபாய் கட்டணம் என்பது மிக அதிகமில்லையா?"

"வேறு வழியில்லை. காரணம் விஷயம் அப்படிப்பட்டது. நாங்கள் பத்து அல்லது பன்னிரண்டு பேருக்கு மேல் பயிற்சிக்குச் சேர்த்துக் கொள்வதில்லை. அப்போதுதானே ஒவ்வொரு பயிற்சியாளரிடமும் தனிப்பட்ட கவனம் செலுத்த முடியும்! அதோடு அவர்கள் படமெடுத்துப் பழகுவதற்கான கேமராவையும் நாங்களே தருகிறோம். கூடவே பிலிம் ரோல்கள். அவர்கள் எடுத்த பிலிம் ரோல்களை அவர்களே டெவலப் செய்து பிரிண்ட் போடுவதற்கான லேப் உபகரணங்கள் என்று சகலமானதையும் நாங்களே தருகிறோம்.

"இவை மட்டுமல்ல; இன்டோரில் - ஸ்டுடியோவில் லைட்டுகள் அமைத்து எப்படிப் படமெடுப்பது என்பதைச் சொல்லித் தருவதற்காக, மாடல் அழகிகளையும் நாங்கள்



• ஸ்டுடியோவுக்குள் மாடல் அழகியைப் படமெடுக்க....



போட்டோ எடுக்க சில டிப்ஸ்!

போட்டோ எடுப்பதை ஒரு தொழிலாக அல்லாமல், பிக்னிக் – சுற்றுலாப் பயணம் போகிறபோதும் பொழுதுபோக்காகவும் எடுத்துக் கொண்டிருக்கிற அமெச்சூர் போட்டோகிராபர்களுக்கு 'இன்ஸ்டிடியூட் ஆப் இமேஜிங் டெக்னாலஜி'யின் டைரக்டர் கே. பொன்னுசாமி தரும் சில டிப்ஸ் :

● 100 ASA, 200 ASA, 400 ASA என்று பிலிம்களில் பல வகைகள் உண்டு. எனவே நீங்கள் எந்த பிலிமை வாங்கி உபயோகிக்கிறீர்களோ, அதற்குத் தகுந்த மாதிரி உங்கள் கேமராவிலும் 100 ASA, 200 ASA என்று சரிசெய்து கொள்ளவும். அப்பர்ச்சரையும் சரிசெய்து கொள்ளவும்.

● நல்ல சூரிய வெளிச்சத்தில் எடுக்கும்போது, ஷட்டர் ஸ்பீட் 1/125லும் மேகம் சூழ்ந்து இருக்கிறபோது 1/60லும் இருக்கும்படி பார்த்துக் கொள்ளவும்.

● உங்கள் மனைவியையோ அல்லது காதலியையோ நல்ல சூரிய வெளிச்சத்தில் நிறுத்தி எடுத்தாலும் கண் போன்ற இடங்களில் நிழல் விழும். எனவே அது மாதிரி சமயங்களில் பிளாஷ் உபயோகிக்கவும். அப்போது நிழல் விழாது.

● நீங்கள் எந்தப் பொருளை அல்லது உருவத்தைப் படமெடுத்தாலும் குறைந்தபட்சம் நான்கடி தூரமாவது தள்ளியிருந்து ஃபோகஸ் செய்து எடுக்கவும்.

● நீங்கள் எதைப் படமெடுத்தாலும் அது கேமரா பிரேமின் நடுவில் வருமாறு பார்த்துக் கொள்ளவும். இல்லையெனில் உருவத்தின் அல்லது பொருளின் தலைப்பாகமோ வேறு ஒரு பகுதியோ போட்டோவில் வராமல் போக வாய்ப்புண்டு.

● நல்ல சூரிய வெளிச்சத்தில் படமெடுக்கும்போது ஷட்டர் ஸ்பீடை 1/125-ல் வைத்திருப்பீர்கள். திடீரென்று மேகம் சூழ்ந்து விடும். அப்போது ஷட்டர் ஸ்பீடை 1/60-க்கு மாற்ற மறந்து விடக்கூடாது.

● நீங்கள் எதைப் படமெடுக்க விரும்புகிறீர்களோ அதைச் சுற்றி தேவையில்லாத பொருள்கள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இல்லையெனில் நீங்கள் படமெடுக்க விரும்பிய பொருள் முக்கியத்துவமிழந்து, தேவையில்லாத பொருள்கள் படத்தில் பளிச்சென்று வந்துவிடும்.

● நீங்கள் எதைப் படமெடுக்க விரும்புகிறீர்களோ அதற்குத் தகுந்தபடி கேமராவை உயரவாக்கிலோ, அகலவாக்கிலோ மாற்றிப் படமெடுக்கவும்.

● படமெடுக்க விரும்பும் பொருள் மீது வெளிச்சம் எப்படிப்படுகிறது என்பதை உறுதிசெய்து கொள்ளவும். முன்பக்கமிருந்தோ அல்லது பக்கவாட்டிலிருந்தோ வெளிச்சம் படுகிறபோது படம் சிறப்பாக அமையும். பின்புற வெளிச்சத்தில் படமெடுப்ப தெல்லாம் நமக்குத் தேவையில்லாத விஷயம். படம் சரியாக வராது.

● நடுவில் கதவு, இருபுறமும் வெள்ளையடிக்கப்பட்ட சுவர் என்றால், நீங்கள் படமெடுக்க விரும்பும் நபரை கதவுக்கு முன்னால் நிறுத்திப் படமெடுக்காதீர்கள். படம் சரியாக இருக்காது.

● ஒருவரை நிறுத்திப் படமெடுக்கிற போது, ஷட்டர் ஸ்பீடு, பிரேம், ஃபோகஸிங் எல்லாவற்றையும் சரி செய்து கொண்டபிறகு அவரை 'ஸ்மைல் ப்ளீஸ்' என்று சொல்லுங்கள். முதலில் 'ஸ்மைல் ப்ளீஸ்' என்று சொல்லிவிட்டு, பிறகு எல்லாவற்றையும் சரிசெய்ய ஆரம்பித்தீர்களானால் அவர் வெறுத்துப் போய் விடுவார். அதே போல் ஒருவரைச் சிரமப்படுத்துகிற மாதிரியான போஸ்களை செய்யச் சொல்லக் கூடாது.

அழைத்து வருகிறோம். அவ்வப்போது உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலிருந்து, பல்வேறு புகைப்பட நிபுணர்களையும் அழைத்து வந்து வகுப்புகள் எடுக்க வைக்கிறோம் என்பதால் செலவுகளைத் தவிர்க்க முடியாது!

"இருந்தபோதிலும் இன்னும் குறைவான செலவில் சொல்லித்தர இயலுமா என்று யோசித்தோம். அதன் விளைவாகத்தான் பகுதி நேரமாகச் (மாலை ஆறு மணியிலிருந்து எட்டு மணி வரை) சொல்லித் தரும் இரண்டு வாரப் பயிற்சி ஒன்றையும் ஆரம்பித்திருக்கிறோம்!"

"போட்டோகிராபி என்றால், ஸ்டில் போட்டோகிராபி, பத்திரிகைகளுக்கு எடுக்கிற நியூஸ் போட்டோகிராபி, தொழிலகங்களுக்காக எடுக்கிற இன்டஸ்ட்ரியல் போட்டோகிராபி மற்றும் பொருள்களை விளம்பரப்படுத்துவதற்காக எடுக்கிற விளம்பரப் புகைப்படங்கள் என்று பல வகைகள் இருக்கின்றனவே! அவற்றையெல்லாம் இந்தக் குறுகிய காலப் பயிற்சியில் சொல்லித் தந்துவிட முடிகிறதா என்ன?"

"அதாவது, ஒரு புகைப்படம் எடுக்கிறபோது அதை எந்த நோக்கத்துக்காக எடுக்கிறோம்? அந்தப் புகைப்படத்தில் எதற்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும்? பேக்கிரவுண்டு எப்படி இருக்க வேண்டும்? நாம் கொடுக்கிற லைட்டிங் நமது நோக்கத்தைப் பூர்த்தி செய்கிற அளவில் எப்படி இருக்க வேண்டும்? – இதுபோன்ற அடிப்படை விஷயங்களைத்தான் நாங்கள் சொல்லித் தர முடியும். இந்தக் குறுகிய காலப் பயிற்சியின் நோக்கமும் அதுதான். அதன் பிறகு நான் முன்பே சொன்ன மாதிரி, அவரவர் கற்பனைத் திறமையைப் பொறுத்துத்தான் சிறந்த போட்டோகிராபர்களாக மிளிர முடியும்!" என்கிறார் பொன்னுசாமி.

(மேலட்டையில் பிரசுரமாகியிருக்கும் வண்ணப்படத்தை மின்னல் வேகத்தில் எடுத்து, டெவலப் செய்து, பிரிண்ட் போட்டுக் கொடுத்தவர்கள், இப்போது 'இன்ஸ்டிடியூட் ஆப் இமேஜிங் டெக்னாலஜி'யில் பயிற்சி பெறுபவர்கள்தாம்!)

- பிரின்ஸ்

துண்டுக் காகிதம் தூண்டிய நெருப்பு!

"உன் வாழ்க்கையில் இந்தக் கவிதை ஒரு திருப்புமுனையாக அமையும்!"

– கவிஞர் மு. மேத்தா படித்துப் பார்த்துவிட்டுச் சொன்னபோது அந்த இளைஞருக்கு அதன் முழு அர்த்தம் புரியவில்லை. கவிஞருக்கு நன்றி சொல்லிவிட்டு, தான் எழுதிய அந்தக் கவிதையைக் கல்கி முகவரிக்குத் தபாலில் சேர்த்து விட்டு, அத்தோடு மறந்து போனார்.

"போட்டியில் என் கவிதை முதல் பரிசை வென்றிருக்கிறது என்று தெரிந்தபோது முதலில் எனக்கு நம்பிக்கையே வரவில்லை. என் எழுத்துக்களை அச்சில் பார்த்தபோதுதான் முதன் முதலாக என் மீதே எனக்கு நம்பிக்கை வந்தது" என்கிறார் இருபத்தெட்டு வயது இளைஞர் இரா. பச்சியப்பன்.

கல்கி – அனுபவ் இணைந்து நடத்திய சுற்றுச்சூழல் பாதுகாப்புக் கவிதைப் போட்டியில் முதல் பரிசு பெற்றவர். தம் 'காற்றுக்கு உயிர் போகிறது' கவிதை மூலம் ஆயிரக்கணக்கான வாசகர்களின் நெஞ்சைத் தொட்டவர்.



• பச்சியப்பன்

"பிரசுரமாகும் என் முதல் கவிதை இது தான். முதல் கவிதையே பரிசுக் கவிதையாக வும் அமைந்தது என் அதிர்ஷ்டம்" என்று சொல்லும் பச்சியப்பன், வேலூரை அடுத்த பெரிய ஐயம்பாளையம் என்கிற சிறிய கிராமத் தைச் சேர்ந்தவர்.

விவசாயக் குடும்பம். கவிதை வாசனை அல்ல; கல்வி வாசனையைக் கூட முழுக்க நுகர முடியாத ஏழைமை. அத னால்தான் பத்தாம் வகுப் போடு படிப்பைப் பாதியில் நிறுத்திவிட வேண்டி வந்தது என்கிறார்.

"என் தந்தைக்கு இரண்டு ஏக்கர் நிலம் இருக்கிறது. குடும் பத்தின் ஒரே சொத்து அது தான். வருமானமும் அதிலி ருந்து வருவதுதான். அந்த வருமானம், மூன்று தம்பிகள் ஒரு தங்கை, நான், பெற்றோர் உள்ளிட்ட எங்கள் ஏழு பேரின் சாப்பாட்டுக்கு மட்டுமே போதுமானது. ஆகவே பத்தாவதோடு என் படிப்பு தடை பட்டு, நானும் விவசாயம் பார்க்க ஆரம்பித் தேன்.

"ஆனால் படிக்கிற ஆசை மட்டும் என்னை விடாமல் அரித்துக் கொண்டே இருந்தது. அந்த என் ஆசை நிறைவேற ஐந்து வருடங்கள் காத்திருக்க நேர்ந்தது" என்கிறார்.

விவசாயம் பார்த்த நேரம் போக எஞ்சி யிருந்த சமயத்தில் கிணறு வெட்டுவது, கரும்பு வயல்களில் அறுவடைப் பணிகளுக்குக் கூலி யாகப் போவது என்று உழைத்து, பணம் சேமித்து ஐந்து வருடங்கள் கழித்து, வீட்டி லிருந்தபடியே +2 எழுதித் தேறியிருக்கிறார். தொடர்ந்து பி.ஏ. தமிழ் இலக்கியம் – வேலூர் கல்லூரியில். முடித்து விட்டு சென்னை வந்து மாநிலக் கல்லூரியில் எம்.ஏ. இலக்கியம். அதை யும் முடித்து விட்டு இப்போது எம்.ஃபில் பண் ணிக் கொண்டிருக்கிறார் பச்சியப்பன்.

"வாகனப் புகையும் தொழிற்சாலைக் கழிவுகளும் சூழல் பற்றிய பிரக்ஞை இல்லாத மனிதர்களுமாக, இந்தச் சென்னைதான் என் கவிதைக்கு கரு தந்தது!"

பச்சியப்பனுக்குக் கவிதை மேல் காதல் வந்ததே ஒரு தனிக்கதை. ஒரு துண்டுக்காகிதம் மூட்டிவிட்ட நெருப்பு அது.

"எங்கள் ஊரில் விவசாயம் பார்த்துக் கொண்டிருந்தேன் என்று சொன்னேனல்லவா? அப்போது ஒருநாள் வீடு திரும்பிக் கொண் டிருந்தபோது, காற்றில் புரண்டு வந்த ஒரு தாள் என் கையில் சிக்கியது. அது ஒரு பத்திரிகை யிலிருந்து கிழிக்கப்பட்ட தாள். உத்தேசம் ஏது மில்லாமல் அதைப் படிக்கத் தொடங்கினேன்...

'மழை நின்று விட்ட பிறகு
மணல் பார்க்க வருவார்கள்
பிள்ளை பிறந்து விட்ட பிறகு
பேர் வைக்க வருவார்கள்....'

– இப்படித் தொடங்கி, கவிதை வடிவில் ஒரு கதை விரிந்திருந்தது அதில். படிக்கப் படிக்க, அந்தத் தமிழ் நடையும் சொற்களின் அணிவகுப்பு நேர்த்தியும் என்னைக் கிரக்கம் கொள்ள வைத்தன. இது என்ன கதை? அல் லது கவிதை? யார் எழுதியது? எந்தப் பத்திரி கையில் வந்தது? என்று தேடி, நூலகத்துக்குப் போனேன்.


"இது ஓர் எதிர்பாராத ஒற்றுமையாக அமைந்து விட்டது பாருங்கள். முதல் முதலா கக் கவிதை பற்றி என்னை யோசிக்க வைத்த அந்தக் கவிதை, கல்கியில் வந்ததுதான். அப் போது கல்கியில் வைரமுத்து எழுதிக் கொண் டிருந்த 'சிகரங்களை நோக்கி' என்கிற தொட ரின் ஒரு பகுதி இடம்பெற்றிருந்த தாள்தான் அது!"

இந்தச் சம்பவத்திற்குப் பிறகுதான் பச்சி யப்பன் கவிதைகளை, கவிதைப் புத்தகங் களைத் தேடிப் படிக்க ஆரம்பித்திருக்கிறார். வைரமுத்து, மு. மேத்தா, அப்துல்ரகுமான், ஞானக்கூத்தன், நீலமணி என்று பல கவிஞர் களின் படைப்புக்களைப் படிக்கப் படிக்க, தாமும் எழுத வேண்டும் என்கிற ஆர்வம் வந்ததாகச் சொல்கிறார்.

"அப்போதெல்லாம் நிறைய எழுதுவேன். ஆனால் பத்திரிகைகளுக்கு அனுப்பவோ, நண் பர்களிடம் காட்டவோ கூட தைரியம் கிடை யாது. எழுதி எழுதி நானே வைத்துக் கொள் வேன். என் பெற்றோருக்கு நான் என்ன எழுது கிறேன் என்று கூடத் தெரியாது. 'ஏதோ கிறுக் கறான்' என்பார்கள். சமயத்தில் இதை ஒரு குற்றமாகக் கூடப் பார்ப்பார்கள். எழுதுகிற நேரத்திலும் வேலை பார்த்தால் நாலு காசு கிடைக்குமே!"

எழுத்தைப் பொறுத்தவரை தமக்கொரு பாதை போட்டுக் கொடுத்தவர் மு. மேத்தா தான் என்கிறார் பச்சியப்பன்.

"ஊரில் இருக்கும்போதே நான் விரும்பிப்



அவளும் உலக அழகிகளும்!



தீய்ந்து கருகிய
பள்ளிக்கூட கனவுகள்

நுனிபிளந்த கூந்தலில்
செம்பட்டை தீட்டிய வாழ்க்கை

வறுமைச் சுழியில் மூச்சுத்திணறி
பிணமாய் ஒதுங்கிய புன்னகை

எல்லாக் கேள்வியும்
கொக்கியாய் இழுக்க
புரியாது மிரளும்
அர்த்தம் தொலைத்த விழிகள்

வியர்வையில் நைந்த
மடிப்புக் கிழிசலில்தான்
இருப்பின் மிச்சம்...

தொந்தி பெருத்த
பண்ணையின் வெப்ப மூச்சால்
சாம்பலாய் உதிர்ந்தன, நாளைகள்
எல்லாம்...

பண்ணை
தலைவரானார்
எங்கள் சேரிக்கு
உ.பி. வந்தது!

வெளிச்ச மேடையில்
அழகிகளின் அணிவகுப்பு நடக்கிறது..
இருட்டுச் சாக்கடையில்
அலங்கோலம் நெளிகிறது!

- இரா. பச்சியப்பன்

படித்த கவிஞர் அவர். அவரிடமே நான் மாணவனாகச் சேர முடிந்தது என் அதிர்ஷ்டம்" என்கிறார்.

மாநிலக் கல்லூரியில் தமிழ்த் துறைப் பேராசிரியராக இருப்பவர் மேத்தா. "அவரது மனம் கவர்ந்த மாணவர்களுள் நானும் ஒருவன்" என்று பெருமிதத்துடன் குறிப்பிடுகிறார்.

"மேத்தா எனக்குச் செய்திருக்கிற உதவி கொஞ்சநஞ்சமல்ல. அவரது கவிதைகளை, அவர் சொல்லச் சொல்ல நான்தான் எழுதுவேன். இந்தப் பயிற்சி, மொழியை எப்படிக் கையாளுவது என்பதை எனக்குக் கற்றுத் தந்தது. தவிர, அவர் சொற்களை மாற்றி மாற்றிப் போட்டுக் கவிதையை மெருகேற்றுவதைப் பக்கத்திலிருந்து பார்ப்பேன். இது எத்தகைய ஒரு வாய்ப்பு! என் எழுத்து முயற்சிகளுக்கு இது நல்ல அடித்தளமாக அமைந்தது" என்று சொல்லும் பச்சியப்பன், இன்னொருவரையும் நன்றியுடன் நினைவுகூர்கிறார்.

"கவிஞர் செல்வகணபதி. இவரும் என் பேராசிரியர்தான். எனக்குப் படிக்கிற ஆசையை அதிகம் தூண்டிவிட்டு, நல்ல நூல்களை அடையாளம் காட்டினார். 'தினமும் ஒரு புத்தகம் படி' என்பார். விடாமல் இன்னும் அதைத்தான் செய்து கொண்டிருக்கிறேன்," என்கிறார்.

'காற்றுக்கு உயிர் போகிறது' - கவிதையும் அதன் வெம்மையும் தகிப்பும் வெறும் கற்பனையில் வந்து விடக்கூடியதல்ல. 'வரும் சந்ததிகளின் பாதையில் மலம் கழித்துவிட்டுப் போக மனசு வந்தது எப்படி?' போன்ற வரிகள், சுற்றுச்சூழல் கேட்டினால் மிகத் தீவிரமாக பாதிக்கப்பட்டாலொழிய ஒருவருக்கு எழுதச் சாத்தியமில்லை.

ஆனால், பச்சைப் பசுமையுடன் குளுகுளு ஜவ்வாது மலைச்சாரலில், சுத்தமான காற்றோடும் சுத்தமான மனிதர்களோடும் மட்டுமே புழங்கியிருக்கும் பச்சியப்பனுக்கு எப்படி இப்படியொரு கவிதை எழுத முடிந்தது?

"என் சென்னை அனுபவங்கள்தான் காரணம். நான் சென்னை வந்த புதிதில் ஈக்காடுதாங்கல் அம்பாள் நகரில் ஒரு வீட்டில் தங்கியிருந்தேன். மழைக்காலம் வந்து விட்டால் போதும். வீட்டுக்குள் முழங்கால் அளவுக்குத் தண்ணீர் வந்துவிடும்! தெருவெங்கும் சாக்கடை. கொசுக்கள். துர்நாற்றம்! சகிக்காது. கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்தால் அதில் சிறு சிறு புழுக்கள் நெளியும்! குமட்டிக் கொண்டு வரும்! என் ஊரில் எழிலைத் தவிர வேறெதையும் நான் கண்டது கிடையாது! ஆனால் இதில் சோகம் என்ன தெரியுமா? என் ஊர் எத்தனை அழகானது, சுத்தமானது என்பதெல்லாம் நான் சென்னைக்கு வந்த பின்தான் விளங்கியது!


"வாகனப் புகையும் தொழிற்சாலைக் கழிவுகளும் சூழல் பற்றிய பிரக்ஞை இல்லாத மனிதர்களுமாக, இந்தச் சென்னைதான் என் கவிதைக்கு கரு தந்தது!" என்கிறார்.

சொல்லிவிட்டுச் சற்றுத் தயங்கினார்.

"இரண்டாவது கவிதை எழுதி விட்டேன். இதற்குக் கரு பெங்களூர் கொடுத்தது!"

- ஔரங்கசீப்

படம் : பேஜர் கே. மூர்த்தி





1996 டிசம்பர் 1
தாது கார்த்திகை 16
மலர் : 55
இதழ் : 18

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



மாணவன் நாவரசு மரணம்!

மாணவன் நாவரசுவுக்கு நேர்ந்த குரூர முடிவு தமிழகத்தையே உலுக்கியிருக்கிறது. சென்னை பல்கலைக் கழகத் துணைவேந்தரின் மகனைக் காணவில்லை என்ற செய்தி இத்தனை பெரிய சோகத்தில் போய் முடியும் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை.


ராகிங் செய்யும் மாணவர்களை, தாற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ வெளியேற்றும் முழு அதிகாரம் கல்லூரிகளுக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் தரப்படும் என்று முதல்வர் கருணாநிதி அறிவித்திருக்கிறார்.

ராகிங் என்பது ஏற்கெனவே சட்டபூர்வமாகத் தடைசெய்யப்பட்டதுதான். ஆனாலும் எல்லா கல்லூரிகளிலும் மேளதாளத்துடன் அது நடைபெற்று வந்திருக்கிறது. மாணவ சமுதாயம் அதில் பெருமையுடன் ஈடுபட, ஆசிரிய பெருமக்களும் நிர்வாகத்தரப்பினரும் கண்டும் காணாமல் இருந்து வந்துள்ளனர். ராகிங் என்கிற பெயரில் செய்யப்படும் அநாகரிகம் எத்தகைய விபரீதத்தில் போய் முடியக்கூடும் என்பதை ஒரு விலைமதிப்பற்ற உயிரை பலியாக்கிய பிறகே உணர்ந்திருக்கிறோம்.

நாவரசுவின் குடும்பத்துக்கு ஆறுதல் சொல்லக்கூட வார்த்தைகள் இன்றி ஸ்தம்பித்துப் போயிருக்கிறோம்.

நடந்து முடிந்த நிகழ்ச்சியைப் படிக்கும் போது ஏற்படும் அதிர்ச்சியை சற்று ஒதுக்கி விட்டு, நாவரசுவின் மரணத்துக்குக் காரணமானவனாகக் கருதப்படுகிற ஜான் டேவிட்டின் பேரிலுள்ள குற்றச் சாட்டை ஆராய்வோம் :

சீனியரான ஜான் டேவிட், ஜூனியரான நாவரசுவைத் தமது ரெக்கார்ட் வேலைகளைச் செய்யும்படி



ஆணையிட்டிருக்கிறார் - ஆணவம்.

மறுத்த இளையவனை, தம் செருப்பை நக்கிச் சுத்தம் செய்யும்படி வற்புறுத்தியிருக்கிறார் - வக்கிரம்.

அதையும் நாவரசு செய்ய மறுக்க, தமது கராத்தே திறனைப் பிரயோகித்து அவனை வீழ்த்தியிருக்கிறார் - தற்காப்புக் கலையை துஷ்பிரயோகம் செய்யும் அயோக்கியத்தனம்.

மயங்கி விழுந்த நாவரசு, மண்டையில் விபரீதமாய் அடிபட்டு இறந்துபோக, அவன் உடலை...

- இது அனைத்தையும் மிஞ்சும் குரூரம்!

ஆணவமும், வக்கிரமும், அயோக்கியத்தனமும், குரூரமும் ஒருங்கே படைத்த ஓர் இளைஞன் உரு வாக அனுமதித்ததே இந்த சமுதாயத்துக்குத் தலைகுனிவுதான். அத்தகைய ஓர் இளைஞனுக்கு மருத்துவப் படிப்பில் இடம்தரப்பட்டது அதனினும் தலைகுனிவு அல்லவா...?

இத்தனைக்கும், பள்ளிப் பருவத்திலேயே மோசமான நடத்தைக்காக கல்விக்கூடத்திலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறான் ஜான் டேவிட்.


உயிர்காக்கும் பணியை மேற்கொள்வதற்குரிய எந்தத் தகுதியும் அற்ற ஒரு நபருக்கு, மருத்துவக் கல்லூரியில் இடம்கிடைக்க இன்றைய கல்விச் சூழல் அனுமதிக்கிறது! கல்வி, மலினமான வியாபார மாகி விட்டது இதற்கொரு காரணம் என்பதை மறுக்க முடியாது.

பிரச்னையின் ஆணிவேரான இதனைக் குறித்தே கல்வியாளர்களும் தலைவர்களும் சிந்தனை செய்ய வேண்டும். ராகிங்கைக் கட்டுப்படுத்தும் முயற்சி மட்டும் போதாது.

தேச விரோத மாநாடு!

'கருணாநிதிக்கு விடுதலைப் புலிகளிடத்திலே எப்போதுமே ஒரு தனிப் பரிவு உண்டு' என்பது பரவலான குற்றச்சாட்டு. இந்தக் குற்றச்சாட்டுக்கு வலுசேர்க்கும் விதமாக நடந்து முடிந்திருக்கிறது பாட்டாளி மக்கள் கட்சியின் ஈழத் தமிழர் பாதுகாப்பு மாநாடு.

ஈழத் தமிழர் பாதுகாப்பு மாநாடு என்பதைக் காட்டிலும் புலிகள் தலைவர் பிரபாகரன் ஆதரவு



மாநாடு என்று அதனை அழைப்பதே பொருத்தமாயிருக்கும். அந்த அளவுக்கு பிரபாகரனை ஹீரோ நிலைக்கு உயர்த்தியும் புலிகளுக்கு வெளிப்படையாக ஆதரவு தெரிவித்தும் மாநாடு நடத்தப் பட்டிருக்கிறது.

'விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பேரிலுள்ள தடை நீக்கப்பட வேண்டும்'; 'புலிகள் ஆதரவு கொள்கை அறிவிக்கப்பட வேண்டும்' என்றெல்லாம் மாநாட்டில் பேசப்பட்டிருக்கிறது. புலிகளுக்கு ஆதரவு தெரிவிக்காத பத்திரிகைகள் இந்த மேடையில் தாக்குதலுக்குள்ளாகியிருக்கின்றன.

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராம்தாஸ் பேசுகையில், 'புலிகள் ஆதரவுப் பேச்சுக்குத் தடையிருப்பதை முற்றிலும் உணர்ந்திருக்கிறோம். அந்தத் தடையை, இதோ மீறுகிறோம்; காவல் துறை என்ன நடவடிக்கை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளட்டும் என்று சவால் விட்டிருக்கிறார்.

இத்தனையையும் பார்த்தபடி காவல் துறையினர் கைகட்டிக் கொண்டிருந்ததுதான் மிகவும் உறுத்தலான விஷயம்.

கூட்டம் நடக்கையிலேயே நடவடிக்கை எடுத்தால் சட்டம் - ஒழுங்கு பிரச்னை வந்து விடக்கூடும் என்று கருதி காவல் துறை பேசாமல் இருந்திருக்கலாம்.

ஆனால், உளவுத் துறை உதவியுடன் இக் கூட்டத்தின் போக்கை முன்கூட்டியே அறிந்து முன்னெச் சரிக்கையுடன் காவல்துறை செயல்பட்டிருக்க வேண்டும். (கானடாவில் நடந்த தமிழ்மாநாட்டிலேயே ராம்தாஸ் புலி ஆதரவு பேச்சுக்கள் பேசியது யாவரும் அறிந்ததே.)

மாறாக, கூட்டம் நடந்து முடிய அனுமதித்து விட்டு, 'ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ள பேச்சுக்களை ஆராய்ந்து வருகிறோம். சட்டம் மீறப்பட்டிருந்தால் நடவடிக்கை எடுப்போம்' என்று இப்போது சாவகாசமாகச் சொல்லியிருக்கிறார் கமிஷனர் ராஜகோபாலன்!

இந்த ஆட்சியில் சட்டம் மீறப்படலாம்; மீறுவோர் உடனடியாக தண்டனை பெற மாட்டார்கள்; தேச விரோத போக்குக்கூட பொறுத்துக் கொள்ளப்படும் என்பதான மிகத் தவறான முன்னுதாரணங் களை பாட்டாளி மக்கள் கட்சி மாநாடு ஏற்படுத்தியிருக்கிறது.

இதன் மூலம் புலி ஆதரவாளர்கள் மட்டுமின்றி விடுதலைப் புலிகளே கூட துணிவு பெறுவார்கள் மீண்டும் தமிழகத்தைத் தங்கள் நிலைக்களனாக்கிக் கொண்டு இயங்கத் தொடங்குவார்கள்.

முதல்வர் விழிப்புடன் இருக்க வேண்டும்.

முதல்வர் கோப்பைக்காக நான்கு நாடுகள் பங்கேற்ற ஹாக்கி பந்தயம் தொடங்க சில நாட்கள் இருந்த நிலையில் எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் விளையாட்டுத் திடலுக்குச் சென்றிருந்தோம்.

பங்களாதேஷ் அணியினர் வந்தபாடில்லை! ஏதோ விசா பிரச்னையாம். பந்தய தினத்தன்றே வந்து நேரிடையாக களம் புகவேண்டிய கட்டாயம்.

மலேசிய அணியினரும், இந்திய அணியினரும் அவ்வப்போது பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தனர். என்றாலும் தென் ஆப்பிரிக்க அணி நம் தனி கவனிப்பைப் பெற்றது.

காரணம், அவர்களின் அசுரப் பயிற்சி. முக்கியமாக ''பெனால்டி கோல்''களைப் போடுவதில் அதிகப்படி பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தார்கள் (இப்போதெல்லாம் இவைதானே வெற்றி தோல்வியை பெரும்பாலும் நிர்ணயிக்கின்றன!)

சட்டையை அணிந்து கொண்டும், நடு நடுவே கழற்றிக் கொண்டும், அரைமணிக்கு ஒரு தடவை எல்லைக்கு ஓடிவந்து மினரல் வாட்டரைக் குடித்துக் கொண்டும், இரண்டிரண்டு பேராகவும், மொத்தக் குழுவாகவும் களத்தில் பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

''முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் ஆட்சியில்...'' என்று ஒரு செய்தி தொடங்



• மலேசிய அணியைத் தோற்கடிக்க இந்திய வீரர் தன்ராஜ் பிள்ளை இரண்டாவது கோல்போட முயற்சி செய்கிறார்...

ஜெ.வைப் புகழும் ஹாக்கி வீரர்கள்!

கினாலே அது எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதை வாசகர்கள் யூகித்து விடுவார்கள். ஆனால் இது வேறு மாதிரி. அவர் ஆட்சிக் காலத்தில் இங்கு அமைக்கப்பட்ட செயற்கை புல்வெளி ஸ்டேடியம் வானளாவ புகழப்பட்டது. லண்டனிலிருந்து வந்திருந்த டோர்னமெண்ட் டைரக்டர் பாவா சிங் "ஸ்டேடியம் என்னை மிகவும் வசீகரித்து விட்டது. இது போன்ற ஒரு ஹாக்கி ஸ்டேடியத்தை இந்தியாவில் வேறு எங்குமே பார்த்ததில்லை" என்றார்.

தென்னாப்பிரிக்க அணியினர் ஒரு படி மேலே! ''உலகிலேயே சிறந்த ஸ்டேடியம்'' என்றார் அந்த அணியின் கேப்டனான ஜாக்ஸ்டன்.

தென்னாப்பிரிக்காவின் செய்தித் தொடர்பு அதிகாரியான வான் பிலிப்ஸுடன் பேசியபோது, ''தென்னாப்பிரிக்காவைப் பொருத்தவரை ஹாக்கிக்கு எட்டாவது இடம்தான். மற்ற பல விளையாட்டுகளுக்கு அங்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். வருத்தமான விஷயம் என்னவென்றால் டர்பனில் வசிக்கும் இந்தியர்கள் கூட கிரிக்கெட்டில்தான் அதிக கவனமும் மோகமும் கொண்டிருக்கிறார்கள்...'' என்றார்.

பழங்காலத்து ஹாக்கி சாம்பியனான இந்தியாவில் இப்போது எதையும் நிச்சயமாகச் சொல்ல முடியாத நிலை. ஹிரோஷிமாவில் நடந்த ஆசிய ஹாக்கிப் போட்டியில், பங்களா தேஷ் நம்மைக் கிட்டத்தட்ட தோற்கடித்ததும், ஸ்பெய்னில் நடந்த உலகப் போட்டியின் தகுதிச் சுற்றில் மலேசிய அணியுடன் நம்மை 'ட்ரா' செய்ததும் மறக்க முடியாது.

இதில் நமது ஹாக்கி அணி அட்லாண்டா





• இந்திய வீரர்களுடன் கோச் பாஸ்கரன்...

ஒலிம்பிக்ஸில் முக்கி முனகி எட்டாவது இடத்தைப் பிடித்ததும் கசப்பான ஓர் உண்மை. இதைத் தொடர்ந்து இந்திய அணியின் முக்கிய கோச்சான செட்ரிக் டிஸோஸா தம் பதவி யிலிருந்து விலக, சமீபத்தில் நம் தமிழ்நாட்டு பாஸ்கரனுக்கு அந்தப் பொறுப்பு அளிக்கப் பட்டிருக்கிறது. மாஸ்கோ ஒலிம்பிக்ஸில் இந்தியாவை வழிநடத்தி வென்ற தங்கமான ராசிக்கை!

என்றாலும் உண்மையைச் சொல்லப் போனால் இந்த முதல்வர் கோப்பையை எந்த அணியுமே சீரியஸாக எடுத்துக் கொள்ளவில்லை என்பதே உண்மை.

"நாங்கள் இந்தப் போட்டி யில் கலந்து கொண்டதற்கு முக்கிய காரணங்கள் மூன்று. சீக்கிரமே கோலாலம்பூரில் ஹாக்கி உலகப் போட்டி யின் தகுதிச் சுற்றுகள் நடக்க இருக்கின்றன. அதற்கு ஆசிய க்ளைமேட்டி லேயே பயிற்சி பெற இந்த சென்னைச் சூழல் உதவும். தவிர இந்திய அணியின் தலைசிறந்த ஹாக்கி வீரர்களுடன் மோதவும், அவர்கள் குறைநிறைகளைத் தெரிந்து கொள்ளவும் இது நல்ல வாய்ப்பு. மேலும் எங்கள் அணியில் பல இளைஞர்கள் சமீபத்தில் சேர்க்கப்பட்டிருக் கிறார்கள். அவர்களின் திறமையைப் பரிசீலித் துப் பார்க்க, இந்த பந்தயத்தை ஓர் உரை கல்லாகப் பயன்படுத்துகிறோம்" என்றார் வான் பிலிப்ஸ்.



கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை

அமரர் கல்கி நினைவு நாள்

அமரர் கல்கி நினைவு தினத்தன்று, அவரது எழுத்தையும் பணியையும் நினைவு கூரும் வகையில் சிறப்புக் கூட்டம் நடைபெறவுள்ளது.

நாள்: **5.12.96**

இடம்: **ஸ்ரீநிவாஸ சாஸ்திரி அரங்கம், லஸ், மயிலாப்பூர், சென்னை -4.**

நேரம்: **மாலை ஆறு மணி.**

தலைமை: **மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. க.அன்பழகன்**

சிறப்புரை: **திரு. அவ்வை நடராஜன் – அமரர் கல்கியின் நகைச்சுவை;**

திருமதி சுமதி– அமரர் கல்கியின் பெண் விடுதலை சிந்தனைகள்.

வில்லுப்பாட்டு: **திரு. சுப்பு ஆறுமுகம் குழுவினரின் 'பாரதி வந்தார்!'**

கல்கி அன்பர்களையும் ரசிகர்களையும் அன்புடன் அழைக்கிறோம்.

தென்னாப்ரிக்க ஒலிம்பிக் ஹாக்கி அணியின் கேப்டன், உதவி கேப்டன் ஆகியோரெல்லாம் இந்தப் பந்தயத்துக்கு வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. நம் அணியின் ஸ்டாரான தன்ராஜ் பிள்ளை கூட போட்டிக்கு முதல் நாள் வரை வரவில்லை - பிரான்ஸ் நாட்டில் ஏதோ லீக் பந்தயமாம்.

அசைக்க முடியாத இடத்தை ஹாக்கியில் பெற்றிருந்தது இந்தியா. "1976-க்கு பிறகு நாம் ஹாக்கியில் பின்னடைந்து விட்டோம். இதற்கு முக்கிய காரணம், உலக அரங்கில் அறிமுகப் படுத்தப்பட்ட செயற்கைப் புல்வெளிதான். இதில் ஆட நிறைய வேகமும் பயிற்சியும் தேவை. நம் நாட்டில் மிகக் குறைந்த அளவிலேயே இதுபோன்ற மைதானங்கள் இருக்கின்றன" என்று கூறினாலும் பாஸ்கரன் இந்திய அணியைப் பற்றி நம்பிக்கை தெரிவித்தார். சமீபத்தில் "ஆஃப் சைட் விதி" வேறு தளர்த்தப்பட்டிருப்பதால், சற்று மாறு பட்ட கோணத்தில் விளையாட பயிற்சி அளித்துக் கொண்டிருந்தார்.

பல்வேறு சர்வதேச ஹாக்கி போட்டிகளில் கடந்த ஆண்டு வெற்றி கண்ட நாடுகள், அடுத்த மாதம் நடக்கவிருக்கும் சேம்பியன்ஷிப் கோப்பை பந்தயங்களில் கலந்து கொள்ள அனுமதியுண்டு. இந்திய ஹாக்கி அணிக்கும் இதில் நிச்சயம் இடம் உண்டு - போட்டிகள் நடைபெற இருப்பது இம்முறை இந்தியாவில் என்பதால்!

போதிய பரிசுத் தொகை, ஸ்பான்சர்கள், மக்கள் ஆதரவு ஆகியவையும் இருந்தால் இந்திய ஹாக்கி அணி பழைய புகழை அடைய வாய்ப்பு உண்டு. தென்னாப்பிரிக்க அணியில் கூட பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியவர்கள் கணிசமான அளவில் உண்டு. அரசு ஆதரவும் இல்லை என்று ஆகிவிட ஸ்பான்சர்களின் உதவியுடன்தான் அவர்களால் இங்கு வர முடிந்திருக்கிறது.

- ஜி.எஸ்.எஸ்.

படங்கள்: சாரி



சின்னச் சின்ன வாழ்க்கைச் சித்திரங்கள்!

எந்த ஒரு படைப்பு, படித்துமுடித்துச் சில நாட்களாகியுங்கூட மனதிற்குள் சுற்றிச் சுற்றி வந்து ரீங்காரஞ்செய்கிறதோ அது உன்னதமான படைப்பு. இந்திராபார்த்தசாரதியின், 'அவன் என் மனைவி' என்ற சிறுகதைத் தொகுப்பில் அமைந்த 'அற்றது பற்றெனில்' என்ற கதை.. அற்புதமான வார்ப்பு! 'முறிந்த சிறகுகளில்... முதியவனின் கண்ணீர்த் துளி கண்டு துணுக்குறும் இப்ராஹிமின் பதற்றம் இந்தக் கதையைப் படித்து முடித்துச் சில நாட்களாகியும்கூட எனக்குள் இருந்து கொண்டிருக்கிறது. 'அற்றது பற்றெனில் யாருக்கு உற்றது வீடு' என்ற கேள்வி எழுகிறது. பண்பின் சித்திரமாய்ப் பேசும் முதியவள் நீலாம்பிகைக்கா? மனைவியின் தொல்லை தாளாது தந்தையின் சொல்லை மீறி முதியவர்களை வெளியேற்றி... வீட்டை விற்க நினைக்கும் சபேசனுக்கா? வீட்டை வாங்கிக் கொண்டு பணம் தருகிறேன். ஆனால் அந்த முதிய தம்பதி கடைசிவரை அந்த வீட்டிலேயே இருக்கட்டும் என்று சொல்லும் ஹமீத் கல்தானுக்கா? இந்தக் கதையைப் படித்ததும் அழுகை வந்தது எனக்கு. மனித மனத்தின் மிருகத்தனம், மனிதத்தனம், தெய்வத்தனம் மூன்றும் இந்தப் படைப்பில் பரிணாமப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய நூலின் இறுதிப்பகுதியில் வந்தாலும் என்னைக் கவர்ந்த முதல் கதை இது.

நட்பு சந்தர்ப்பம் வரும்போது வேடங் கலைத்துக் கொள்வதை 'நட்பு' என்ற கதையும், பொய்மையின் கட்டவிழ்ப்பை, 'அவஸ்தைகளிலும்' வெளிப்படுத்தியிருக்கிறார்.

செத்த எலிக்கு அஞ்சும் கூட்டத்தைப் பார்த்த 'குசையம்மாவும் அத்வைதமும்' என்ற கதையில் வரும் குசையம்மா சொல்கிறாள் இப்படி....

"அப்பாவி எலிக்கு அமக்களப்படுத்தறாங்க. பெருச்சாளியெல்லாம் தைரியமா உலவிக்கிட்டிருக்கு.." எள்ளல் துள்ளுகிறது! இங்கே!

"கோட்சேக்கு நன்றி" - சிந்தனையில் மின்னலை வெட்டிவிட்டுப் போகிறது. "இருதிக்கடிதம்" உமா ஓர் அருமையான பாத்திரம்.

"பொழுது புலர்ந்துவிட்டாற்போன்று தோன்றிற்று. தெருவிளக்குப் போடும் பகல் வேஷமாகவும் இருக்கலாம்."

"உயிர் பழுக்க வாசனையினால் ஒட்டிக் கொண்டிருந்தது" என்பது போன்ற வரிகள்... மழை முடிந்தபின் இலைகளிலிருந்து சொட்டும் நீர்த்துளிகளாய்ச் சிந்தைக்குக் குளிர்ப் பூட்டுகின்றன!

இந்தத் தொகுதியிலமைந்த இந்திரா பார்த்தசாரதியின் சிறுகதைகள் உயிர் ததும்பி நிற்கும் சின்னச் சின்ன வாழ்க்கைச் சித்திரங்கள்!

—பொன்மணி வைரமுத்து

அவன் என் மனைவி/இந்திரா பார்த்தசாரதி,
வெளியீடு : தமிழ்ப் புத்தகாலயம்,
11, சிவப்பிரகாசம் தெரு,
சென்னை-600 017; விலை ரூ.27/-

அலெக்ஸாண்டர்

சமீபகாலத்தில் எந்தப் படத்திலாவது முழுக்க முழுக்கப் புடைவை மட்டுமே கட்டிய ஹீரோயினைப் பார்த்திருக்கிறீர்களா? ஆபாச அசைவுகள் காட்டாத ஹீரோயின்?

இதற்காக முதலில் இயக்குநர் கேயாரைப் பாராட்டி விட்டுத் தொடரலாம்.

விஜயகாந்த் ஒரு நேர்மையான சி.பி.ஐ. ஆபீசர் என்று முதல் வரியைச் சொல்லிவிட்டால் மேற்கொண்டு கதை தேவையில்லை. சமீப கால அரசியல் ஹவாலா விஷயங்கள், நடந்தது நடந்தபடியே படத்துக்குத் திரைக் கதையாகி விட, - அங்கே ஜெயின் டைரி; இங்கே ஒரு ஃபைல் என்கிற ஒரே வித்தியாசம் தான் - விறுவிறுப்புக்குக் கேட்க வேண்டுமா?

ஒன்று சொல்ல வேண்டும். பத்தோடு பதினொன்றாகி இருக்க வேண்டிய கதைதான். தூக்கி நிறுத்தியிருப்பது, கேயாரின் திரைக்கதை.

சங்கீதா ஏன் அந்தப் பையனைக் கொலை செய்தார்? விஜயகாந்த் எப்படி அதைக் கண்டு பிடித்தார்? அந்த அழகிய தாடிக்காரர் எதற்காக இவர்கள் போகிற இடமெல்லாம் போர்வையைப் போர்த்திக் கொண்டு பின்தொடர்கிறார்? (வியர்க்காதோ?) அடுக்கடுக்காகக் கேள்விகள் எழும்பிக் கொண்டே இருப்பதால், அடுத்தடுத்த அதிர்ச்சி சம்பவங்களில் ஆர்வம் கூடுகிறது. அத்தனைக்கும் கிளைமாக்ஸில் நேர்த்தியாக சஸ்பென்ஸ் விடுவிக்கப்படுகிற போது நிஜமாகவே கைதட்டத் தோன்றுகிறது.

படத்தின் பெரிய பலம், வில்லன் பிரகாஷ் ராஜ். இந்தப் படத்தில் அவருக்குக் கொஞ்சம் வசனம் அதிகம் என்று தோன்றுகிறது. அவரது பிரத்யேக ஸ்டைலைக் காட்ட அதிக வாய்ப்பின்றி, பெரும்பாலும் பேசிக் கொண்டே இருந்தாலும் மொழியை அவர் வசதிக்கேற்ப வளைத்தும் நெளித்தும் உபயோகிக்கிற விதம் புதுவிதமானது.

ரீ-ரெக்கார்டிங்கில் விட்ட கோட்டையைப் பாடல்களில் பிடித்து விட்டார் கார்த்திக் ராஜா. அதிக இரைச்சலில்லாத - பெரும்பாலும் அத்தனை கருவிகளையும் கீழ்ஸ்தாயியிலேயே மீட்டி - நவீனமாக ஒரு இசை முறையைக் காட்டியிருக்கிறார்.

படத்தின் ஒரே குறை அந்த மலையோர நடனப் பாடல்.


குலதெய்வத்துக்குப் பூஜை போடப் போகிறவருக்கு என்னத்துக்கு அந்தக் குலுக்குப் பாடல்?

முழுப்படமும் கட்டிக் காக்கிற கண்ணியம் அங்கே கொஞ்சம் கரைகிறது.

மற்றபடி, ஒரு மாறுபட்ட மசாலா.

- ஆர்.பி.ஆர்.







• சுக்ரோ கோட்டை

வெளியில் தெரியாத வேலூர்க் கோட்டைகள்!

வேலூர்க் கோட்டை என்றதுமே டவுனுக்குள் இருக்கிற அகழி சூழ்ந்த கோட்டைதான் அனைவருடைய நினைவுக்கும் வரும். ஆனால் வேலூரை ஒட்டிய குன்றுகளில்இருக்கும் மற்ற மூன்று கோட்டைகள் பற்றி, பலருக்கும் தெரியாது. அழிந்து வரும் அவற்றைப் பாதுகாத்துப் பராமரித்தால், உல்லாசப் பயணிகளை ஈர்க்கும்; முக்கிய இடங்களில் வேலூரும் ஒன்றாக இருக்கும்...

"சுக்ரோ, கஜ்ரோ, மூர்த்தஜ்- இந்த மூன்றுமே கவனிப்பார் யாருமின்றிப் பாழடைந்து கிடக்கின்றன. சாராயம் காய்ச்சுப வர்களுக்குத் தோதான இடமாக இருந்தது சார்!'' என்கிறார் சீனிவாசன். அவர் குறிப்பிடுவது 16-17 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கோட்டைகளை!

முதல் கோட்டையான சுக்ரோவுக்கு அதிகம் சிரமம் இல்லாமல் ஏறிவிடலாம். காலை இடறும் கற்களும், கொஞ்சம் புதர்களும் வழியில் இருக்கின்றன.

கோட்டைக்குள்ளே இருக்கும் சிற்ப மண்டபத்தில் இப்போது மாடுகள் படுத்து ஓய்வு எடுத்துச் சாணம் குவித்திருக்கின்றன! 1518அடி உயரத்தில் பாலாஜி மலை மீது அமைந்திருக்கும் சுக்ரோ கோட்டைதான் மற்ற இரண்டு கோட்டைகளையும் விடப் பெரியது. தெற்குப் பார்த்த வாயில். "எதிரிகளை எளிதில் கண்காணிக்க வசமான இடம். பீரங்கிகளை வசதியாக வைக்க ஏற்ற இடம் என்று சொல்லுகிறார்கள்!"

ஊர்ஹீஸ் கல்லூரியில் பட்டம் வாங்கிய இந்த இளைஞரின் இப்போதைய உயிர் மூச்சே வேலூர் கோட்டைகளை உலகின் கவனத்துக் குக் கொண்டு வருவதுதான்!

உள்ளேயிருக்கும் மண்டபத்தில் உள்ள சிற்பங்கள் பலப்பல. ஆதிசேஷன், ஐராவதம், நடராஜர், ஆஞ்சநேயர் என்று தூண்களிலும், சுவர்களிலும் ஏராளம்.

இரண்டாவது கோட்டை கஜ்ரோவை அடையக் கொஞ்சம் உறுதியான கால்கள் வேண்டும். பாதை சற்றுக் கடினமானது தான். வழி நெடுக பெரும் கற்களும், புதர்க் கற்றைகளும்!

"1635அடி உயரத்தில் இருக்கிறது இது!" என்கிறார் சீனிவாசன். இரண்டு வாயில்களில் ஒன்று கிழக்குப் பார்த்தது. மற்றொன்று வடக்குப் பார்த்தது. இதற்குள்ளே இருக்கும் இன்னோர் அற்புதம் சதுரவடிவக் கிணறு. பிரம்மாண்டமானது! 32 படிகள். சுவர்களில் எல்லாம் கூட விநாயகர், நடராஜர், கண்ணப்ப நாயனார் சிற்பங்கள்.

ஒற்றைப் பெரும் பாறையில் கட்டப்பட்டிருக்கும் மூன்றாவது கோட்டை மூர்த்தஜ். முக்கால்வாசி கோட்டையும் சிதைந்து, சிதிலமடைந்து விட்டது. இரண்டாவது கோட்டை



• கஜ்ரா கோட்டை

யிலிருந்து மூன்றாவது கோட்டை ஒரு கிலோ மீட்டர் தூரம்தான். இந்தக் கோட்டையிலும் ஓர் அழகான குளம். "குதிரைகளுக்குத் தண்ணீர் காட்ட!" என்கிறார் சீனிவாசன். இயற்கையான குளம். சூரிய ஒளியே படாத குளம். பச்சைத் தவளைகளும், குஞ்சு மீன்களும் நீந்திக் களிக்கின்றன.

''இங்கே மரமே வளராது என்று சொல்லுகிறார்கள். அது உண்மை என்றால் வெட்டிச் சாய்த்து, எடுத்துக் கொண்டு போகும் மரங்கள் எப்படி இங்கே வளர்ந்தனவாம்?'' என்று கேட்கிறார் சீனிவாசன்.

எங்கிருந்தோ திடீர் என்று பாயும் சிறு நீர்வீழ்ச்சி. அது கீழே வரவர, அதன் நுனிப் பகுதிக்குப் போனால் இளைஞர்கள் சிலர் ஆனந்தமாகக் குளிக்கிறார்கள்!

500 அடி கீழே, சுமார் மூன்று ஏக்கருக்கு சமதரை. தண்ணீரும் இருக்கிறது. "பூங்காவாக மாற்ற வேறு என்ன வேண்டும்?" என்று கேட்கிறார் சீனிவாசன்.

கீழே 16 லட்சம் லிட்டர் தண்ணீர் சேர்த்து வைக்கக்கூடிய குளம். அப்படியே பாழாகிக் கிடக்கிறது.

குடியாத்தம் அருகே மேல் ஆலத்தூரில் உள்ள மண் ஆய்வு மையத்தில் இந்த மண் பற்றிய பரிசோதனைகளை நடத்தி முடித்து விட்டுத் திரும்பிய சீனிவாசனுக்கு ஒரே உற்சாகம்.

பழ மரங்கள் வைத்தாலும் வளரும் என்பது பரிசோதனை முடிவு!

தண்ணீர்? உப்பு கிடையாது!

மலையிலிருந்து ஒருபுறம் அருவியாய்க் கொட்டிக் குட்டையாய்த் தேங்கிக் கிடக்கிற இடத்தில், ஏராளமான துணிகளைத் துவைத்துக் கொண்டிருந்தார்கள். "தாத்தா காலத்திலிருந்து இங்க துணி துவைக்கறமுங்க" என்றவர்கள், ''தண்ணீர் எங்கிருந்து உற்பத்தி ஆகி வருகிறது'' என்று தெரியவில்லை என்கிறார்கள்.

மாவட்ட கலெக்டர் தேவிதார், காவல் துறை அதிகாரி, மாவட்ட வனத்துறை அதிகாரிகள் எல்லோருமே சீனிவாசனின் முயற்சிக்கு வெகுவாக ஒத்துழைப்புத் தருகிறார்கள். தாம் கனவு காணும் சுற்றுலாத் தலமாக, இந்தக் கோட்டைகளும், மலைகளும் எப்படி இருக்கும் என்று ஒரு டாக்குமென்டரி தயாரித்திருக்கிறார் சீனிவாசன். சென்னை எக்ஸ்நோரா இவருக்கு உதவ முன்வந்திருக்கிறது.



• சீனிவாசன்
(படம்-ஸ்ரீஹரி)

"நிறைய மரங்களை நடுவதன்மூலம் பசுமை கொழிக்கும் வளமான மலையாக இந்தப் பகுதியை மாற்றி விட்டால், வேலூரின் அதிகபட்ச உஷ்ணமான 44 டிகிரி செல்ஷியஸ் சரேலென்று குறைந்து விடும். கோட்டைகள் அழியாமல் பாதுகாத்தால் ஏராளமான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கலாம். மழை அதிகரிக்கும். எனவே, வெப்பம் குறையும். பறவைகள் தேடி வரும் சரணாலயம் ஆகும். கல்லூரியில் பாட்டனி, ஜுவாலஜி மாணவர்களின் நேரடிப் பயிற்சிக்குச் சுற்றுலாக்கள் உதவும். மண் வளம் பாதுகாக்கப்படும். எனவே உருண்டு விழுந்து ஆட்களைக் கொல்லும் பாறைகள் சரிவது நிற்கும். நீர் அருவியிலிருந்து தண்ணீர் சேமித்து மக்களுக்கு உதவலாம். மரங்களைத் தாறு மாறாக வெட்டிப் போவது நிற்கும்!" என்று அடுக்கும் சீனிவாசன், "அரசாங்கத்துக்குச் சுற்றுலா மூலம் நிறைய வருமானம் வருமே? அது எத்தனை பெரிய பயன்!" என்று கேட்கிறார். அவர் கேட்பது சுற்றுலாத்துறை அமைச்சருக்கும் கேட்கிறதா..?

— சாருகேசி

18

?

சீதா ரவி

"ரொம்ப பயமாயிருக்கு ஸ்ரீராம்..."

"இப்ப என்ன பண்ண முடியும்ங்கறே... நாம செய்யக்கூடியது எதுவுமில்லை. கடவுள் இருக்கார். பார்த்துப் பார்..."

சுகன்யாவுக்குக் கோபம் வந்தது. "நீ விஷயத்தை ரொம்ப எளிமையாக்கப் பார்க்கறே... அது சரியில்லை. வசந்தி விநோதமா நடந்துக்கறா. அவளோட கோபத்துக்கும் எரிச்சலுக்கும் பின்னால வேற ஏதோ இருக்கு..."

- பெட்டியில் பட்டுப் புடைவைகளை அடுக்கியபடி பேசிக் கொண்டிருந்தாள் சுகன்யா. அடுக்கிய புடைவைகளிலிருந்து ஒன்றை உருவி எடுத்துப் பிரித்துப் போட்டான் ஸ்ரீராம்.

"இந்தப் புடைவை ஞாபகமிருக்கா...?"

"ஊஹூம்! மறந்தே போச்சு..." சுகன்யா கோபம் மறந்து சிணுங்கினாள். ஸ்ரீராம் அவளுக்குத் திருட்டுத்தனமாகக் கொடுத்த முதல் பரிசு. மஞ்சளும் சிவப்பும் கலந்த அந்திவான அழகு.

"ஞாபகப்படுத்தட்டுமா...?" என்று அவள் காதைத் திருகினான்.

கல்யாணத்துக்குத் தேவையான உடைகளையும் சில பெரிய பாத்திரங்களையும் எடுத்துப் போக ஜவஹர்புரம் வந்திருந்தார்கள். கிட்டத்தட்ட இரண்டு வார கூட்டுக் குடும்ப சந்தடிக்குப் பிறகு, மழை பெய்து ஓய்ந்தது போன்ற தனிமையில் ஸ்ரீராம் கிரங்கிக் கொண்டிருந்தான்.

சுகன்யா அவனை உறுதியாக விடுவித்து, கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

"இதோ பாரு! நான் சீரியஸா பேசிக்கிட்டிருக்கேன். வசந்திக்கு வர்ற கோபம் ரொம்ப அதிகமா இருக்கு. அன்னைக்கு சேகர் என்னை போன்ல கூப்பிட்டு பேசிட்டான்னு பொங்கிப் போன மாதிரி, நாலஞ்சு முறை ஆயிடுத்து. அவ இப்படி இருந்து நான் பார்த்ததேயில்லை..."

ஸ்ரீராம் பெருமூச்சுடன் கைகளை விலக்கிக் கொண்டான். "நீ பார்த்ததில்லைன்னா...? அவ எப்பவும் தன்னோட best sideஐ மட்டும் உங்கிட்டே காட்டணும்னு ஜாக்கிரதையா இருந்திருக்கா.... மஹாபலிபுரம் பிக்னிக் போய்ட்டு வர்றப்ப, நம்ம இரண்டு பேரையும் கார்ல பார்த்தாளே.... அன்னிக்கு என்ன நடந்ததுன்னு உனக்குத் தெரியாது!"

"ஏன் தெரியாது? நீதான் எங்கிட்டே ஒன்னு விடாம சொன்னியே.... ஆனா இது வேற... இந்தக் கோபம் வேற... எனக்கு, குறிப்பா என்ன வித்தியாசம்னு சொல்லத் தெரியலை."

"அவ எப்பவுமே கொஞ்சம் 'பொஸஸிவ்' - கொஞ்சமில்லை... ரொம்ப 'பொஸஸிவ்'. கல்யாணமாகி அவங்க வீட்டுக்குப் போயிட்டா, சேகர் கூடவே இருக்க இருக்க, பாதுகாப்பு உணர்வு வந்து சேர்ந்துடும்..."

"அப்படியா நினைக்கறே...?"

"அப்படித்தான் ஆகப் போறது பாரேன்..."

"சரி..." என்றான் சுகன்யா, அவன் நம்பிக்கையைக் குலைக்க மனமின்றி.

சட்டைப் பாக்கெட்டிலிருந்து சின்ன காகிதத் துண்டத்தை எடுத்த ஸ்ரீராம், "எல்லாத்தையும் எடுத்து வைச்சுட்டோமா பார்த்துக்கோ..." என்று படிக்க ஆரம்பித்தான்.

முகத்தை அலம்பிக் கொண்டு வருவதற்குள் மூச்சுத் திணறியது!

'ஆயிரமாயிரம் வாடகை வாங்கிக்



உள்ளே வரலாமா?

கொள்கிறவர்கள் குறைந்தபட்சம் பாத்ரூம்களைச் சுத்தமாக வைத்தால் என்ன...' மனத்துக்குள் அங்கலாய்த்தபடி வெளியே வந்த சுகன்யாவை அவசரமாக அழைத்தான் குமார்.

"மன்னி! சீக்கிரமா வாங்களேன் வசந்தி உடனே கூப்பிடறா..."

விட்டு வந்து இரண்டு நிமிடம் கூட ஆகவில்லை. அதற்குள் அவசர அழைப்பு! தோளில் போட்டிருந்த துண்டால் முகத்தைத் துடைத்தபடி 'மணப்பெண்' அறை நோக்கி வேகமாய் நடந்தாள்.

"எங்கே போய்ட்டேன், சரியான சமயம் போனது.

"கல்யாணப் பொண்ணு நான் இன்னமும் தயாராகல்லை.... அதுக்குள்ள உங்களுக்கு அவசரமா? இங்கே பெட்டிய திறக்கலாம்னா கூட வழியில்லை. சாவிய கழுத்துச் செயின்ல போட்டுண்டு போய்ட்டேள். எங்கம்மாவானா, ஏதோ அடுத்த மாசம் கல்யாணம்ங்கிற மாதிரி வாசல்ல இப்பத்தான் கோலத்துக்குக் காவி இடறா..."

"ஷ்- வசந்தி! அமைதியாயிரு. இப்பத்தானே மணி மூணு ஆகறது? அஞ்சரை மணிக்குத்தான் சேகர் வீட்டுக்காரங்கள்லாம் வந்து இறங்கப் போறாங்க. நிதானமா டிரெஸ் பண்ணிக்கலாம்! இன்னும் முழுசா இரண்டரை மணி நேரமிருக்கு."

"அந்த அரித்மெடிக் பார்த்து?" அறைக்குள் நுழையும்போது அதட்டலாக வசந்தியின் குரல்.

சோப்பு வாசனையும் துடைத்த முகமாக உள்ளே வந்தவளைப் பார்த்து அது மேலும் உச்சத்துக்குப் எனக்கும் தெரியும். இப்ப முதல்ல பெட்டியைத் திறங்கோ. இப்ப உடுத்திக்க வேண்டிய புடைவையை எடுத்து வையுங்கோ. சீப்பை எங்கே வைச்சிருக்கேன்? தேங்காயெண்ணெய் பாட்டிலை கடைசில மறந்துட்டேன். நான் தான் எடுத்து பையிலே போட்டுண்டு வந்திருக்கேன்..."

"நான் மறக்கலைம்மா தேங்காயெண்ணையை..." சுகன்யா கோபத்தை அடக்கிக் கொண்டு மிகப் பொறுமையாகப் பேசினாள். "வீட்லயிருந்து கிளம்பும் போது ஞாபகமாகத் தேடினேன். அதுக்குள்ளே அதை நீ எடுத்து வைச்சிருந்தே போலிருக்கு. அது எனக்குத் தெரியாதே... அதனால் வழியில வேற ஒரு பாட்டில் புதுசா வாங்கிட்டு வந்திருக்கேன்."

ஹாண்ட் பேக்கைத் திறந்து, பாட்டிலை எடுத்தபோது இருபத்திரண்டு ரூபாய் ஐம்பது பைசாவுக்கான பில் கீழே பறந்தது.

காத்திருந்தவள் போல் அதைக் 'கொத்தி'யெடுத்தாள் வசந்தி.

"வேஸ்ட்! இதுக்குத் திருப்பி தண்டச்செலவு. ஏற்கெனவே எங்கப்பாவுக்கு இருக்கற செலவு போறாதுன்னு..."



தங்க நகை பரிசு!

இந்த இருபத்தாறு வாரத் தொடர், ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு கதாசிரியர் பெயரில் வெளியாகி வருகிறது. ஆனால் அவர்களுள் ஒரே ஒரு நபர்தான் இதை எழுதி வருகிறார். தொடரை எழுதியவர் யார் என்பதைக் கண்டுபிடிப்பது உங்கள் சாமர்த்தியம். கடைசி வாரம் வரை காத்திருந்து, அந்த இதழில் வெளியாகும் கூப்பனில் விடை எழுதி அனுப்புங்கள். சரியான விடைக்கு, தங்க நகை பரிசு! பலர் சரியாக எழுதினால் குலுக்கலில் ஒருவரே பரிசு பெறுவார். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

"இந்த இருபத்திரண்டு ரூபாய் அம்பது பைசாவை நான் கல்யாணக் கணக்குல எழுதலே.. போதுமா.. இப்ப கொஞ் சம் வாயை மூடு!" - நெஞ்சு வரையில் வந்த வார்த்தைகளை கூறி வெளிப்படுத்திவிடாமல் காப்பாற்றியது புடை வைத் தலைப்பை உதறிச் செருகியபடி வந்த பெரியத்தைதான்.

"ஏய் வசந்தி! இப்படி துடுக்கா பேசப் படாது. என்னருந்தாலும் அவ உனக்கு மன்னி. அம்மா ஸ்தானம் தெரியுமா...? தலைப் பின்னலைச் சீக்கிரமா அவிழ்த்துடு! தலை ஜோடனைக்கு ஒரு மணி நேரம். அப்புறம் உன் இஷ்டத்துக்கு 'மேக் அப்'போ என்னவோ போட்டுக்கோ, புடைவையைக் கட்டிக்கோ... ஏண்டி சுகன்யா! இப்படி நாளும் கிழமையுமா நெத்தில பொட்டில்லாம நிக்கறே... முதல்ல நெத்திக்கிட்டுக்கோ! தலையை நான் பின்னி விட்டுடுமா...? நீ முன்னாடி தயாராயிட்டா வசந்திக்கு ஒத்தாசை பண்ணிட்டு அப்படியே வாசப் பக்கம் போய்டலாம். புள்ளையாத்துக்காரா வந்தா பளிச்சுன்னு 'வாங்கோ'ன்னு சொல்ல வாசல்ல இரண்டு பேர் வேண்டாமா...?"

"வேண்டாம். மன்னி இங்கேயே என் கூடவே இருக்கட்டும். குமாரை வேணா வாசல்ல நிக்கச் சொல்லுங்கோ அத்தை. நீங்களும் போய் நில்லுங்கோ... மன்னி எனக்குத் துணையா இருக்கட்டும்."

பொங்கிய பால் அடுப்பணைத்ததும் தணிந்து அடங்குவது போல், திடீரென்று அமைதியாகப் போய் பேசிய வசந்தியை அதிசயத்துடன் பார்த்தாள் சுகன்யா.

"முதல்ல மன்னிக்குப் பின்னி விடுங்கோ அத்தை. அதுக்குள்ளே நான் என் புடைவை நகையெல்லாம் பார்த்து 'செட்'டா எடுத்து வைச்சுக்கறேன்..."

பெரியத்தை அழுத்தித் தலையை வாரிய போது இதமாக இருந்தது. கண்களைச் சுழற்றிக் கொண்டு தூக்கம் கூட வந்தது.

ஸ்ரீராம்தான் அவளைப் பார்த்ததும் சிரித்து விட்டான்.

"ஏய்! என்ன இது வேஷம்...?"

"'என்ன....?'"

"தலைமுடியை கோந்து போட்டு நெத்தியில ஒட்ட வைச்ச மாதிரி....."

"அப்படியாயிருக்கு...? பெரியத்தைதான் தலை பின்னி விட்டாங்க..."

"நீ கண்ணாடியிலே கூட பார்த்துக் கலையா?"

"இல்லையே... கொஞ்சம் இறுக்கமா பின்னியிருக்காங்க, அவ்வளவுதான்..."

"சரியாப் போச்சு! முகமே மாறிப் போச்சு...? ஏதோ புதுப் பொண்ணுன்னு நினைச்சு, வர்ற மாமிகளெல்லாம் உன் ஜாதகத்தைக் கேக்கப் போறாங்க..."

"ஒரிஜினல் தரேன்... நாலு ஜெராக்ஸ் எடுத்து வைச்சுடறியா...?"

"உதை...!"

"இண்டல் போதும்! வசந்திக்கு அங்க ரூமுக்கு டிபன் கொண்டு போய்க் கொடுக்க ஏற்பாடு பண்ணுங்க. அவ காப்பி குடிக்க மாட்டா. ஞாபகமா பால் ஒரு தம்ளர் அனுப்பி வைக்கச் சொல்லுங்க..."

மாமியாரைத் தேடி வாசல் பக்கம் போனவளைப் பெருமிதத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான் ஸ்ரீராம். பின் தலையில் மல்லிகைப் பூ மின்னியது. இழுத்துப் பின்னிய கூந்தல் வழக்கத்திலும் நீளமாய்த் தெரிந்தது. உடல் இளைத்ததில் ரவிக்கை சற்று தளர்ந்து போயிருந்தது. 'நடையில் கூட கொஞ்சம் வாட்டமோ...?' யோசிக்கையிலேயே அவனுக்காக மனம் கனிந்து நெகிழ்ந்தது.

'எவ்வளவுதான் கூட நின்று உதவினாலும் இந்தக் கல்யாணத்தில் பெரும் பொறுப்பு சுகன்யாவின் தோள்களில்தான் வந்து இறங்கியிருந்தது. அப்பாவும், அம்மாவும் அந்த ஒப்படைப்பில் ஒரு பெரிய பாதுகாப்பைக் காண்கிறார்கள். எல்லோரும் தலைக்குத் தலை உணர்ச்சிவசப்பட்டு கண் கசக்கி, குரல் உயர்த்தி, ஒருத்தரையொருத்தர் காயப்படுத்திக் கொண்டிருந்த ஒரு கட்டத்தில், சுகன்யா சாம்பிராணிப் புகை போல் தன் இனிமையை, வ.மிமையைப் பரவ விட்டிருக்கிறாள். அவ்வளவு பேரும் சமனமாகி விட்டார்கள். புகைக்குப் பின்னால் தணலைப் போல் கனன்று கொண்டிருக்கும் அவளுடைய தீர்க்கமான, தூய்மையான மனத்தை எத்தனை தூரம் அவர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள்...?'

"ஸ்ரீராமா!" அப்பா மெதுவாகத் தோளைத் தட்டிக் கூப்பிட்டுச் சிரித்தார்.

"என்ன பார்த்துண்டே நிக்கறே.. கண்ணை மூடித் திறக்கறத்துக்குள்ள நாழியாயிடும்.. போ.. போய் டிஃபனெல்லாம் தயாராயிடுத்தா பாரு.. நாதஸ்வர பார்ட்டிக்கு வண்டியனுப்பறதாச் சொல்லியிருக்கோம். - ஞாபகமிருக்கா...?"

"ஞாபகமிருக்குப்பா... ஏற்பாடு பண்ணிட்டேன்..."

மங்கல இசையிலும், மாக்கோலத்திலும், சிரத்தையாக உச்சரித்த மந்திரத்திலும், நல்ல நெய் மணத்த சமையலிலும் எந்தக் குறைவுமிருக்கவில்லை. மணமகன் வீட்டாரின் ஆவலான பங்கேற்புடன் மூன்று வேளை கல்யாணம் அழகாக நடந்து முடிந்திருந்தது.

"வசந்தி! எப்பவும் சிரிச்சுண்டு சந்தோஷமா இருக்கணும்...'' கும்பகோணத்திலிருந்து வந்திருந்த மாமி இரவு பஸ்ஸிற்கு மூட்டை கட்டிக் கொண்டு புறப்படத் தயாராகிச் சொன்னபோது...

அந்த வார்த்தைகளுக்காகவே காத்திருந்தது போல் வசமிழந்து அவள் தோளில் சாய்ந்து கேவி அழுதாள் வசந்தி. சேகர் குழப்பத்துடன் நிற்பதைப் பார்த்து, ''பயப்படாதீங்க! இது ரொம்ப நார்மல்" என்று அவனை அமைதிப் படுத்தி, வேறுபுறம் அழைத்துப் போனாள் சுகன்யா.

''சுகி...!''

ஸ்ரீராம் தனியாக அழைத்தான்.

"இன்னைக்கு ராத்திரி மட்டும் உன்னை சேகர் வீட்ல படுத்துக்கச் சொல்றா அம்மா. வசந்திக்குக் காலைல எழுந்ததும் கொஞ்சம் துணையா இருக்கும் இல்லையா... அதற்குத் தான்."

சுகன்யா அவனை ஏறிட்டாள். மனத்தில் முளை விட்ட ஏமாற்றத்தைப் படுவேகமாய் அவன் கிள்ளிப் போட்டதைப் பார்த்து அதிசயித்தாள். இன்னும் நான்கு நாட்களில் அவன் அமெரிக்கா, யூரோப் என்று நீண்ட பயணம் புறப்பட்டாக வேண்டும். வசந்தியின் கல்யாணம் முடிந்த இந்த இரவை பெரிய பொறுப்பொன்று தீர்ந்த இரவாகக் கொண்டாடும் அவர்களின் திட்டம்...

"ஓ.கே. ஸ்ரீராம்... அப்படின்னா நாளைக்குப் பார்ப்போம். நம்ம வீட்டுல... சரியா...?"

"ஊம்... இப்ப சேகர் வீட்டு வரைக்கும் அப்பாவும் அம்மாவும் உன் கூட வருவாங்க. வசந்தியையும் உன்னையும் மட்டும் அங்க விட்டுட்டுத் திரும்பிடுவாங்க."

"சரி! நான் பார்த்துக்கறேன்... குட் நைட்!"

''குட் நைட் சுகி" என்றான்.

ஆனால் சுகன்யாவுக்கு அந்த இரவு நல்லிரவாக இருக்கவில்லை.

(தொடரும்)

அருள்வாக்கு

எல்லாருக்கும் மனசு மிகவும் நன்றாக இருக்க முடியாது. இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டாலும் முடியவில்லை. வீட்டிலே இருக்கிற குழந்தை சதா ஏதோ விஷமம் பண்ணிக் கொண்டிருக்கிறது. கத்திரிக்கோலை எடுத்து நல்ல துணிகளை, முக்கியமான காகிதங்களை நறுக்கி விடுகிறது. செடிகளை வெட்டி விடுகிறது. இப்படித் துஷ்டத் தனம் பண்ணுகிறது. அதையே பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி விட்டால், 'இத்தனை மணிக்குப் போக வேண்டும், இன்ன இன்ன பாடங்களை அதற்குள் எழுதி விடவேண்டும், திரும்ப இத்தனை மணிக்குத்தான் வர முடியும், வந்தால் இதைச் செய்ய வேண்டும்' என்று அதற்கு ஒரு கட்டுப்பாடு வந்து விடுகிறது. முன்பு காணப்பட்ட விஷம குணங்கள் எங்கோ போய்விடுகின்றன. பள்ளிக்கூடம் இல்லை, லீவுநாள் என்றால் மறுபடியும் விஷம குணங்கள் தலைகாட்டுகின்றன. அதேபோல் நாம் கெட்ட எண்ணத்திலும் காரியத்திலும் ஈடுபட அவகாசம் இன்றி, நல்ல காரியங்களை ஒரு விதிப் பிரகாரம், ஒழுங்கு தப்பாமல் செய்வதுதான் முக்கியம். இதற்குத்தான் சாஸ்திரங்கள் நமக்கு விதிகள் போட்டிருக்கின்றன.



நல்ல சீலங்கள் உண்டாக வேண்டுமென்றால் துர்க் குணங்கள் நிவிருத்தியாக வேண்டும். 'துர்க்குணங்கள் நிவிருத்தியாக நல்ல கர்மாநுஷ்டானங்களைச் செய், பூஜை பண்ணு, (சகல ஜீவராசிகளுக்கும் ஆகாரம் கொடுப்பதான) வைச்வதேவம் பண்ணு, அதிதிகள் வந்தால் ஸத்காரம் (விருந்தோம்பல்) பண்ணு, என்று பல விஷயங்களைச் செய்யச் சொல்கிறது சாஸ்திரம். இதன்படி செய்து வந்தால் கெட்ட காரியங்களுக்கு நேரமே இல்லாமல் போய்விடும். கர்மாநுஷ்டானங்களைப் பண்ணுகிற போதும் 'நாம் பண்ணுகிறோம்' என்ற அகம்பாவத்தோடு பண்ணக் கூடாது. பண்ணக்கூடிய சக்தியை நமக்கு ஈச்வரன் கொடுத்தான், பண்ண வேண்டும் என்ற புத்தியைக் கொடுத்தான், அதற்கு வசதியும் கொடுத்தான் என்று நினைத்து, ஈச்வரார்ப்பணமாகப் பண்ணு என்று நமது வைதிக மதாசாரியர்கள் விதித்து வழி காட்டினார்கள்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.



தமிழில் வாய்ப்பில்லாதது ஏன்?

இரண்டு முறை சிறந்த நடிகைக்கான தேசிய விருது வாங்கிய நடிகை அர்ச்சனா இப்போது எப்படி இருக்கிறார்? எங்கே இருக்கிறார்? சினிமாவில் நடித்துக் கொண்டுதான் இருக்கிறாரா? அவரையே சந்தித்துக் கேட்டபோது....

"தமிழில் நான் நடிக்கவில்லை என்பது வாஸ்தவம்தான். ஆனாலும் தெலுங்கு, கன்னடம், மலையாளப்படங்களில் நடிக்க வாய்ப்புகள் வந்து கொண்டுதான் இருக்கின்றன. நானும் நடித்துக் கொண்டுதான் இருக்கிறேன். அண்மையில் 'கள்ஹூரே' என்ற ஒரிய மொழிப்படத்தில் கூட நடித்திருக்கிறேன். அம்மா சென்டிமெண்ட் படம். அந்த கதாபாத்திரம் ரொம்பவும் பிடித்திருந்தது. நடித்தேன்."

"அப்படியெனில் உங்களுக்கு இருந்த ஆர்ட் பிலிம் அர்ச்சனா என்ற இமேஜ் போய்விட்டதா?"

சிரிக்கிறார். பெரிய கண்கள் மேலும் மேலும் விரிகின்றன. "அந்த இமேஜ் நான் விரும்பாமலேயே வந்து ஒட்டிக் கொண்டு விட்டது. அதனாலேயே நிறைய சினிமாக்காரர்கள் என்னிடம் வருவதில்லை. ஆனாலும் சில பேர் வந்து என்னை நடிக்க அழைத்துக் கதை சொல்கிறார்கள். அப்படிச் சொல்லப்படுகிற பல கதைகளோ, கேரக்டர்களோ எனக்கு ஆப்பீலிங்காக இருப்பதில்லை. பணம் வருகிறது என்பதற்காக அவற்றில் நடிக்க எனக்கு மனமில்லை. அதனாலேயே வருடத்துக்கு இரண்டு மூன்று படங்களில்தான் நடிக்கிறேன். அதிலேயே திருப்தி கிடைக்கிறது. அதுபோதும் எனக்கு."

"உங்களுக்கு எந்தமாதிரியான கேரக்டர்கள் அப்பீல் ஆகும்?"

'ஹூலியா' என்ற கன்னடப் படத்தில் நடித்தேன். அதில் நான் ஒரு ஜமீன் குடும்பத்துப் பெண். வேறு ஒரு ஜமீன் வீட்டில் என்னை சம்பந்தம் செய்ய விரும்புகிறார்கள். ஆனால், எங்கள் ஜமீனில் வேலை செய்கிற ஒருவரை நான் காதலித்துத் திருமணம் செய்து கொண்டு விடுகிறேன். எங்களுக்கு வரும் பிரச்னைதான் கதை!

"ஊரில் கடும் பஞ்சம் நிலவுகிறது. அரசாங்கத்தின் பஞ்ச நிவாரணத் திட்டம் என்று சொல்லி, சாதாரண மக்களை, ஆண்கள், பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் என்று பிரித்து லாரிகளில் கூட்டிச் செல்கிறார்கள். இதைப் பயன்படுத்தி, குழந்தைகளை அங்கஹீனப்படுத்தி, பிச்சை எடுக்க வைக்கிறது ஒரு கும்பல். முதியவர்களைக் கொன்று விடுகிறது; ஆண்களை கொத்தடிமைகளாக விற்கிறது; பெண்களை விபசாரத்தில் ஈடுபடுத்துகிறது.

"நான், என் கணவர், இரண்டு குழந்தைகள் ஆகிய நாலு பேரும் மூலைக்கு ஒருவராகப் பிரிந்து கஷ்டப்படுகிறோம். வழக்கமான சினிமா பாணியில், கிளைமாக்ஸில் ஒன்று சேராமல், பிரிந்த சோகத்திலேயே படம் முடியும். இந்தப் படத்தில் சமுதாயப் பார்வை இருப்பதால் எனக்குப் பிடித்தது. ஒப்புக் கொண்டேன்.

"அதே போல், சம்மோசனம் என்று ஒரு மலையாளப்படம். முந்நூறு குடும்பங்கள் கொண்ட ஒரு யதார்த்தமான கிராமத்தில், ஓர் அழகான பெண்ணின் வருகை எத்தகைய பாதிப்புகளை ஏற்படுத்துகிறது என்பதுதான் கதை. ரொம்ப அற்புதமான படம். கறுப்பான, பெரிய கண்கள் கொண்ட அந்த பெண்ணின் கேரக்டரில் ரொம்ப இன்வால்வ் ஆகி நடித்தேன்."

"பிலிம் இன்ஸ்டிடியூட்டில் படித்தவர் நீங்கள் என்பதால்தான் உங்களது எண்ணங்கள், எதிர்பார்ப்புகள் எல்லாம் வழக்கமான சினிமாத்தனங்களிலிருந்து சற்று மாறுபட்டிருக்கிறதா?"

"எனது பிலிம் இன்ஸ்டிடியூட் படிப்புக்கும், நடிப்புக்கும் சம்பந்தம் இல்லை. அங்கே தியரிடிகலாய் சொல்லித்தருகிற விஷயங்களை வைத்துக் கொண்டு, சினிமாக்களில் நடிக்க முடியாது என்பதே என் அபிப்பிராயம். ஆரம்பம் முதலே எனது சிந்தனையும் ஆர்வமும் சினிமாவில்தான் இருந்து வந்தன."

"அப்படியென்றால், ஃபிலிம் இன்ஸ்டிடியூட்டில் ஏன் சேர்ந்தீர்கள்?"

"சிறு வயது முதலே எனக்கு நடிப்பிலும், நாட்டியத்திலும் இருந்த ஆர்வத்தைப் பார்த்துவிட்டு, என் பெற்றோர்கள் என்னை இன்ஸ்டிடியூட்டில் சேரச் சொன்னார்கள். சேர்ந்தேன். வேறு பிரத்யேக காரணம் ஏதுமில்லை."

"அடுத்த தமிழ்ப்படம் எப்போது?"

"எனக்கே தெரியாது!"

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**

ரெய்டு

என்.சி. மோகன்தாஸ்

"முன்னாள் அமைச்சர் வேலப்பனை எப்போ கைது பண்ணப் போறீங்க?"

பத்திரிகை நிருபர்கள் துளைத்தெடுக்க, கணேசமூர்த்திக்குப் பதில் சொல்ல முடியவில்லை. அவர் சிறப்புப் புலனாய்வுத்துறை அதிகாரி. சங்கடமான கேள்வி.

இதே கேள்வியை கடந்த மூன்று மாதங்களாக எல்லோரும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஓர் அரசியல் தலைவரைக் கைது என்னும் போது எதிர்ப்புக் கிளம்புவதற்குப் பதில் -- 'எப்போ... எப்போ' என்று கேட்குமளவிற்கு ஜனங்களிடம் ஒரு விழிப்புணர்வு எழுந்திருக்கிறது.

அது குறித்து அவருக்கு சந்தோஷம்தான். ஆனால் மாஜியை கைது பண்ண ஆதாரம் வேண்டாமா?

வேலப்பன் ஊழல் பேர்வழி என்பதில் யாருக்கும் எந்தவித சந்தேகமுமில்லை. சரித்திரம் காணாத அளவில் பணம் சேர்த்திருக்கிறார். தமிழ்நாடு முழுக்க அவருக்கு சொத்துக்கள்! ஆனால் எல்லாமே பினாமி பெயர்களில்.

வேலப்பனின் கடந்த காலத்தைப் பார்க்கும் போது, அதிகாரிகளுக்கு வியப்பு. ஏதோ ஒரு கிராமத்தில் வெறும் கூலித் தொழிலாளியாகவும், பனை மரங்களில் பதநீர் கட்டுபவராகவும் இருந்திருக்கிறார். ஏதோ ஒரு திருட்டு கேஸில் ஊரை விட்டு விரட்டப்பட்டு, டவுனுக்கு ஓடி, அங்கே கட்சியில் சேர்ந்து வளர்ந்து, தேர்தலில் நின்று, ஜெயித்து, யம்மாடி! இன்று பல கோடிகளுக்கு அதிபதி!

எல்லாம் ஊரை அடித்த காசு. அதுவும் பச்சையாக- வெளிப்படையாக- உன்னால் முடிந்ததைப்பார் என்கிற திமிரில் சேர்த்தது.

ஆட்சி போயும் கூட இன்னும் எதுவும் செய்ய முடியவில்லை. ஆட்சியாளர்களும் அதிகாரிகளும் ஆதாரத்திற்கு வேண்டி ஆளாய் அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

கணேசமூர்த்தியைப் பத்திரிகையாளர்கள் தாளித்துக் கொண்டிருக்கும் போது போன்!

எடுத்துப் பேசினவரின் முகத்தில் பிரகாசம்!

"அப்படியா... சந்தோஷம். இன்னும் நான்கு மணி நேரத்தில் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டு வருகிறேன்!"

"என்ன சார் விஷயம்."

அவர் போனை வைத்துவிட்டு, "மாஜியின் பினாமி வீடு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது... அங்கே உடனே ரெய்டு நடத்தப் போகிறோம்!"

"நாங்களும் வரலாமா....?" நிருபர்களுக்கும் குஷி பிறந்தது. தினசரி அவர்களுக்கும் ஏதாவது பரபரப்புச் செய்திகள் வேண்டுமே!"

"ஓ.... தாராளமாய் வாருங்கள்!"



ரெய்டு என்கிற விஷயம் மாஜிக்கு எப்படி தெரிந்ததோ தெரியவில்லை. அந்த பங்களாவில் அப்போது அவர் ஆஜர்!

வீடு இன்னமும் சிமெண்ட் வாசம் மாறாமல் பொலிவுடன் இருந்தது. புது வர்ணம். புதுகேட். பின் பக்கம் தோட்டம். அதில் பழமரங்களும் தென்னையும் ஓங்கி உயர்ந்திருந்தன.

சுற்றிலும் கம்பிவேலி. எங்கு பார்த்தாலும் பசுமை. நிழல். ஜில் காற்று. யாருடைய வயிற்றில் அடித்து அந்த இடத்தை வாங்கினாரோ தெரியவில்லை. காவிரியின் செழுமை அங்கே பளிச்சிட்டது.

வேலைப்பனின் முகத்தில் அதிர்ச்சி இல்லை. மாறாக புன்னகை! அவர் கொஞ்சங்கூட கலங்கினதாய்த் தெரியவில்லை.

"உங்கள் வீட்டைச் சோதனையிடணும்!" என்றதும், "ஓ.. பேஷா!" என்று ஒதுங்கி வழிவிட்டார். எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. மாறாக, "காப்பி பலகாரம் சாப்

பிடுங்க!" என்று வரவழைத்துக் கொடுத்தார்.

அதிகாரிகள் மறுக்க, "பயப்படாமல் சாப்பிடுங்க. உடுப்பி ஹோட்டல் டிபன்தான்!"

நான்கு மணி நேரம் வீடு, பரண், டாய்லட், தோட்டம், படுக்கை என்று ஒரு இஞ்ச் விடாமல் அலசியும் கூட எதுவும் சிக்கவில்லை. கணேசமூர்த்திக்கு ஏமாற்றம்.

ரெய்ட் விவரமறிந்து மாஜி முன்பே எச்சரிக்கையாய் அப்புறப்படுத்தியிருக்க வேண்டும். தோல்வியை மறைத்துக் கொண்டு, "உங்களுக்கு இது மட்டுந்தானா இல்லை... வேறு...."

"இன்னும் இரண்டு சின்ன வீடுகள் உண்டு!"

"என்ன?"

"நிஜமாத்தான் சொல்கிறேன். எனது இளம் வயதில் இரண்டு பெண்களுடன் தொடர்பு வைத்திருந்தேன். இப்போதும் அவர்கள் என்னை நம்பி இருக்கிறார்கள். அவர்களுக்கும் தனித் தனியாய் வீடு!" என்று அட்ரஸ்கள் கொடுத்தார்.

கணேசமூர்த்திக்கு அவரைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

மாஜியின் சின்ன வீடுகள், பஸ் ஆபீஸ், தொழிற்சாலை, ரைஸ்மில், வைக்கோல் போர் என்று அலசாத இடமே பாக்கியில்லை. மாஜியின் ஒத்துழைப்பு அதிகாரிகளுக்கு ஆச்சர்யத்தை ஏற்படுத்தியது.



மறுவாரத்தில் அவருக்கு ஊர் எல்லையில் மாந்தோப்பு உள்ள தகவல் கிடைத்தது. உடன் ரெய்டு. ம்ஹூம். பலனில்லை. அப்புறம் தென்னந்தோப்பு; கேரளத்தில் ரப்பர் தோட்டம்!

எல்லா இடங்களிலும் தோல்வி!

கணேசமூர்த்தி தலையை பிய்த்துக் கொண்டிருந்த போது, டெல்லியிலிருந்து ஏதோ ஒரு வெளிநாட்டுத் தொழிலதிபரின் மோசடி வழக்கில் வேலப்பனுக்கும் பங்கு இருப்பதாகச் சொல்லி கைது பண்ண உத்தரவு பறந்து வந்தது.

எந்த வழக்கென்றால் என்ன, கைதுதான் இப்போது முக்கியம். ஜனங்களின் வாயை எப்படியாவது அடைத்தாக வேண்டும்.

ராத்திரியோடு ராத்திரியாக ஏற்பாடுகளைச் செய்து, விடியற்காலையில் மாஜியின் வீட்டிற்கு பயணப்படும் போது தனியார் மருத்துவ மனையிலிருந்து அவருக்கு போன்.

"சார்! மாஜி மாடியிலிருந்து விழுந்து கால் உடைஞ்சு படுக்கையில் கிடக்கார்!"

அவரால் அதை நம்ப முடியவில்லை. கைது என்றவுடன் நெஞ்சுவலி வருவது அரசியலில் வாடிக்கையாகி விட்டது. எல்லாம் ஒரு நாடகம். தற்காப்பு!

இதுவும் அப்படித்தான் இருக்கும் என்று ஆஸ்பத்திரிக்குப்போய் விசாரித்த போது, அதிர்ச்சி. நிஜமாலுமே மாஜியின் கால் உடைந்திருந்தது. எதற்கும் இருக்கட்டுமே என்று



ஒரு மலரின் புத்துணர்ச்சியோடு நீங்கள் இருக்க வேண்டுமா?

காதலனின் வாய் துர்நாற்றம் சகியாமல் முகம் சுளிக்கும் பெண்ணைக் காட்டி, பற்பசை விளம்பரம் செய்யப்படுவதைப் பார்த்திருக்கிறோம். 'காரணம்? கிருமிகள்' என்று மீண்டும் மீண்டும் சொல்லப்பட்டு, உணவுத் துகள்கள் பல்லிடுக்குகளில் தங்கக் கூடாது; அவ்வாறு தங்கினால் கிருமிகளின் உறைவிடமாகிவிடும் என்பதும் நமக்குப் புரிந்து போயிருக்கிறது.

உடல் துர்நாற்றத்துக்கும் இந்தக் கிருமிகள்தான் காரணம்! பொதுவாக, வெயில் காலத்தில் அனைவருக்கும் ஏற்படுகிற பிரச்னை இது. வியர்த்துக் கொட்டுவதால்தான் துர்நாற்றம் எழுகிறது என்பது ஓரளவுக்குத்தான் உண்மை.

நமது சருமப் பரப்பில் மூன்றுவித சுரப்பிகள் உள்ளன. அவற்றுள் எக்ரீன் சுரப்பி என்பது வியர்வையைச் சுரக்கிறது. மன அழுத்தமும் உஷ்ணமும் இந்தச் சுரப்பிகளைத் தூண்டுகின்றன. உடல் முழுவதிலும் உள்ள தோல் பரப்பில் சுமார் இரண்டு மில்லியன் எக்ரீன் சுரப்பிகள் இருக்கின்றன. அவற்றுள் ஐம்பது சதவிகிதம் சுரப்பிகள் அக்குள் பகுதியிலேயே அடங்கியிருக்கின்றன! இவை இயல்பாக வியர்வையைச் சுரக்கும் போது துர்நாற்றம் ஏற்படுவதில்லை. அந்த வியர்வை உடலில் தேங்கி, தங்கும்போது குடியேறும் கிருமிகள்தான் துர்நாற்றப் பிரச்னைக்குக் காரணம். அப்பகுதிகளில் உள்ள ஈரமும் கதகதப்பும் கிருமிகள் பல்கிப் பெருக உதவுகிறது!

உடலின் மிக இயல்பான செயல்பாடு இது என்பதால், துர்நாற்றத்தைக் கண்டு கவலையோ, அவமானமோ படத் தேவையில்லை.

சோப்பு உபயோகித்துக் குளிப்பதாலும், பவுடர் உபயோகிப்பதாலும் இந்த துர்நாற்றத்தை ஓரளவு கட்டுப்படுத்த முடியும்.

'டியோடோரன்ட்' எனப்படும் சாதனத்தைப் பயன்படுத்தினால், சருமத்தில் தொற்றி வளரும் பாக்டீரியா கிருமிகள் அழிக்கப்படுகின்றன.

குளித்த பின், ஈரமில்லாத உடலில் டியோடோரன்டை நேரடியாக சருமத்தின் மேல் தடவ வேண்டும். ஆனால் புண்ணான, அடிபட்ட சருமப் பகுதிகளில் அவற்றை உபயோகிக்காமல் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

நம் நாட்டின் வெப்பநிலை, மிக அதிகமாயிருந்தாலும் டியோடரன்ட் உபயோகிக்கும் பழக்கம் இன்னும் பிரபலமாகவில்லை. அவை இங்கு சமீபத்தில்தான் பெரிய அளவில் உற்பத்தி செய்யப்பட ஆரம்பித்தன என்பது ஒரு காரணம். (உதாரணம்: ரெக்ஸோனா)

டியோஸ்டெரால் என்கிற சாதனத்தை உள்ளடக்கிய டியோடோரன்டுகள் நாள் முழுவதும் உடலை துர்நாற்றமின்றி புத்துணர்ச்சியுடன் வைத்திருக்கும்

நம்பிக்கையான டாக்டர்களை வைத்தும் பரிசோதித்தாயிற்று.

எக்ஸ்ரேயும் அதை உறுதிப்படுத்தியது. மாஜி, வலி தாங்காமல் முனகிக் கொண்டிருந்தார். "கால் உடைந்தால் என்ன, கைது பண்ணி சிகிச்சை தரலாமே!" என்று பத்திரிகைகள் விமர்சித்தன.

என்ன செய்வது என்று கணேசமூர்த்தி யோசித்துக் கொண்டிருந்த போது, மாஜியை பரிசோதித்த டாக்டர் அவசரமாய் அவரைப் பார்க்க வந்தார்.

"சார்! மாஜி விழுந்ததும், அடிபட்டதும் உண்மை. ஆனால் மாடியிலிருந்துதான் விழுந்தாரா... என்பதில் தான் சந்தேகம்."

"சந்தேகிக்கக் காரணம்?"

"மாஜியின் நெஞ்சு, வயிறு பகுதிகளில் சிராய்ப்புக்கள் உள்ளன. அவர் விழுந்ததோ வீட்டில். அங்கே வீடு முழுக்க பளிங்குத்தரை! பளிங்கில் விழுந்திருந்தால் சிராய்ப்பு எப்படி....?"

டாக்டர் கேட்க, கணேசமூர்த்தியின் மூளையில் உடன் ஒரு மின்னல்! "டாக்டர்! யு ஆர் கரெக்ட்! ஐ காட் த பாயிண்ட்!"

அவர் சற்றும் தாமதிக்கவில்லை.

கடைவீதிக்குப் போய் அங்கே இளநீர் வெட்டிக் கொண்டிருந்தவனை அள்ளி ஜீப்பில் போட்டுக் கொண்டார். அவன் மிரண்டு போனான். "சார்! நான் எந்தத் தப்பும் பண்ணலே!"

அவர் பதில் ஒன்றும் சொல்லவில்லை. நேராய் மாஜியின் பனந்தோப்பிற்கு வண்டியை விட்டு, "உனக்கு மரம் ஏறத் தெரியுமில்லே?"

"தெரியும் சாமி!"

"அப்போ ஏறு!"

ரூ. பத்து லட்சம்!
மான நஷ்ட வழக்கு!

அம்பத்தூர் நகராட்சியில் ஊழல்கள் மலிந்திருப்பதாக திருமதி விஜயா முதல்வரிடம் புகார் செய்ய, முதல்வர் உடனடியாக நடவடிக்கை எடுத்தார். இதையொட்டி கல்கி 6.10.96 இதழில் திருமதி விஜயாவின் பேட்டி இடம் பெற்றது. அந்தப் பேட்டியில் திருமதி விஜயா சொன்ன இரு கருத்துக்களை ஆட்சேபித்து அவர் மீது பத்து லட்சம் ரூபாய் நஷ்டஈடு கோரி மான நஷ்ட வழக்கு தொடரப் போவதாக வக்கீல் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. அதன் சுருக்கம்:

எனது கட்சிக்காரர் ஏ.ஆர். நாதன் தி.மு.கழகத்தின் விசுவாச ஊழியர். அம்பத்தூர் நகரின் தி.மு.க. செயலராக தற்போது இருந்து வருகிறார். பொது மக்களின் மதிப்புக்குப் பாத்திரராகி, கட்சித் தேர்தல்களில் வெற்றி பெற்று வந்திருக்கிறார். அண்மையில் நடந்த உள்ளாட்சித் தேர்தலில் ஒன்பதாவது வார்டில் தி.மு.க. சின்னத்தில் வேட்பாளராக நின்றார்.

கல்கி 6.10.96 இதழில் திருமதி விஜயா ஒரு பேட்டி தந்திருக்கிறார். அதில் தமது வீடு நோக்கி நாதன் கற்களை வீசியதாகவும் அம் பத்தூர் நகராட்சியில் நடந்த ஊழல்களில் நாதனும் கமிஷன் பெற்று வந்ததாகவும் கூறியுள்ளார்.

இதனால் எனது கட்சிக்காரர் நாதனுடைய கௌரவம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அம்பத்தூர் நகராட்சி அறிவித்த எந்த டெண்டரிலும் எனது கட்சிக்காரர் நாதன் பங்கேற்கவில்லை. அதனால் அவர் கமிஷன் பெற வாய்ப்பு இல்லை.

விஜயாவின் பேட்டி பொது மக்களிடம் காண்பிக்கப்பட்டதன் காரணமாக எனது கட்சிக்காரர் நாதன் தேர்தலில் தோற்றுப் போனார். இதனால் அவர் மனக் கஷ்டமும் பொருள் நஷ்டமும் அடைந்திருக்கிறார். எனவே பத்து நாட்களுக்குள் திருமதி விஜயா ரூபாய் பத்து லட்சம் தந்தாலொழிய, அவர் மீது இத்தொகைக்கு மானநஷ்ட வழக்கு தொடரப்படவிருக்கிறது.

கல்கி பத்திரிகைக்கு மக்களிடையே மதிப் பும் கௌரவமும் உள்ளது. திருமதி விஜயா கூறிய விஷயத்தை உண்மைதானா என்று ஆராய்ந்து பாராமல் பிரசுரித்ததால் எனது கட்சிக்காரர் பாதிக்கப்பட்டுள்ளார். எனவே கல்கி பத்திரிகை வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்று இந்த நோட்டீஸ் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

சென்னை - 78. ஜி. ரவிசங்கர்,
5.11.96 அட்வொகேட்,

(திருமதி விஜயா, கல்கி பேட்டியில் திரு. நாதன் பற்றி கூறியுள்ள கருத்துக்கள், முதல்வருக்கு திருமதி விஜயா 29.8.96ல் அனுப்பியுள்ள ஃபாக்ஸ் கடிதத்திலும் இடம் பெற்றுள்ளன. அக்கடிதத்தில் காவல் துறை மூலம் தமக்குப் பாதுகாப்புத் தர வேண்டும் என்றும் திருமதி விஜயா கோரியுள்ளார்.

–ஆசிரியர், கல்கி.)

●●

அவரது யூகம் பொய்க்கவில்லை. நான் காவது மரத்தில் கட்டப்பட்டிருந்த 'பதநீர்' பானையில் தங்க பிஸ்கட்கள்! பண நோட்டுக்கள், அதன் பின் மரத்தில் தங்கப் புதையல்! வீடியோ காமிரா அவற்றையெல் லாம் படம் பிடித்து கோர்ட்டில் சமர்பிக்க, இம்முறை மாஜி தப்பிக்க முடியவில்லை. அவருக்கு ஜெயில்!

"பனை உச்சியில் மாஜி தங்கத்தைப் பதுக்கி வைத்திருப்பதை எப்படி ஊகித்தீர்கள்?"

நிருபர்கள் கேட்க, கணேசமூர்த்தி பெரு மிதத்துடன் —

"ஆஸ்பத்திரியில் அடிபட்டுக் கிடந்த மாஜியின் மார்பில் சிராய்ப்பு என்றதும் உடன் அவரது கடந்த காலம் என் மனதில் ஓட ஆரம்பித்தது. இயல்பில் அவர் மரமேறிப் பதநீர் கட்டும் ஒரு தொழிலாளி! ரெய்டு என்றதும் தமது சம்பாத்யத்தையெல்லாம் யார் கண்ணிலும் படாமல் மர உச்சியில் ஒளித்து வைக்க ஆரம்பித்திருக்கிறார். அன்றும் அப்படி பனை மரம் ஏறி இறங்கும் போது கால் தவறி விழுந்திருக்கிறார். அதனால்தான் கால் உடைந் திருக்கிறது. அதை மறைக்க வேண்டி மாடியிலிருந்து விழுந்து விட்டதாய் அவர் நாடகம்! ஆனாலும் கூட அந்த சிராய்ப்பு காட்டிக் கொடுத்து விட்டது!"



அப்பாக்கள் மேல்

நண்பர்களால் 'வி.கே.எஸ்' என்று செல்லமாக அழைக்கப்படும் வி.கே. சுப்பிரமணியன், வாஷிங்டனில் இந்தியத் தூதரகத்தில் 'டைரக்டர் ஆஃப் ஆடிட்' பதவி வகித்தவர். நாகாலாந்தில் பொருளாதார ஆணையராக இருந்தவர். அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் நிறுவனத்தில் பொருளாதார சேவைப் பிரிவில் உயர் அதிகாரியாகப் பணியாற்றியவர். ஆங்கிலத்தில் நல்ல எழுத்தாளர். ஜோதிடக் கலையில் வல்லுநர். பல 'தனி நபர் கண்காட்சி'களை நடத்தியிருக்கும் தேர்ந்த ஓவியர். அமெரிக்காவில் வசிக்கிறார். இப்போது முகாம் சென்னையில். 'அமெரிக்கா தமக்கு ஏன் பிடிக்கிறது' என்று சின்னச் சின்னதாய் பல பெரிய விஷயங்களை அவர் சொன்னார்.

■ அறுபது வயதுக்கு மேற்பட்ட 'சீனியர் சிடிஸன்ஸ்' மீது அமெரிக்க அரசு காட்டுகிற அக்கறை. குறிப்பாக அவர்களின் உடல்நலத்தின் மீது. ரத்த அழுத்தத்தைச் சோதிக்கிற கருவி, சர்க்கரையின் அளவை துல்லியமாய் அளந்து காட்டும் எலக்ட்ரானிக் கருவி, இலவசமாய்த் தருகிறார்கள். (இதோ பாருங்கள் என்று காட்டுகிறார்.) கண்களைச் சோதித்து கண்ணாடி இலவசம். மருத்துவமனைக்குப் போய்வர கார் வசதி செய்து தருகிறார்கள். ஆறுமாதத்துக்கு ஒருமுறை இலவசமாய் பற்களைச் சுத்தம் செய்து கொள்ளலாம்.

■ வாக்கிங் போக சாலைகளின் இரண்டு புறமும் மேடு பள்ளமில்லாத பாதைகள். எங்களைப் போன்ற 'மூத்த குடிமகன்கள்' அமெரிக்காவில் வாக்கிங் போவது என்பது ரொம்ப ஜாலியான அனுபவம்.

■ எனக்கு மிகவும் பிடித்த விஷயம் அந்த ஊர் 'கராஜ் சேல்ஸ்'. (Garage sales). திடீரென சில பேருக்குத் தங்கள் வீட்டிலுள்ள அழகிய பயனுள்ள பொருட்கள் போரடித்துவிடும். வேறு புதிதாக வாங்கலாமே என்று தோன்றும். வீட்டிலிருப்பதை கொள்ளை மலிவாக விற்று விடுவார்கள். இந்த இடத்தில் சேல்ஸ் என்று சாலை ஓரத்திலேயே விளம்பரம் எழுதி ஒட்டி விடுவார்கள். இங்கே என் மேசையின் மீது இருக்கும் பல கலைப் பொருட்கள் அப்படி வாங்கியவைதான். வியாழக்கிழமைகளில் எனக்கு இருப்புக் கொள்ளாது. போய்விடுவேன். கடையில் இருநூறு டாலருக்கு மேல் இருக்கும் பொருட்கள் சில சமயங்களில், நம்ப மாட்டீர்கள் ஒரு டாலருக்கு கிடைக்கும். அவர்களுக்குப் பிடிக்காமல் போவது நமக்குப்பிடிக்கும்.

■ சாலை போக்குவரத்து சிக்னல்களின் அமைப்பு நெடுஞ்சாலைகள் பற்றிய விளம்பரப் பலகைகள் நாடு முழுவதும் ஒரே மாதிரி சீராக இருக்கும். இது எந்த அளவுக்கு வாகனப் பயணிகளுக்கு உறுதுணையாக இருக்கிறது என்பது அனுபவித்துப் பார்த்தால்தான் புரியும். அமெரிக்காவின் மிகப் பெரிய சாதனை இது!



■ சினிமா வேண்டாம் என்றால் முழுக்க முழுக்க அறிவுபூர்வமான விஷயங்களுக்காகவே அங்கே பல டீவி சேனல்கள் இயங்குகின்றன. இங்கே?

■ பெண்களுக்கு



உரிமை மிக அதிகம். கொடுமைப்படுத்தும் கணவன்மார்களுக்கு எதிரே தீவிரமாகப் போராடுகிறார்கள். பாலியல் வன்முறையில் ஈடுபடுபவர்கள் பயங்கர விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும். 'சின்ன வீடு' வைத்துக் கொண்டிருக்கும் — அல்லது வேறு கல்யாணம் செய்து கொண்டிருக்கும் ஆண்களின் முதல் மனைவிகள் ஒன்று சேர்ந்து, தங்களின் மாஜி கணவர்களுக்குப் பாடம் புகட்டி பழி வாங்குகிறார்கள்! இந்த 'தீமை' அடிப்படையாக வைத்து சமீபத்தில் அமெரிக்காவில் 'First wives club' என்ற படம் வெளிவந்து சக்கைப் போடு போட்டுக் கொண்டிருக்கிறது.

கேஸ் போடக் காத்திருக்கிறார்கள்!


■ பள்ளிக் கூடங்களில் உருப்போட்டு எழுதுவது என்கிற விவகாரமே கிடையாது. மனனம் செய்வதெல்லாம் அமெரிக்க மாணவர்களுக்குத் தெரியாத ஒன்று. 'சொந்தமாக மூளையை உபயோகி' இது தான் அரிச்சுவடி. அங்கே பரீட்சை பேப்பரில் வரும் கேள்விகளுக்கு ஒரு உதாரணம்.

"பேப்பர், புத்தகங்களைப் படித்து, மினிசோட்டா நகரத்தையும், ஜப்பானையும் ஒப்பிட்டு ஒரு கட்டுரை எழுது."

■ குழந்தைகளை அடிப்பது பெரும் பாவம் மட்டுமல்ல.... தண்டனைக்குரிய குற்றம் அங்கே. அப்பா அடித்தால் பையன் டெலிபோன் எடுத்து 911 எண்களைச் சுழற்றினால் போதும். போலீஸ் வந்து அப்பா மீது கேஸ் போடும்!

■ அலுவலகங்கள் பெரும்பாலும் காலை ஏழு, ஏழரைக்கே தொடங்கி விடுகின்றன. எனவே சுறுசுறுப்புக்குப் பஞ்சமில்லை. இந்தியாவில் நாம் சோம்பல் முறித்து கொட்டாவி விட்டு எழுந்து பல் துலக்குவதற்கு முன்பே அங்கே அவர்கள் பல மில்லியன் டாலர்களுக்கு பிஸினஸ் முடித்து விடுகிறார்கள்.

■ குப்பை கூளங்களை அகற்றுவதை ஒரு கலையாகவே அமெரிக்க நிர்வாகம் செய்கிறது. நாம் நமது வீட்டு முன்பாக இரண்டு கூடைகள் வைத்து பிளாஸ்டிக், காகிதம் போன்ற குப்பைகளை ஒரு கூடையிலும், மற்ற கழிவுப் பொருட்களை இன்னொன்றிலும் போட



வேண்டும். குப்பை வண்டி வந்து இரண்டையும் தனித்தனியே எடுத்துப் போகும். பிளாஸ்டிக் பேப்பர் போன்றவை 'ரீசைக்கிளிங்' முறையில் மீண்டும் உருமாறி திரும்பவும் விற்பனைக்கு வரும்.

சந்திப்பு : **ராணிமைந்தன்**

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

29

'விச்வம்' என்கிற சப்தத்தினால் பரசுராமர் சொல்லப்படுகிறார். தசாவதாரத்திலே (வாமனாவதாரத்தை அடுத்து) வரக்கூடியவர். இவரை 'பார்கவ நாமா:' என்று அழைப்பது. சாமான்யரால் பார்க்க முடியாதவர் என்று அர்த்தம். பாகவதவதாரத்திலே எத்தனையோ அவதார வகைகள் உண்டு. சாக்ஷாத் அவதாரம், அனுப்ரவேசாவதாரம், ஆவேசாவதாரம் என்று இப்படிப் பல. சாக்ஷாத் அவதாரமென்றால், ராமர், கிருஷ்ணர், நரசிம்ஹர் என்று பிரத்யக்ஷமாய்ப் பார்க்கப்பட்ட அவதாரங்கள். அனுப்ரவேசாவதாரம் என்பது இன்னொரு உருவிலே பகவான் உட்புகுந்து வந்த அவதாரம். வியாஸாவதாரம் என்பது அனுப்ரவேசாவதாரம். இதிலே ஆவேசாவதார வகையைச் சேர்ந்தது பரசுராம அவதாரம்.

இந்த அவதாரத்திலே பகவான் ஆவேசித்து முழுமையாய் நின்று பிரகாசிக்கிறான். இந்த அவதாரம் ஏன் ஆவேசாவதாரமாகிறது என்று பார்த்தோமானால், நித்யம் ஜபம், ஹோமம் பண்ணக்கூடியவானாலே தான் அதைப் பார்க்க முடியுமே யொழிய சாமான்ய ஜனங்களால் பார்க்க முடியாது. அத்தனை தேஜஸ் அந்த அவதாரத்துக்கு!

இருபத்தி மூன்று தலைமுறை க்ஷத்ரிய வம்சங்களைப் பூண்டோடு அழித்தவர் இந்த பரசுராமர்! க்ஷத்ரிய ரத்தத்தினாலே தர்ப்பணம் பண்ணினவர். உலகமெல்லாம் சஞ்சாரம் பண்ணினவர் என்பதாலே விச்வம் என்கிற சப்தத்தினால் இவர் அழைக்கப்படுகிறார்.

பரசுராமரை அடுத்தவன் சாக்ஷாத் விச்வரூபியாய் விளங்கக் கூடிய, விச்வ சப்தத்தினால் சொல்லக்கூடிய ராகவன். அது எப்படித் தெரிகிறது...?

விஷ்ணு சஹஸ்ரநாமத்திலேயே வருகிறது... ராமாவதாரத்தைக் குறிக்கக்கூடிய முக்கியமான, விசேஷமான 16 திருநாமங்கள் வருகின்றன. அதை நன்றாக நாம் கவனிக்க வேண்டும்.

புருஷ ஸூக்த ஹோமம் செய்ய வேண்டும் என்பதை விதிக்கின்ற ரிக் வேதத்தில் கூட பதினாறு ரிக்குகள்- மந்திரங்கள்- இருக்கின்றன. பதினாறு என்பது அத்தனை சிறப்புடையது. பகவான் ராமனும் பதினாறு குணங்களை உடையவன்.

வால்மீகி ராமாயணத்திலே வால்மீகி நாரதரைப் பார்த்துக் கேட்கிறார்: 'பதினாறு குணங்களை உடைய ஒருவன் இருக்கிறானா என்ன?'

அதற்குத்தான் ஸ்ரீ ராமனை முன்நிறுத்தி பதில் சொல்கிறார் நாரதர்: 'குணவான் அவன்; குணக்குன்று அவன்; குணக் கடல் அவன்...'

குணவான் என்று சொல்லும்போது என்ன குணம் சொல்லப்படுகிறது? ஒரு குணத்தைக் காட்டி இந்தக் குணம் உடையவனா? என்று வால்மீகி கேட்கவில்லை... வியாஸரும் அப்படி ஒரேயொரு குணத்தைக் காட்டி பதில் சொல்லவில்லை. அளவிடமுடியாத குணங்களைச் சொன்னார்.

கோவிந்தராஜன் என்பவர் வியாக்யானத்திலே எழுதுகிறார்: 'ஸௌசீல்யம்' என்பதே பகவானின் குணம்- உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்கள் என்று பாராமல் சகலரிடத்திலும் கலந்து நிற்றல். தன் உயர்த்தி பார்ப்பதில்லை பகவான்.


மஹாதேசிக ஸ்வாமிகள், பகவானை 'ஸௌசீல்யமாகிற ஸாகரம்' என்று சொல்கிறார். அத்தனை காருண்யம் அவனுக்கு- தயா சதகத்திலே சொல்கிறார்: 'ஏ, ஏழுமலை பெருமானே... உன் தயை, காருண்யத்தை நினைத்தால் எனக்கு உடம்பு அப்படியே நடுங்கிப் போகிறது...' என்று... அத்தனை கருணை!

குகனுடன் ஐவரானோம் என்று சொன்னானே...; வாத்ஸல்யத்தால் அவனை நனைத்தானே...; சுக்ரீவனுக்காக எதையும் செய்யத் தயாராய் இருந்தானே; யாரோ ஒருத்தி அந்த சபரி- அவளுக்கு உயர்ந்த கதியைத் தந்தானே...!

சபரி எவ்வளவு கெட்டிக்காரி பாருங்கள்! 'பிரபோ, உன் பார்வை என்மேல் பட்டது; அது ஒன்றே எனக்குப் போதும்; உயர்ந்த கதியை அடைந்து கொண்டிருக்கிறேன்; மோக்ஷம் போய்க் கொண்டிருக்கிறேன்' என்று போய்விட்டாள் அவள்!

அதனால்தான் ஸ்வாமி தேசிகன், 'சபரிக்கு மோக்ஷம் தந்தவனே...' என்று சொல்லாமல் 'சபரி மோக்ஷம் போவதற்கு சாக்ஷியாய் நின்றவனே' என்று சொன்னார். மோக்ஷத்துக்கு உண்டான காரியத்தை சபரி பண்ணியிருக்கிறாள். அதனாலே பகவான் அதை அவளுக்குக் கொடுக்க வேண்டியதேயில்லை... அவள்

குறையொன்றுமில்லை...



வெறுமனே அவளைப் பார்த்தபடி நின்றானாம்!

இப்படி சபரி, குசேலர் என்று உதாரணம் சொல்லி பகவானுடைய ஸமச்சீரிய குணத்தை விசேஷமாய்ச் சொல்லலாம். விச்வமூர்த்தியாகிய பரமாத்மா, இப்படி ஸமச்சீர்ய குணவானாக இக்ஷ்வாகு வம்சத்திலே வந்தான்.

ஸ்ஹஸ்ரநாம ரீதியாக அவனுக்குச் சொல்லப்படுகிற குணங்களைப் பார்ப்போம். பதினாறு குணங்களிலே முதல் குணமாகச் சொல்லப்படுவது உத்தம குணம்.

அதாவது, பகவான் இராமபிரான் இருக்கிறானே... அவன் எப்படிப்பட்டவன் என்று கேட்டால் ரூபத்திலும், ஸ்வரூபத்திலும், வாக்கு, நடை, உடை பாவனை என்று எதை எடுத்துக் கொண்டாலும் உத்தமமானவன். அவன் வடிவ அழகை நாம் பார்க்கிறோம். எப்படி இருக்கிறது அந்த அழகு...?

'ஓவியத்தில் எழுதவொண்ணா உருவத்தாய்' என்கிறார் கம்பர்.

வாலி ராமனைப் பார்த்துச் சொல்வதாக வருவது இந்த வாக்கு:

'அடடா! என்ன சுந்தர வடிவம்! ஒரு சித்திரம் எழுதக்கூடியவன் இந்த அழகை எழுத முடியுமா? எத்தனை நாழி எழுதினாலும் கிழித்து கிழித்துப் போட்டுக் கொண்டேயிருக்க வேண்டியதுதான்!

வால்மீகியினுடைய வர்ணனையைப் பாருங்கள்:

'சந்திரகாந்தாநனம் ராமம்!. -சந்திரனைப் போன்று பிரகாசிக்கிறான். புருஷர்களுடைய திருஷ்டி சித்தத்தைக் கூட அபகரிக்கிறான். சமஸ்தத்தையும் துறந்தவர்கள்கூட அவன் தோளை ஆலிங்கனம் செய்து கொள்ள ஆசைப்படுகிறார்களாம்!

எழுத முடியாத அழகு என்று கம்பர் சொன்னதை, 'எழுத முடியும்' என்கிறார் சுவாமி தேசிகன். அது எப்படி என்று கேட்டால், நாமாக எழுத முடியாது. ஆனால், அந்த அழகை அவனே எழுதினால் நம்மாலே அதை அழித்து விட முடியுமா என்ன..?' என்று கேட்கிறார்.

விளையாட்டு என்கிற எழுதுகோலைக் கையிலே எடுத்துக் கொண்டு, காருண்யம் என்கிற மையிலே தோய்த்து, நம் ஹ்ருதயம் என்கிற பலகையிலே, அவனே தன் உருவத்தை எழுதினால், அதை அழிக்க முடியுமா?

வடிவழகிலே உயர்ந்த பரமாத்மா, குணங்களிலும் உயர்ந்தவன்தான்.

தசரத சக்ரவர்த்தி ராமருக்குப் பட்டாபிஷேகம் பண்ண முடிவு செய்து பிரஜைகளை அழைத்துக் கேட்டாராம்! "ஹே மஹா ஜனங்களே! என் குழந்தைக்குப் பட்டாபிஷேகம் பண்ணணும் என்று நினைக்கிறேன். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்..?" என்று.

"தாங்களும் அதையே விரும்புகிறோம். உடனே அந்தக் காரியத்தைச் செய்யுங்கள்..." என்று அத்தனை ஜனங்களும் வேத மந்திரத்தைச் சொல்கிற மாதிரி உடனே பதில் சொன்னார்களாம்.

ஒருத்தருக்கொருத்தர் கலந்து ஆலோசிக்காமல் அத்தனைபேருமே எப்படி இவ்வாறு ஏகமனதாகச் சொன்னார்கள்?

"வெண்கொற்றக் குடை திருமுக மண்டலத்தை மறைக்க, யானை மீது பவனிவரும் அவனை நாங்கள் சேவிக்க இச்சை கொள்கிறோம்..." என்றார்கள்.

அது மாத்திரமல்ல... "அறுபதாயிரம் வருஷம் பரிபாலனம் பண்ணின தள்ளாத கிழவா! இப்போதாவது உனக்கு இந்த எண்ணம் வந்ததே... சீக்கிரம் இறங்கு!" என்றார்களாம்.

இந்த வார்த்தைதான் தசரதனைக் கரீரென்று சுட்டதாம்.

"நான் என்ன தப்பு பண்ணினேன்...? என்னை இறங்கச் செய்வதில் ஏன் இத்தனை ஆவல்...?" என்று கேட்டானாம்.

மக்கள் சொன்னார்கள்: "ஹே ராஜாவே! தாங்கள் தவறாக எண்ணக் கூடாது. தங்கள் ஆட்சியிலே குறை கண்டதாலே இதை நாங்கள் சொல்லவில்லை. தங்கள் மகனிடத்திலே உள்ள குண நிறையைக் கண்டு சொன்ன வார்த்தைகள் இவை..."

முக்கூர் ஸ்ரீமத் அழகிய சிங்கர், ராமாயணத்தில் இந்தக் கட்டத்துக்கு விசேஷமான ஓர் அர்த்தத்தைச் சொல்லுவார்:

'பகவ:' என்ற பதத்தை 'ராஜாவே!' என்று விளியாக நான் மேலே சொன்னேன். சுவாமி தேசிகன் இந்த பகவ: என்கிற பதத்தை 'குணங்கள்' என்கிற சொல்லுக்கு அடைமொழியாக இடம் மாற்றிப் பொருள் சொல்லுவார். 'அரச குணங்கள்- அதாவது அரசனாக இருப்பதற்குரிய அத்தனை தகுதிகளும் கல்யாண குணங்களும்- உடையவன் ராமன்' என்று பொருள்.

சரி, பிரஜைகளின் பதிலைக் கேட்ட தசரதனுக்கு வருத்தம் போய் ஆனந்தம் ஏற்பட்டது. எப்பேர்ப்பட்ட ஆனந்தம் அது என்று பாருங்கள்:

'புத்ரகாமேஷ்டி யாகம் பண்ணி குழந்தையைப் பெற்ற ஆனந்தம், பிற்காலத்தில் அவன் தாடகையை வதம் செய்தபோது விருத்தியடைந்த ஆனந்தம், சிவ தனுஸை முறித்து சீதா கல்யாணம் செய்து கொண்டதைப் பார்த்த போது விளைந்த ஏகமான ஆனந்தம், பரசுராமனை பங்கப்படுத்தியபோது ஏற்பட்ட கரையில்லா களிப்பு... அத்தனை ஆனந்தத்தையும் தூக்கி வேறுபுறம் தள்ளிவிட்டது இந்த ஆனந்தம்! இந்த ஆனந்தத்துக்குச் சமானமேயில்லை. தன் புத்திரன் குணவான் என்று பிறர் சொல்லக் கேட்கும்போது விளையும் ஆனந்தம் அலாதி அல்லவா!

இப்படி உத்தமமான நல்ல பிள்ளையாக அவன் இருந்ததாலே பரர்தி: (உத்தமன்) என்று சஹஸ்ரநாமம் ஸ்ரீராமனைச் சொல்கிறது.

(தொடரும்)

ஏழைகள் படும் அவதி சொல்லி மாளாது.

மறைஞாயநல்லூர், அ. அருள்ராஜ்.

படித்த வாக்காளரும் கைநாட்டுதான்!

●● சங்கீத மும்மூர்த்திகளில் முதன்மையாக விளங்கக்கூடிய தியாகராஜ சுவாமிகளின் பிருந்தாவனம் திருவையாற்றில் சரியான பராமரிப்பு இன்றி மிக மோசமான நிலையில் இருந்து வருகிறது. அதைப் பார்க்க சங்கீதத்தைப் பற்றி அதிகம் தெரியாத என் போன்றவர்களுக்கே மனம் வேதனைப்படுகிறது. வித்வான்கள் கவனிப்பார்களா?

திருச்சி – 18, விளத்தூர் எம். ஹரிஹரன்.

●● பான்பராக், ஜர்தா, குட்கா என்று பல பெயர்களால் அழைக்கப்படும் போதைப் பாக்குகள் உடல்நலத்துக்கும் உள்ளத்துக்கும் ஊறுவிளைவிப்பவை. ஆனால் இவற்றை இன்று பள்ளி சிறார்கள் முதல் கல்லூரி மாணவர் வரை இளைஞர்கள் பயன்படுத்துகிறார்கள். அரசு இவற்றைத் தடைசெய்ய வேண்டும்.

கும்பகோணம், கே. என். பாலகிருஷ்ணன்.

●● கன்னிமரா நூலகத்தில் டோக்கன் கவுண்டரில் புத்தகத்தை ஒருவர் திருப்பித் தந்தார். அந்தப் புத்தகத்தில் இல்லாத ஒரு தாளை வேறு புத்தகத்திலிருந்து ஜெராக்ஸ் எடுத்து இடையில் ஒட்டி வைத்திருந்தார், பிறருக்கு உதவியாக இருக்கட்டுமே என்று. ஆனால் கவுண்டரில் இருந்தவரோ, "யாரைக் கேட்டு இப்படி செய்தே" என்று கோபித்து, ஜெராக்ஸை பிய்த்தெடுத்து திருப்பிக் கொடுத்து விட்டு, புத்தகத்தை மட்டுமே வாங்கினார்! இந்த நூலக சேவை எப்படி!

சென்னை – 5, சு. காந்திராஜ்.

●● சிதம்பரனார் மாவட்டத்தில் உள்ள எங்கள் ஊரில் உள்ளாட்சி தேர்தலின்போது நாலு வாக்குச் சீட்டுகளுக்கும் கையெழுத்துப் போட்டால் நேரமாகிறது என்று அதிகாரிகள், படித்த வாக்காளர்களைக் கூட கை நாட்டு போட வைத்தார்கள்! இது வாக்காளர்களை அவமதிப்பது போல் இல்லையா!

வேம்பார், எஸ். எஸ். வள்ளுவன்.



●● திருத்துறைப்பூண்டியில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியே இரு மருத்துவமனைகள் உள்ளன. கழிப்பிடங்கள் உருப்படியாக இல்லாததால் துண்டால் மூக்கை மூடிக் கொண்டுதான் போக வேண்டும்! இதற்குப் பயந்துதானோ என்னவோ, அரசு மருத்துவர்கள் நோயாளிகளைக் காண வார்டுக்கு வருவது கிடையாது! நோயாளிகள்தான் டாக்டர் இருப்பிடம் சென்று திரும்ப வேண்டும்! போதாக்குறைக்கு ஊசி போட ரூ 2/- குளுகோஸ் பாட்டில் போட ரூ 10/- என்று லஞ்சம் கேட்கிறார்கள். பொது மருத்துவமனையை நாடும்

●● இங்கு ஆவின் நிலையங்களில் சப்ளை செய்யப்படும் பால் – குறிப்பாக பைகளின்றி சப்ளை ஆகும் பால் – மிகவும் தரம் குறைந்தும் அளவு குறைந்தும் இருக்கிறது. போதாக்குறைக்கு தற்போது விலை ஏற்றத்துக்குப் பிறகும் ரூ. 10/- பால் ரூ. 10.50க்கு விற்கப்படுகிறது!

மதுரை – 16. ராஜா.

●● புதுதில்லி பாபாகரக்சிங் மார்க்கில் உள்ள ஒரு குருத்வாராவிலிருந்து, குடியிருப்புப் பகுதி நோக்கி ஒரு நாளைக்கு 20 மணி நேரத்துக்குக் குறையாமல் ஒலி பெருக்கி அலறுகிறது. வீட்டுக்குள் பேசவும் முடியாமல், டி.வி., ரேடியோ எதுவும் கேட்கவும் முடியாமல் தவிக்கிறோம்.

புதுதில்லி – 1, ஏ.பி. நாகராஜன்.

●● அசோக்நகர் நூலகத்துக்குச் சென்றேன். அமைதியான சூழல், அழகான கட்டடம்தான்! ஆனால் இந்நூலக மேஜை நாற்காலிகளில் நூற்றுக் கணக்கான மூட்டைப் பூச்சிகள் குடியேறியுள்ளன! படிக்க அமர்ந்த சற்று நேரத்திலேயே அலறிப் புடைத்துக் கொண்டு ஓட வைக்கின்றன!

சென்னை – 83, ஆர். ஆர். தமன்.

குமுறல்

போட்டிக் கதை - 14

காராச்சேவுப் பொட்டலத்தை அவனிடம் அவன் நீட்டினான். பதிலுக்கு அவனை அவள் முறைத்தாள்.

"இன்னும் எத்தனை நாள் இப்படி ஒவ்வொரு ஞாயித்துக் கிழமையும் காண்டீன்லே காப்பி குடிச்சிட்டு, காராச்சேவு வாங்கிக் கொறிச்சுக்கிட்டு, இப்படி முக்கொம்பிலே வந்து உக்காந்து எந்திரிச்சுப் போயிட்டிருக்கிறது....?"

"என்ன செய்யறது? நானும் சொல்லிப் பார்த்திட்டேன். மிக்சர், பகோடா, எல்லாம் போட மாட்டேங்கிறாங்களே?"

"குமார்! பி சீரியஸ்! எங்க வீட்லே கிரீன் சிக்னல் கிடைச்சு ரெண்டு மாச மாயிடுச்சு... நீங்க என்னடான்னா...."

"லீலா! நான் சொல்றதைக் கேளு..."

"நோ! லீலா, மாலா இதெல்லாம் வேண்டாம். என்னைப் பெத்தவங்க எனக்கு வச்ச பேரு அஞ்சலை! என்னை லவ் பண்ற நீங்க என்பேரையும் லவ் பண்ணித்தான் ஆகணும்!"

"சாரி... ஓ.கே. அஞ்சலை! உங்க வீட்லே உனக்குக் கிரீன் சிக்னல் கிடைச்சாச்சு! எங்க வீட்லே போன வாரம்தான் எனக்கு ஆம்பர் சிக்னல் கிடைச்சிருக்கு! இன்னும் ரெண்டு மாசத்திலே நிச்சயம் எனக்கும் கிரீன் சிக்னல் கிடைச்சிடும்! அது என்ன ரெண்டு மாசம் கணக்குன்னு நீ கேக்கும் முன்னாடி நானே விளக்கமாச் சொல்லிடறேன்."


சொன்னான் குமார் விளக்கமாக... ஆனால் அஞ்சலைக்கு வேம்பாக இருந்தது. அண்ணனாகிய இவன் வெறும் பி.எஸ்ஸியாக ஒரு பெயிண்ட் கம்பெனியில் கெமிஸ்ட்டாக இருப்பதால், இவனைப் புறத்தே யொதுக்கி, எம்.பி.ஏ. முடித்து ஒரு பெரிய நிறுவனத்தில் உதவி நிருவாகியாக இருக்கும் இவன் தம்பியை முற்றுகையிட்டு இன்றனராம் பெண்களைப் பெற்றவர்கள், தம்பிக்கு வழி விடுவதற்காக, இவன் திருமணத்தைச் சீக்கிரம் நடத்தி விட இவன் பெற்றோர் காட்டிய வேகத்திற்கு இவர்களுடைய காதல் 'ப்ரேக்' போட்டு விடவே, தம்பி தன்னை முந்திக் கொள்ளட்டும் என்று கூறிவிட பெற்றோரும் சம்மதித்து விட்டனராம்!

"எதுக்குக் காத்திருக்கணும்? நம்ம விஷயத்தை உங்க வீட்லே சொல்லி, நம்ம கல்யாணத்தை முன்னாடி நடத்திட வேண்டியது தானே?"

"நம்ம விஷயத்தை முழுசாச் சொல்லலே... தம்பி கல்யாணம் முடிஞ்சதும் சொல்லிடறேன். 'எனக்கு நீங்க பெண் பார்க்க வேண்டாம்! நானே பார்த்து வச்சிருக்கேன்'னு மட்டும் எங்க வீட்லே சொல்லியிருக்கேன்."

"அந்தப் பெண் யாரு? என்ன ஜாதி?'ன்னு கேட்டிருப்பாங்களே?"

"யெஸ்..."



"அதெல்லாம் உங்க தம்பி கல்யாணம் முடிஞ்சதுக்கப்புறம் சொல்றதாச் சொல்லியிருக்கிங்க.. அப்படித்தானே?"

சங்கடமாகப் பார்த்தான் குமார்.

"ரிலாக்ஸ் குமார்! இப்பவே சொல்லிட்டா, உங்க தம்பி கல்யாணத்துக்கு இடைஞ்சல் ஏற்படலாம்னு நினைக்கிறீங்க.. இல்லையா?"

"என் தம்பி கல்யாணத்துக்கப்புறம் நிச்சயமாச் சொல்லத்தானே போறேன்!"

"அப்போ... நீங்க ஏதோ செய்யக்கூடாத தப்பான காரியத்தைச் செய்யப் போவதாகவும் அதனாலே உங்க தம்பி கல்யாணம் தடைப்பட்டுப் போகும்னும் நினைக்கிறீங்க..."


"செய்யக் கூடாதுன்னு இதுவரையிலே எல்லாரும் சொல்லிக்கிட்டிருந்ததை இப்போ நான் செய்து காட்டப் போறேன்.. இதை என் தம்பிக்குப் பெண் கொடுக்கப் போறவங்க ஏத்துக்கிடுவாங்கன்னு என்னாலே நிச்சயமாச் சொல்ல முடியாது. அதனாலதான் தாமதிக்கிறேன். ஆனா அவன் கல்யாணம் முடிஞ்ச பிறகு தங்களோட

அழியத் தொடங்கும் அழுத்தமான தடங்கள்

பேரப்பிள்ளைங்க எதிர்காலம் பிரகாசமா இருக்கும்னு தெரிஞ்சுக் கிட்டதும் என்னைப் பெத்தவங்க நிச்சயம் நம்ம கல்யாணத்துக்குச் சம்மதிப்பாங்க!"

"குமார்... நீங்க என்ன சொல்ல வரீங்க?"


தன் விருப்பத்தை, ஆசையை, இலட்சியத்தை விளக்க ஆரம்பித்தான் குமார்.



பொறியியல் கல்லூரியில் சேர வேண்டும் என்ற அவனுடைய வண்ணக் கனவு வானவில்லாய் மறைந்து, பெயிண்ட் கம்பெனியில் வண்ணக் கலவையில் ஈடுபட நேர்ந்து விட்டது. நுழைவுத் தேர்வில் ஐந்து மதிப்பெண்கள் அவன் குறைவாகப் பெற்றதனால்! அதே சமயத்தில் அவனைக் காட்டிலும் குறைவான மதிப்பெண்கள் பெற்றவர்களுக்குப் பொறியியல் கல்லூரியில் சேரும் வாய்ப்புக் கிட்டியது இட ஒதுக்கீட்டுச் சலுகையினால்! அப்போது அவனுள் எழுந்த வெறி எப்படியாவது தன் முதல் குழந்தையை ஆணோ, பெண்ணோ எதுவாயினும், இன்ஜினியராக அல்லது டாக்டராக ஆக்கிவிட வேண்டும் என்பது! இப்போது அதற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது!

நான்கைந்து மாதங்களுக்கு முன்

சத்தியராஜன்



"டாக்டர் ஜோக் அடிக்கிறாரா, இல்லே போலியான்னு புரியலே!"

"எதனால்?"

"காதுல எறும்பு புகுந்துடுச்சுன்னு சொன்னா, இனிப்பான செய்தி ஏதாவது கேட்டிருப்பீங்கங்கறார்!"

— பா. ஜெயக்குமார்

அலுவலக நண்பர்களுடன் கல்லணை சென்றிருந்த குமாருக்கு அங்கே தோழிகளுடன் சுற்றுலா வந்திருந்த அஞ்சலையின் அறிமுகம் கிடைத்தது. அவன் கம்பெனி டைப்பிஸ்ட் அனுராதா, அஞ்சலையை அவனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தாள். அனுராதாவும் அஞ்சலையும் கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர்கள். மறுநாள், அனுராதா அவனிடம், அஞ்சலை ஜாதியில்தான் தாழ்த்தப்பட்டவள் என்றும், வசதியில் உச்சியில் இருப்பவளென்றும், அஞ்சலையின் தந்தைக்கு ஒரு சினிமா தியேட்டரும், ஒரு ரைஸ்மில்லும், மூன்று லாரிகளும், ஐந்து டாக்சிகளும் சொந்தமாக இருக்கின்றன என்றும் கூறியதும், அவன் மனத்துள் மின்னலிட்ட அந்த ஒளியில் அவன் லட்சியத்தை அடைவதற்கான பாதை அவனுக்குத் தெரிந்தது!

அஞ்சலையைச் சந்திக்க விரும்புவதாக அனுராதா மூலம் குமார் தகவல் அனுப்பினான். அரசுப் பொருட்காட்சியில் நிகழ்ந்த அவர்களின் முதல் சந்திப்பின் போது, சுற்றி வளைத்து ஏதேதோ பேசிவிட்டு, முத்தாய்ப்பாக, 'ஐ லவ் யு' என்று அஞ்சலையிடம் சொன்னான் குமார்! தன்னைப் பற்றி எல்லாம் தெரியுமா என்று அஞ்சலை கேட்டதற்கு, அதனால்தான் அவளை அவன் விரும்புவதாகக் குமார் கூறியபோது, அதன் உள்ளர்த்தம் அப்போது அவளுக்குப் புரியவில்லை!

"குமார்! என் ஜாதியைப் பத்தித் தெரிஞ்சதுனாலேதான் என்னை நீங்க லவ் பண்றதா நம்ம முதல் சந்திப்பிலே நீங்க சொன்னதோட முழு அர்த்தமும் இப்பத்தான் எனக்குப் புரியுது!"

"இதிலே என்ன தப்பு? உன்னைக் கல்யாணம் செய்துக்கிட்டு, நம்ம குழந்தை உன் ஜாதின்னு காட்டி அரசாங்கம் கொடுக்கிற சலுகையினாலே நம்ம குழந்தை மேலே வரணும்னு நான் விரும்பறதுல என்ன குற்றம்? கலப்புக் கல்யாணம் செய்துக்கிடறவங்க குழந்தைகளைத் தாயார் ஜாதி, இல்லை தகப்பனார் ஜாதின்னு எப்படியும் காட்டலாமே?"

"குமார்! உங்களை நினைச்சா எனக்குப் பரிதாபமாக இருக்கு. நீங்க சட்டத்தையே சரியா புரிஞ்சுக்கலை. தகப்பனார் ஜாதிதான் குழந்தைக்குன்னு சட்டம் சொல்லுது. இந்த விஷயத்துல பெண்ணுக்கு சமஉரிமை தர இன்னும் சட்டம் தயாராகலே. அப்படியே சட்டம் அனுமதிக்கிறதா வைச்சுக்கிட்டாலும் என்னைக் கல்யாணம் செய்துக்கிடப் போறவர், என் ஜாதியைக் காட்டிச் சலுகை வாங்கிக்கிடறதுலே எனக்கு விருப்பமில்லே! இன்னும் சொல்லப்போனா, நானும் மெடிக்கல் நுழைவுத் தேர்வு எழுதினேன். தாழ்த்தப்பட்ட ஜாதிங்கற முத்திரையோட நான் டெஸ்ட் எழுதலே. அந்த முத்திரை வேண்டாம்னு பொதுப் பட்டியலிலேதான் எழுதினேன்! அதனால் அட்மிஷன் கிடைக்கலே...."

"அதைப் பற்றி நீ கவலைப்படாம இருக்கலாம், ஏன்னா ஜாதியில் தாழ்த்தப்பட்டிருந்தாலும் பொருளாதாரத்தில முன்னேறிய குடும்பம் உன்னுது."

"அது உண்மைதான் குமார். ஆனால் அதையே திருப்பிப் போடவும் செய்யலாம். பொருளாதாரத்தில் ஏழையாக இருந்தாலும் ஜாதியாலும் மனசாலும் உயர்ந்தவனா இருக்கலாமே?"

"நான் அப்படி இல்லேங்கிறியா?"

"ஒரு சம்பவம் சொல்றேன், கேளுங்க, குமார்! என் தம்பி பிளஸ் டூ படிக்கிறான். அவன் வகுப்பிலே ஒரு பையனாலே பரீட்சைப் பணம் கட்ட முடியல்லே... அந்தப் பையன் உங்க ஜாதி. பணம் கட்டாட்டி பரீட்சை எழுத முடியாதுன்னு ஹெட்மாஸ்டராலே -- அவரும் உங்க ஜாதிதான் -- பயமுறுத்தத்தான் முடிஞ்சதே தவிர, அந்தப் பணத்தைத் தாமே கட்டிடலாம்னு அவருக்குத் தோணல்லே! என் தம்பி எங்க வீட்டிலேயிருந்து பணம் வாங்கிட்டுப் போய் அந்தப் பையனுக்காகக் கட்டிட்டான். ஆனா... அந்தப் பையன் இனாமா அந்தப் பணத்தை ஏத்துக்கிடல்லே. பணத்துக்குப் பதிலா ஒரு மாசமா என் தம்பிக்குத் தினமும் பள்ளிக் கூடத்திலே லஞ்ச் டயத்திலே கணக்குச் சொல்லிக் கொடுக்கறான்! அந்தப் பையனும் நீங்களும் ஒரே ஜாதிதான். ஆனா.... நீங்க ரெண்டு பேரும் ஒரே ரகமா? அதனாலே, குமார், நீங்க எதிர்பார்த்தபடி நான் தாழ்த்தப்பட்ட ஜாதியுமில்லை! உங்களை உயர்ந்த ஜாதியா நான் நினைக்கவும் இல்லை. இதையெல்லாம் யோசிக்கும் போது, நீங்க வேறே இடம்தான் பார்க்கணும்!"

அஞ்சலை எழுந்து நடக்க ஆரம்பித்தாள்.

வட்டமேஜை

விளம்பரதாரர்கள் கவனிக்க வேண்டும்...

✉ நரசிம்மராவுக்கு ஜாமீன் மறுக்கப்பட்ட விஷயத்தால், (பின்னர் உயர்நீதிமன்றத்தில் வழங்கப்பட்டுவிட்டாலும்) சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பது இந்திய நீதித்துறை வரலாற்றில் மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது.
சென்னை – 15, ந. இரவிச்சந்திரன்.

✉ 'கல்கி'யின் பெயர்க்காரணம் என்ன என்று கலந்துரையாடலில் விடாப்பிடியாக கேட்டுக் கொண்டே போக, கே.பி. சாரும் பிடிகொடுக்காமலே பதில் சொல்லி நழுவிக் கொண்டார். சரியான விடாக்கண்டன், கொடாக்கண்டன் போல் இருந்தது.
காப்பரத்தாம்பட்டி, கே. ராஜாதிருவேங்கடம்.

✉ 'கல்கி'யின் கலந்துரையாடல் படித்தேன். காட்சி ஒன்று. கரு மட்டும் வித்தியாசமாய் அமைந்த 'கல்கி' ஒரு "தாஜ்மகால்"தான்! சிலர் பார்ப்பார்கள்; சிலர் ரசிப்பார்கள்; சிலர் வெட்டிச் செலவு என்பார்கள், இது அவரவர் பார்வையில் இருக்கிறது!
பு. புளியம்பட்டி, அ. கிருஷ்ணகுமார்.

✉ 'அவ்வை ஷண்முகியில் கமலின் குறுக்கீடு இருந்தது உண்மை' என்று ஒப்புக்கொண்டு அதை நெகட்டிவ்வாக பார்க்காமல் 'பாஸிட்டிவ்'வாக கண்ட இயக்குனர் ரவிக்குமாரின் பேட்டி சுவாரஸ்யம் தந்தது.
மதுரை – 16, எல்.எம். அபிதாட்சயா.

✉ அரசியல் முதல் அனைத்துத் துறைகளிலும் அங்கம் வகித்து அசத்துகிறது தாய்க்குலம். விளையாட்டில் மட்டும் விதிவிலக்கு ஏன்? அரசும், பெற்றோரும், கிரிக்கெட் போர்டும் பெண்கள் கிரிக்கெட்டுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும்.
பவித்திரமாணிக்கம், சொ. நடராசன்.

ரூ. 20 பரிசு பெறும் கடிதம்

✉ 'ரௌத்ரம் பழகு' பற்றிய நூல் விமர்சனம் அந்த நூலைப் போலவே தரமாக இருந்தது. அந்தக் கடைசி வரியில் இருந்த 'விலை'தான் வருத்தத்தைத் தந்தது. அரைமணி நேர டெலிவிஷன் தொடர்களில் ஆயிரம் முறை வந்து கழுத்தறுக்கும் விளம்பரதாரர்கள், இதுபோன்ற நல்ல புத்தகங்களைத் தங்கள் விளம்பரத்துடன் நூலகத்திற்கோ, பள்ளிக்கோ இலவசமாக வழங்கினால் என்ன?
மும்பை-18, மன்மதன்.

✉ விபச்சாரக் குற்றங்களைப் பெருமளவில் குறைத்த பின்பும், மகாபலிபுரத்தில் ஓரினச் சேர்க்கைக்குச் சிறுவர்களை வெளிநாட்டுச் சுற்றுப் பயணிகள் பயன்படுத்தி வருகிற அசிங்கத்தையும் போதைப் பொருள்களின் நடமாட்டம் பற்றியும் கட்டுரையில் படித்தபொழுது ரத்தம் கொதித்தது.
மதுரை – 14, எஸ். வைத்தியநாதன்.

✉ முயன்றால் வெற்றி உறுதி என்பதற்கு நடமாடும் சான்றாகத் திகழும் 'சுபா'வின் வாழ்க்கை, என்னுள்ளே ஓர் உத்வேகத்தை ஏற்படுத்தியது. அவரின் தாய்ப்பாசம் நெஞ்சில் சொல்லொணா உணர்வை மீட்டியது!
பாஸ்டின்நகர், பி. எம். வள்ளி.

✉ பதினாறு வயது மீசைக்கு இப்படியும் கூட பணிவிடை செய்து வளர்க்க முடியுமா! ஒரு மீசைக்காக வேலை கிடைத்திருக்கிறது என்றால் சும்மாவா! கோவிந்தராஜ் மீசையா கொக்கா?
திருவாரூர், க. பழனிமுருகன்.

✉ 'நன்னயம்' சிறுகதை படித்தேன். எங்கு பார்த்தாலும் லஞ்ச ஊழல் என்றாகிவிட்ட தற்போதைய சூழ்நிலையில், அனைவரது கவனத்தையும் ஈர்த்த அற்புதமான சிறுகதை. நல்லவர்கள் இப்பொழுதும் இருக்கிறார்கள் என்பதைப் படிக்கும்பொழுது பெருமையாக உள்ளது.
திருச்சுழி, சுந்தர் அழகேசன்.

✉ தில்லி நியூஸ் வர வர சுவைகூடிக் கொண்டே போகிறது. படிக்கப் படிக்க இனிமையாக உள்ளது.
நாகூர், அன்-ஸாரி.

✉ 'கிழக்கே போகும் ரயில்' சுதாகர் பற்றிய செய்தியில் 87-ல் சுதாகருக்குத் திருமணம் நடந்தது. பன்னிரண்டு வருடங்களுக்குப் பின், (அதாவது எதிர்வரும் 99-ம் ஆண்டு) ஓர் ஆண் குழந்தை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஏன் இந்தத் தவறு?
திருவையாறு, எஸ். சாய்பிரபு.

✉ 'அவசரம் ஓர் அகர உணர்!' – க. தாமரையின் கவிதை அருமை. அழுத்தமான வரிகள்தான் கவிதைக்கு இரண்டாம் பரிசைத் தந்தது. பாராட்டுக்கள்.
தூத்துக்குடி, எஸ். ராமசுப்பிரமணியன்.

பூக்கள் நாளையும்

அனு. உறக்கம் பிடிக்காமல் படுத்திருந்தாள். கண்களை மூடிக் கொண்டிருத்தல், உறக்கம் ஆகாது. இருட்டு, ஒரு பெரிய அட்டைப் பெட்டி போலவும், அதற்குள் அவளும், சபேசனும் படுத்திருக்கிறதாக அவளுக்குத் தோன்றியது. லேசாகக் கண்ணை மட்டும் திறந்து, விடி




விளக்கின் வெளிச்சத்தில், சபேசனைப் பார்த்தாள். இரு கைகளையும் தலைக்குக் கீழே வைத்துக்கொண்டு, மல்லாந்து படுத்து, மிக அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தான். ஒரு குழந்தையைப் போல, நிர்மலமான முகத்துடன், நிச்சிந்தை, நிர்க்கவலை தோன்ற, மெல்லிசாக மூச்சு விட்டுக் கொண்டு அவன் உறங்கியது, அவளுக்கு மிகுந்த எரிச்சலைத் தந்தது.

அவன் மட்டும் எப்படி நிம்மதியாக உறங்கலாம்?

அதுவும், பெண்டாட்டி மறுநாள் காலையில் ஊருக்குப் போகிறாள் என்று தெரிந்த பின்பும், அதுவும் கோபித்துக்கொண்டு போகிறாள் என்று உணர்ந்த பிறகும்... என்ன மனுஷன் இது? எந்த விஷயத்திலும் இப்படித் தளும்பாமல், பொங்காமல், பூரிக்காமல், வாரிப் பூசிக் கொள்ளாமல், இந்த சாமியார்த்தனம் இவனுக்கு எப்படி ஏன் வந்தது. இது அவளது சாபம். வேறென்ன? அந்த முதல் நாள் முதலாக அவன் அப்படித்தான் இருந்தான். அவளும் அவனும் தனியாகச் சந்தித்த அந்த முதல் பகலும் இரவும் கூட. நீண்ட நாள் நண்பனுக்கு விசேஷ மரியாதை வேண்டாம் என்பது போல, பதற்றமும்,

5

பிரபஞ்சன்



மலரும்

பரவசமும் இன்றி, ரொம்பவும் சாவகாசமாக... எதிர்வீட்டுத் தாத்தா, பகல் முழுக்க 'இந்து' படிக்கிற மாதிரி.

பார்சலில் வந்த பரிசுப் பொருளைப் பிரித்துப் பார்க்கிற ஆர்வம், அவசரம், பரபரப்பு இருக்க வேணாமோ? எதுவுமே இல்லாமல் இது என்ன ஜடத்தனம்? பரணில் வைத்திருக்கிற பழைய பத்திரிகை பைண்டிங் மாதிரியாகத் தன்னை வைத்திருக்கிறானே, இது என்ன அநியாயம்? ஆசையாக, கடைக்கு அழைத்துச் சென்று, மனசுக்குப் பிடிக்கிற மாதிரி, ஒரு புடைவை? நல்ல ஓட்டலுக்கு போய் வித்தியாசமாக ஒரு டிபன்? வள்ளிக்கு, ஆபீஸ்காரர்கள் புடைவையும் பட்சணமும், ஏன், மோதிரமும், பவுன் காசுகளுமாகப் பொழிகிறார்களே, எப்படி? அந்த அர்த்தநாரி சார் மாதிரிதானே இவரும், முக்கியமான நாற்காலியில் இருக்கிறார்? எதிலும் பட்டுக்கொள்ளாத தாமரை இலைத் தண்ணீர் மாதிரி, இது என்ன விட்டேற்றித்தனம், இந்த வயசில்? குழந்தைக்குத் தலை நரைத்த மாதிரி?

சபேசன் மேல் கோபமும் எரிச்சலும் மீறிக்கொண்டு வந்தது, அனுவுக்கு. கொஞ்சம் வேகமாகப் புரண்டு படுத்து அசைவை உருவாக்கினாள். அவன் பிரக்ஞை இல்லாமல் உறங்கிக் கொண்டிருந்தான். வலது முழங்கையால், அவன் விலாப்புறத்தை இடித்தாள். அவன்

கண்விழித்தான். புரண்டு அவன் பக்கமாகப் பார்த்து, 'என்னம்மா' என்றான்.

"ஒண்ணுமில்லை... தூக்கத்துல இடிச்சுட்டனாக்கும்" என்றாள் நிஷ்டூரமாக.

சபேசன் எழுந்து அமர்ந்தான்.

"ராத்திரி நீ சாப்பிடலையே, அனு. அது தான் தூக்கம் வரலை. பட்டினி வயித்துல, உறக்கம் பிடிக்காது. எழுந்திரு. கொஞ்சம் போல ரசம் சாதம் சாப்பிடு. நான் அப்பளம் பொறிச்சுத் தர்றேன்."

"வேணாம்" என்றபடி, அவனுக்கு முதுகைக் காட்டியபடி புரண்டு படுத்தாள். அவன், முதுகில் அவிழ்ந்து போயிருந்த பட்டனைப் பொருத்தினான். அவளுக்குச் சிரிப்பும், கூச்சமும் சேர்ந்து எழுந்தது.

"போதும். மணி என்ன?"

"மூணு பத்து. இன்னுமா உறங்கலை நீ? உடம்பு என்னத்துக்கு ஆகும்?"

"ரொம்பத்தான் கவலைப்பட்டாறது. உம்."

"என்னம்மா, இப்படிச் சொல்றே? உன்னைப் பற்றின கவலை எனக்கில்லையா, என்ன?" என்றபடி, அவளைத் தன் பக்கமாகப் புரட்டினான் அவன். புஷ்டியான அவள் முழங்கை, தனியாகச் சிலிர்த்தது. சட்டென்று முகத்தில் செயற்கையான கடுமையை வரவழைத்துக் கொண்டு, அவனைப் பார்த்து, "என்ன" என்றாள்.

"உன் கண்ணுக்குத் தனியாக மை வேணுமா? வேணாம் போல. இமையும், கீழேயும் கடவுளே மை பூசி அனுப்பி வச்ச மாதிரி."

"மூணு மணிக்கு, இது என்ன மை ஆராய்ச்சி?" என்றாள் அவள், முகத்தில் புன்னகை அரும்ப.

"இந்த விடிவிளக்கு வெளிச்சத்துல, வித்தியாசமா இருக்கே. தலைக்கு எண்ணெய் குளிச்சியா, என்ன?"

அவள், அவனிடம் இருந்து விலகிக் கொள்ள நினைத்தாள். நினைத்துக் கொண்டே இருந்தாள்...

சபேசன், அனுவை எழுப்பிக் கொண்டிருந்தான். எங்கோ தொலை தூரத்திலிருந்து அவன் அழைப்பது அவளுக்குக் கேட்டது. அவள் மீண்டாள். சிரமப்பட்டுக் கண் விழித்தாள். சபேசன், காப்பியோடு அவள் முகத்தைப் பார்த்துச் சொன்னான்.


"மணி ஏழரைம்மா. எழுந்திருக்கியானா, காப்பியைக் குடி. இல்லேன்னா, தூங்கு. பிளாஸ்க்லே காப்பியை ஊத்தி வைக்கறேன். இட்லி வார்த்திருக்கேன். சட்னி பண்ணலை. பொடியும் எண்ணெய்யும் இருக்கு. ஊறுகாய் இருக்கு. போட்டுக்கோ..."

அவசரமாகப் போர்த்திக் கொள்ள போர்வைக்குக் கை போயிற்று. அவன், கழுத்து வரை அவளைப் போர்த்தி இருந்தான். அப்படியே எழுந்து குளியல் அறைக்குள் நுழைந்தாள். ஆடையை ஒழுங்குபடுத்திக் கொண்டாள். பல் துலக்கினாள். அப்போதுதான், கண்ணை இருட்டிக் கொண்டு வருவது மாதிரி இருந்தது. உந்திச் சுழியில் இருந்து, வயிற்றுக்குள் பந்தாகச் சுருண்டு, வெளியேறியது மாதிரி.

அவள் வாந்தி எடுத்தாள். ஓங்கரிக்கும் சப்தம் கேட்டு, ஓடி வந்தான். நினைத்து நினைத்து எடுத்துக் கொண்டிருந்தாள், அவள். லேசாக, சுவர் மேல் சரிந்து நின்றாள். 'அனு அனு' என்று சபேசன் அழைத்தது, எங்கோ தூரத்தில் இருந்து அழைப்பது மாதிரி பட்டது. காலனிக்குள்ளே இருந்த டாக்டர் கராலினாவை அழைத்து வந்தான். டாக்டர் சோதனைக்குப் பிறகு, அனு தாயாகப் போவதைச் சொன்னாள்.

'அப்படியா' என்று இருந்தது, அனுவுக்கு. சந்தோஷப்படவும் தோன்றாது படுத்துக் கிடந்தாள், சபேசனின் ஆனந்தத்தைப் பார்த்தபடி! ஊருக்குப் போக என்று அனு கட்டி வைத்த சாமான்களைப் பிரித்து அடுக்கிக் கொண்டிருந்தான் சபேசன்.

காலனிக்கும் ஒரு பொற்காலம் இருந்தது. எந்த பிளாட்டில் என்ன நல்லது கெட்டது நடந்தாலும், காலனிப் பெண்கள், ஜானு மாமி தலைமையில் திரளுவார்கள். யாராவது ஒரு வீட்டில், ஒரு ரெண்டுங்கெட்டான் திரண்டு விடும். பெண்ணுக்கு, நடுவீட்டில் உட்கார வைத்து புட்டு சுத்துகிற காரியம் இருக்குமே? எல்லாப் பெண்களும் வெற்றிலை, பாக்கு, பழம் வாங்குகிற வரைக்கும் மாமி கோஷ்டி இருந்து, சம்பிரமமாய்ப் பண்ணும், சகல காரி



"பண்ருட்டி மாப்பிள்ளை யாச்சேன்னு மாமனார் வீட்டுக்குப் போகும்போது பலாப்பழம் ஒண்ணு வாங்கிட்டுப் போனது தப்பாப் போச்சு!"

"ஏன், என்ன ஆச்சு?"

"நான் அங்கு தங்கியிருந்த மூணு நாளைக்கும் பலாக்கொட்டைக் குழம்பு, பலாக்கொட்டை வறுவல், பலாச்சக்கைக் கூட்டுன்னு போட்டு அனுப்பிச்சுட்டாங்க!"

– மயிலை ந. கணபதி



பரிசை மறுத்த திருமதி சாஸ்திரி!

லால்பகதூர் சாஸ்திரி அவர்களின் மனைவி லலிதா சாஸ்திரி ஒரு சிறந்த கவிஞர். அவர் இயற்றியிருந்த சில பக்திப் பாடல்களை சித்ரகுப்தா இசையமைத்து லதாமங்கேஷ்கர் பாட, சரஸ்வதி ஸ்டோர்ஸ், இசைத்தட்டாக வெளியிட்டது.

என் தந்தையாரும், (ஏ.வி.எம்.) சகோதரி மீனா வீரப்பனும் டெல்லிக்குச் சென்று திருமதி சாஸ்திரியை சந்தித்தார்கள். ஒரு தட்டில் வெற்றிலைப்பாக்கு பழங்களுடன் இசைத் தட்டையும் ஒரு பட்டுப் புடைவையையும் வைத்துக் கொடுத்து, தங்கள் நன்றி யையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொண்டனர். அவரும் பெற்றுக் கொண்டார்.

தந்தையும் சகோதரியும் அவர்கள் தங்கியிருந்த ஹோட்டலுக் குத் திரும்பி வந்து சேர்ந்த உடனேயே திருமதி சாஸ்திரியின் உதவியாளர் ஒருவர் வந்து அன்பளிப்பாக தாங்கள் கொடுத்த பட்டுப் புடைவையைத் திருப்பிக் கொடுத்து விட்டார்.

''நீங்கள் கொடுத்த உடனே மறுத்தால் உங்கள் மனம் கஷ் டப்படும், மரியாதையுமில்லை என்பதால் அப்போதைக்குப் பெற் றுக் கொண்டேன். கணவர் பிரதமராக இருப்பதால் பரிசுப் பொருள் களை ஏற்றுக் கொள்வது சரியல்ல'' என்று விளக்கம் கொடுத் திருந்தார் திருமதி சாஸ்திரி.

– ஏ.வி.எம். சரவணனின் ''முயற்சி திருவினையாக்கும்'' என்ற புத்தகத்திலிருந்து : ம. ஜெயலட்சுமி

●●

யங்களையும். கோமுவுக்குக் கல்யாணம் வந் தது. அக்கௌண்டன்ட் சாஸ்திரிக்கு ஒற் றைக்கு ஒரு பெண் கோமு. அன்றும் வழக்கம் போல், அப்பளம் போட ஒன்று திரண்டார்கள் பெண்கள். வித்யா அத்தை, ரங்கநாயகி மாமி, அவனோட அம்மங்கா, என்று நிறைய பெண் கள். மஞ்சள், சீயக்காய், குண்டு மல்லிகை, வியர்வை நெடி என்று கதம்ப வாசனை கேமரா உள்ளுள் வீசியது. மதியம் சாப்பிட்டு ஒழித்ததும், மொட்டை மாடியில், நிழல் சார் பில் உட்கார்ந்து கொண்டு அப்பளம் போடத் தொடங்கினார்கள். உருண்டையாய்க் கிள்ளி, ஈரத்துணியில் சுற்றி மூடப்பட்ட மாவு, அப்பள மாகத் தொடங்கியது.

கருகுமணி மாதிரி கறுப்பு உளுந்து, பிள்ளை யார் கண் மாதிரி கடலை, பிரண்டை, அளவு உப்பு, வாசனைப் பெருங்காயம், சீரகம், கொஞ் சம் போல் வெந்தயம் என்று இட்டு அரைத்த மாவுக்கு, எண்ணெய் ஸ்நானம் பண்ணியது மாதிரி விளக்கெண்ணெய் என்று சேர்ந்த அப்பள மாவு, அப்படியே தின்னலாம் போல மணம், தெருவில் அடித்தது.

வத்சு மாமியை எல்லோரும் வாயாடி என் பார்கள். வாயாடி என்றால், நிறையப் பேசு பவள் என்று அர்த்தம். இதன் இன்னொரு அர்த்தம், அவள் பேச வேண்டிய அளவுக்குப் பேசுபவள் என்று அர்த்தம். எல்லோரும் வத்சு மாமி போல இருக்க ஆசைப்படுகிறார்கள். துர திருஷ்டம் என்னவெனில், அவர்கள் அனு மதிக்கப்படுவதில்லை.

“ஜானு மாமி... உங்க வீட்டுக்காரர் உங் களை எப்படி வச்சிருந்தார்னு சொல்லீங்களே... அதைச் சொல்லுங்க...”

ஜானு மாமியைப் பார்த்து எல்லோரும், 'சொல்லுங்கோ மாமி சொல்லுங்கோ மாமி' என்று பிடித்துக் கொண்டார்கள்.

“அந்தப் போக்கத்தவன் கதை இப்போ என் னத்துக்கடி? நான் வாழ்ந்து முடிச்சுட்டவள். கடல்லே சேர்ந்த காவேரி. நானே உப்பாயிட் டேன். இப்போ போயி என்னை மஞ்சள் குளிக்கச் சொன்னா, எப்படி?”

''டைம் போகணுமோ வேண்டாமோ? சொல்லுங்கோ, மாமி. ரொம்பத்தான் பிகு.” என்றாள் ரங்கநாயகி மாமி.

''அந்த நடிகை இப்படி ஆடினா, இந்த நடிகை இப்படி ரெண்டு விரற்கடை துணி யைச் சுத்திண்டு ஆடினான்னு பேசினா, சுவா ரஸ்யமா இருக்கும். என்ன மாதிரி கிழங் கட்டை கதையில என்ன சுவாரஸ்யம் இருக் கும்? எரிகிற நெருப்புக்குன்னா சூடு இருக்கும். இது கரிக்கட்டை.... உங்களுக்குத்தான் தெரி யுமே... நான் கலியாணம் கட்டிக்கிட்ட கதை. வாழைப்பழத்தை என் அப்பா வாயிலே திணிச்சார். எவனோ ஒரு பையன், என் கழுத் துல ஏதோ கயித்தைக் கட்டினான். கல்யாணம், கல்யாணம்கிறானே, இதுதான்னு அப்புறமா எனக்குத் தெரிஞ்சது...”

“அப்புறம்?”

“இருடி. பறக்காதே. உனக்குக் கிளைமாக்ஸ் தானே வேணும்.”

“சை. இந்த மாமி ரொம்ப மோசம்டி.”

“பாப்பா... வாயிலே விரல் வச்சா கடிக்கத் தெரியாது.”

“அவ கெடக்கா... நீங்க சொல்லுங்கோ...

உங்க வீட்டுக்காரர் உங்களை எப்படி வச்சுக்கிட்டார்?"

"அந்த அறுதலை, பச்சைக் கிளி மாதிரிதான் என்னை வச்சிருந்தான்."

"பேஷ். அவ்வளவு நைச்சியம் பண்ணி வச்சிருந்தேளாக்கும்."

"நைச்சியமும் இல்லை. நவபாஷாணமும் இல்லை. பச்சைக்கிளின்னா, நெல்லை வாயிலே வாங்கிட்டு, எதையாவது ஒரு சீட்டை எடுத்து அவன் கையிலே கொடுத்துட்டு, சாதுவா கம்பி போட்ட பொந்துல ஒடுங்கிக்கிற பச்சைக்கிளி."

"உங்களோட அந்தரங்க வாழ்க்கையை எங்களோட பகிர்ந்து கொள்ளுங்கள் மாமி..." என்று நிடாத்திரமா சொன்னான் சொர்ணம்.

"அந்தரங்கமாவது, வெங்காயமாவது... எல்லாம் இருட்டு வாழ்க்கைதான். இப்போ மாதிரியா அப்போ? மணி ஒன்பது அடிச்சா... அறைக்குள்ளே போயி தாழ்ப்பா போட்டுக்கிறேளே, அது மாதிரியா? மாமியா, அவ கண்ணுல கொள்ளி வைக்கோ. கண்குத்திப் பாம்பு மாதிரி நான் என்ன தப்பு பண்ணறேன்னே மோப்பம் பிடிக்கிற கிழம், பாத்திரத்தைக் கொஞ்சம் சத்தம் வர்ற மாதிரி வச்சேன்னு வச்சுக்கோ... 'தெரியறது... உன் அப்பன் வீட்டு சீர்னு அகம்பாவம் தெரியறது'ன்னு குத்திக்காட்டும் கிழம். மாமனார் கிழம் ஒண்ணு. ஒரு வார்த்தைக்கு ஒருமுறை 'லொக்'. இருமிண்டே இருக்கும். ராத்திரியும் பகலும் அதுக்கு சிசுருஷை. நடுசாமத்துக்கு எழுந்துண்டு, அடி ஜானு... வெந்நீ கொண்டாங்கும். அப்புறம் என் நாத்தனார் குட்டிகள். ஒரு லம்பாடியும் ஒரு வேலையும் செய்ய மாட்டாளுக. அப்புறம் காத்தவராயன், மதுரைவீரன், பாவாடைராயன், மன்னார்சாமி மாதிரி நாலு தம்பிகள், என்னைக் கட்டிண்ட பாழாப் போவானுக்கு. கோவணம் வேணும்னாக்கூட என்னைத்தான் கூப்பிடுவானுங்க. ராத்திரி ஒழிச்சுப் போட்டு, அப்பாடான்னு நிமிர, மணி பன்னிரண்டைத் தாண்டிடும். அதுக்குள்ளே, இந்த ஆளு, நாலைஞ்சு முறை தண்ணி வேணும்ங்கும்..."

"குறுக்கிட்டுக்கு மன்னிக்கணும்" என்றாள் மோகனா.

"தண்ணி என்னத்துக்கு? அது என்ன தாகம், மாமி. அந்த இடத்தைக் கொஞ்சம் ஆலாபனை பண்ணினாத் தேவலை."

ஒரு 'குபீர்' சிரிப்பு அலை அலையாகக் கிளம்பும்.

"என்ன தாகம்? எத்தனை தரம் குடிச்சாலும் தீராத தாகம். அந்த மனுஷனுக்கே அப்பப்போ தீர்ற தாகம். குருட்டுக் காமம். கையில் சவுக்கைப் பிடிச்சுண்டு, சிங்கத்தை மேய்க்கிற சர்க்கஸ் வேலைக்குத்தான் தப்பா சம்சாரம்னு பேர் வச்சுட்டா..."

"சரி, என்னத்துக்கு உங்க வீட்டுக்காரரைப் பிரிஞ்சேள்..."

"கிருஷ்ணன்னு ஒருத்தன். சின்ன வயசிலேர்ந்து ஒன்னா ஓடிப் பிடிச்சு விளையாடினவன். மூங்கில் குருத்து மாதிரி. அந்தப் பழக்க தோஷத்துல என்னைப் பார்க்க வருவன். அது, தீயை மூட்டிடுச்சு. மாமியாளும், என் நாத்திகளும் பற்ற வச்ச தீ. பொறாமைதான். ஆம்பிளைகளோட கையால் ஆகாத்தனத்துல பிறக்கிற நெருப்பு. என்னைக் கொளுத்திடுச்சு. ஊரே 'கொல்லுன்னு' ஆயிடுச்சு. என் தாலியைப் பிடுங்கிண்டு என்னைத் துரத்தி அடிச்சான் அந்தக் கரியாப் போனவன்."

> **ஆ**யிரம் டானிக்குகள் தராத வலிமையை ஒரு பெண்ணின் காதல் தந்து விடும்.
>
> \- எமர்சன்

"**சா**ர்... சார்" என்று அழைக்கும் குரல் கேட்டுத் திரும்பினார், சுந்தா. யாரும் இல்லை.

சுந்தா, காய்கறிக் கடையில், சுமார் நூற்றுக்கும் மேலான வெண்டைப் பிஞ்சுகளை ஒடித்துப் போட்டுக் கொண்டிருந்த நேரம். காய்கறிக்காரனின் வயிற்றெரிச்சல் எல்லை மீறிக் கொண்டிருந்த வேளை. அதே சமயம், "இப்போதெல்லாம் என்ன காய்கறி விளைகிறது. சத்தும் இல்லாமல், சுவையும் இல்லாமல்?" என்று அவனிடம் இரைந்தும் கொண்டிருந்தார் சுந்தா.

"காய்கறி. நல்லா இல்லைன்னா, நான் என்ன பண்ணட்டும், சாமி?" என்றான் கடைக்காரன்.

"விக்கிறது யார், நீதானேடா?"

"சாமி. நான் விக்கிறவன் மாத்திரம்தான். விளைச்சல் பண்றவன், நான் இல்லை."

"அதைப் பற்றி எனக்கென்ன? காசு வாங்கறவன் நீதானே? ஊகும்... இது என்ன இழவு நாடோ? ஒரு ஒழுங்கு இல்லை. ஒரு நியாயம் இல்லை. கூடிய சீக்கிரம், நாமெல்லாம் குகைக்கே போயிடுவம்டா. இடுப்பிலே, தழையைக் கட்டிண்டு, 'லம்பரலம்பா லம்பாஹோ'ன்னு நெருப்பைச் சுற்றி டான்ஸ் பண்ணிண்டு இருக்கப் போறோம். பார்த்துண்டே இரு..."

இம்முறையும் "சார்... சார்" என்கிற அழைக்கும் குரல், அவரைச் சிரமப்படுத்தியது. திரும்பினார். எதிர்ச்சாரியில், கௌரவமான தோற்றத்

நுடன் ஒரு மனிதர் நின்றுகொண்டிருந்தார். 'மாருதி'யை விட்டு இறங்கி, இவர் பக்கம் பார்த்துக் கொண்டிருந்தார். இவர் திரும்பியதும், "வணக்கம் சார்" என்றார் அந்த மனிதர்.

"என்னையா?" என்றார் சுந்தா.

"இருங்கோ, வந்துட்டேன்" என்றவர், சுந்தா அருகில் வந்து நின்றார்.

"சார், சுந்தாதானே? உங்களோட 'கொலீக்' ராமவதனம் ஞாபகம் இருக்கா சார்? என்னோட அண்ணாதான் அவர்! கூடப் பிறந்த அண்ணா. நீங்க கூட எங்க வீட்டுக்கு வந்திருக்கீங்க. கலாக்ஷேத்திராவுக்கு பக்கத்துல இருக்கிற வீடு."

"ஓ... ராமவதனம் பிரதரா? அடடாடா... ராமவதனம், என் உயிர் நண்பனாச்சே... அவன் போனது, எனக்கு ஒரு கையே போனது மாதிரி ஆயிடுச்சே. அடடா... நீங்க போலீஸ்லே வேலைலே இருக்கீங்க. இல்லையா.. கடைசியா, நான் உங்க வீட்டுக்கு வந்து காப்பி சாப்பிட்டு பேசிக்கிட்டு இருந்ததுக்கு நாலாம்நாள் ராமவதனம் ஹார்ட் அட்டாக்கிலே போயிட்டான்... ச்.. ச்..ச்.. என்ன அபூர்வமான மனுஷன்? என்ன டிஸிப்ளின்... என்ன ஸ்டெரியிட் ஃபார்வர்ட்..."

அந்த மனிதர், சுந்தாவின் கையைப் பிடித்துக் கொண்டார்.

"சாரைப் பார்த்தா என் அண்ணாவைப் பார்க்கிற மாதிரி இருக்கு. தயவு பண்ணி, எங்க வீட்டுக்கு வந்துட்டுப் போகணும்... நானே உங்களை உங்க வீட்டுல டிராப் பண்றேன்."

சுந்தா நெகிழ்ந்து போனார்.

"தம்பி... இவ்வளவு சொல்லணுமா, நீங்க? உங்களுக்காக நான் என்ன வேணாலும் செய்யலாமே... வாங்கோ... போகலாம்..."

வீடு போய்ச் சேர்ந்ததும், ராமவதனம் படத்தைப் பார்த்துக் கண்கலங்கினார், சுந்தா.

"தம்பி... மூர்த்தி இல்லையா, உங்க பேர்?"

"ஆமாம்."

"ராமவதனம் குடும்பம் என்னாச்சு?"

அவர்கள் பூர்வீகமான தஞ்சாவூருக்குப் போய்ச் சேர்ந்த கதையைச் சொன்னார் மூர்த்தி. காப்பி வந்தது. சாப்பிட்டார் சுந்தா.

"எல்லோரும் நன்னா இருங்க... வரட்டுமா... சுபமஸ்து" என்றபடி எழுந்த சுந்தாவை அமர வைத்தார் மூர்த்தி.

"ஒரு சமாச்சாரம். பெரியவர் வருத்தப் படக்கூடாது."

"சே... சே... சொல்லுங்கோ. ராமவதனம் தம்பி எனக்கும் தம்பிதான்."

"அந்த உரிமையிலதான் சொல்றேன். உங்களுக்கு ஜனனின்னு ஒரு பெண் இருக்காளா?"

"ஆமா... இருக்கா... காலேஜ்ல படிச்சுண்டு இருக்கா... என்ன அவளுக்கு..."

"இல்லை... அவளை போன வாரம்



"என்னங்க உங்களை, நீங்களே காணவில்லைன்னு போட்டோவைக் கொடுத்து விளம்பரம் பண்ணச் சொல்றீங்க?"

"பின்ன என்னங்க பண்றது. வீட்டை விட்டு ஓடிவந்து இவ்வளவு நாளாகியும், வீட்டுலையிருந்து யாரும் என்னைக் காணலைன்னு விளம்பரம் பண்ணலையே அதான்..."

– சொக்கம்பட்டி தேவதாசன்

மகாபலிபுரத்துல..."

"மகாபலிபுரத்துல...?"

"ஒரு கெஸ்ட் ஹவுசில ஒரு பையனோட பார்த்தேன்... காதல்னு தெரியுது... பையன் கிறிஸ்துவப் பையன்.. இந்தக் காலத்துல இதெல்லாம் ரொம்ப சகஜம் சார்... நாம்ப கொஞ்சம் ஜாக்கிரதையா இருந்தா நல்லது? அதைச் சொல்லத்தான் உங்களைப் பார்க்கணும்னு இருந்தேன்.. சார்... சார்... என்ன ஒரு மாதிரி இருக்கீங்க... சார்... என்னாச்சு..."

சுந்தா ஒருவழியாக வீடு வந்து சேர்ந்தார். தேவகியிடம் பையைக் கடாசினார்.

"என்ன ஒரு மாதிரி" என்றாள் தேவகி.

"இந்த வீட்டுல எல்லாமே ஒரு மாதிரி தானே இருக்கீங்க... ஜனனி எங்கே?"

"யாரையோ ஒரு பிரண்டைப் பார்க்கணும்னு போயிருக்கா..."

"ஆம்பிளை பிரண்டையா, பொம்பளை பிரண்டையா?"

"என்ன என்னென்னமோ பேசறீங்க?"

சுந்தா அறைக்குள் போய்க் கட்டிலில் அமர்ந்தார். மின்விசிறியைப் போட்டார். ஜன்னலைத் திறந்து வைத்துக் கொண்டார். தெரு இருட்டிக் கொண்டு வந்தது.

எங்கு நோக்கினும் இருட்டு... சூரியர்களோ, சந்திரர்களோ, காணாமல் போனது மாதிரி, இருட்டு.. எல்லா மனுசர்களிடம் எல்லா மனசுகளிலும் இருட்டு...

அவருக்கு அழுகை வந்தது. திடுமென எழுந்தார். ஜன்னலை மூடிக் கொண்டார். டிராயரைத் திறந்து, தூக்க மாத்திரைகளை எடுத்தார். மண் ஜாடியில் இருந்து தண்ணீரை மொண்டு, ஒவ்வொரு மாத்திரையாகப் போட்டுக் கொண்டு விழுங்கினார். விளக்கை அணைத்துக் கொண்டார். தான் அடுத்த சூரியோதயத்தைப் பார்க்கப் போவதில்லை என்கிற நிம்மதியில் படுத்தார்...

(தொடரும்)

எதிர்நீச்சல் : பேராசிரியர் மா. நன்னன்

எமர்ஜென்சி நேரம். கலைஞர் ஆட்சியும் கவிழ்க்கப் பட்டு விட்டது. வள்ளுவர் கோட்டத்தில் 'திருக்குறள் மாநாடு' நடை பெறுகிறது. கி.வா.ஜ., அகிலன், நா.பா. போன்ற பலர் கலந்து கொண்ட மாநாடு. எப்படியோ திசை திரும்பலாய் வள்ளுவரை விட்டு விட்டுக் கலைஞரைத் தாக்கிச் சிலர் பேசுகிறார்கள். குழப்பம். அடிதடி... கி.வா.ஜ. உட்படத் தாக்கப்படுகிறார்கள். அந்த ஆய்வரங்கில் அரசு தரப்பில் பார்வையாளராக, அப்போது மாநிலக் கல்லூரிப் பேராசிரியராக இருந்த நன்னன் இருக்க நேர்கிறது.

அரங்கில் நிகழ்ந்த 'விரும்பத்தகாத வன்முறை' உட்பட அனைத்தையும் எழுதி அரசுக்கு அனுப்பி வைக்கிறார் நன்னன். ஆனால், அவருக்கு வேண்டாத 'யாரோ' இந்தக் கலவரம், அடிதடியையே தூண்டி விட்டவர் நன்னன்தான் என்று நேரடியாக மத்திய அரசுக்குப் புகார் அனுப்பி வைக் கிறார்கள். தமிழ்நாடு விவகாரங்களைக் கவனித்து வந்த ஓம்மேத்தா, புகாரை இங்கு அனுப்ப, பிரச்னையாகி விடுகிறது. விளக்கம் கேட்கிறார்கள்.

நான்கு நாட்கள் மிகுந்த மனவேதனையில் உழன்றார் நன்னன். 'மிகவும் அமைதியாகச் செயல்படும் தம்மீதா இப்படி ஓர் அவப் பெயர்?' என்று...

கி.வா.ஜ. அவர்களின் இல்லத்துக்குப் போனார். உள்ளே நுழையும்போதே, ஏதோ ஒரு மதச்சடங்கில் ஈடுபட்டிருந்த கி.வா.ஜ., கவனித்து விட்டு அப்படியே எழுந்து வந்து, "வாங்கோ... வாங்கோ" என்று வரவேற்றார்.

"என்ன செய்யணும்?" என்று கி.வா.ஜ. கேட்கிறார். "இல்லே... இப்படி ஒரு பழி. நான் ஆட்களை ஏவி விட்டுத் தங்களையும் மற்றவர் களையும் தாக்கச் சொன்னதாய்..." என்று நன்னன் தொடங்கும்போதே இடைமறித்தார் கி.வா.ஜ., "சிவ... சிவா" என்று காதுகளைப் பொத்திக் கொண்டு சொன்னது... "நன்னன்... நீங்க ரேஷனலிஸ்ட்டுன்னு தெரியும். ஆனா சான்றோராச்சே... என்னைப் போடுங்கோ சாட் சியா. நான் சொல்றேன்..." என்று பரிவோடு சொல்லிவிட்டு அப்படியே எழுதியும் அனுப் பினார். அவ்வாறே அகிலனும் கைகொடுத்தார்.

எமர்ஜென்ஸி காலக் கொடுமைகளில், இதுபோன்று மனிதாபிமானம் வெளிப்பட்ட அனுபவத்தை விளக்கினார் நன்னன்.

இன்றைக்கு, காந்தக் கண்களோடு "வாழ்க்கைக் கல்விப்" பாடங் களைத் தொலைக்காட்சியில் வழங்குவதன் மூலம் நன்னன் 'நண்டு சிண்டு' முதல் அனைவருக்குமே அறிமுக மான பெரியவர். இவருடைய ஆரம்ப கால நிலையும், இப்போது அடைந்துள்ள உயர்நிலை யும் ஒப்புநோக்கிப் பார்க்கவே முடியாத ஒன்று.

தென்னாற்காடு மாவட்டத்தில், விருத் தாசலம் அருகில் உள்ள காவனூர்தான் திருஞானசம்பந்தம் என்கிற இப்போதைய நன்னன் பிறந்த ஊர். அப்பா மாணிக்கம். ஆழ்ந்த இறைப்பற்றுள்ள சைவக் குடும்பம். அப்போதெல்லாம் வெள்ளாறு கரைபுரண்டு ஓடுவது அடிக்கடி நிகழும். எல்லாக் கிராமங் களிலுமே மூன்றாம் வகுப்பு வரைதான். அரிதாகத்தான் எட்டாம் வகுப்பு வரை உண்டு.

சொந்த ஊர்த் தொடக்கப் பள்ளிக்காரர்

வசதியைவிட

களுக்கும் நன்னன் குடும்பத்தாருக்கும் பகை. எனவே அந்தப் பள்ளியில் சேர முடியாது. ஏழாவது வயதில் தாயாரின் பிறந்த ஊரான இனிமங்கலத்தில், மாமி, மாமன் பராமரிப்பில் படிக்கப் போனார். ஆனால் பண்டரி பக்த ரான மாமா அடிக்கடி யாத்திரைக்குச் சொல் லாமல் கொள்ளாமல் போய் விடுவார். அந்த நேரங்களில் மாமா குடும்பத்தில் அழுகையும் வேதனையுமாக இருக்கும். நன்னனுக்கு இது பிடிக்காமல் காவனூருக்கு அடிக்கடி ஓடி வந்து விடுவார்.

ஒருவழியாக மூன்றாம் வகுப்பை முடித்து, அப்புறமும் ஆறு தாண்டி, ஸ்ரீமுஷ்ணம் போய் போர்டு பள்ளிக்கூடத்தில் எட்டாம் வகுப்பு வரை படித்து முடித்தபோது பதினான்கு வயதாகிவிட்டது. காவனூரிலிருந்து மூன்று மைல் வெறுங்காலுடன் நடந்துதான் போய் வர வேண்டும். ஆற்றில் வெள்ளம் வந்து விட்டால் தலைக்கு மேலே புத்தகம் சிலேட்டுடன் நீந்திக் கடக்க வேண்டும்.

அப்புறம் வேளாண்மைக்கு உதவி, மாடு மேய்ப்பது, ஏர்பிடிப்பது என்று எல்லா விவ சாய வேலையும் அத்துபடி. ஆலைகள் வராத காலம் என்பதால் கரும்பைச் சாறு பிழிந்து காய்ச்சி வெல்லச் சர்க்கரை தேய்த்து, உருண் டையாக வெல்லம் பிடிப்பார்கள். ஒரு மூட்டை வெல்லம் எட்டு ரூபாய்க்கு அதுவும் சிதம்பரம் போய்த்தான் மண்டியில் தரவேண்டும். இரட்டை மாட்டு வண்டி கட்டிக் கொண்டு அப்பா சிதம்பரம் மண்டிக்குப் போவார். ஒரு

வண்டியில் ஏழெட்டு மூட்டைகள்தான் ஏற்ற முடியும். அந்தப் பணமும் தவணையில்தான் கிடைக்கும்.

ஒருமுறை வெல்ல மூட்டையோடு மண்டிக்குப் போன அப்பாவுடன் சிறுவன் ஞானசம்பந்தமும் போனான். அவனை சிதம்பரத்தில் ஒரு வீட்டுத் திண்ணையில் விட்டு விட்டு மண்டிக்குச் சென்றார் அப்பா... சிறுவனைக் கவனித்த அந்த வீட்டுக்காரருக்கு என்ன தோன்றியதோ? அப்பா வந்ததும் "பையனை ஏன் படிக்க விடல்லே?" என்று கேட்டார். அவர் அண்ணாமலை பல்கலையில் தமிழ்ப் பேராசிரியராக இருந்த மன்னை சோமசுந்தரம் பிள்ளை. அப்பா குடும்பச் சூழல், வேளாண் தொழில் என்றெல்லாம் சொன்னாலும், படித்தால் படிக்கட்டும் என்று சம்மதித்தார்.

சிதம்பரம் நகரமே திருஞானசம்பந்தத்துக்குப் புதுமையாகத் தோன்றியது. மின்விளக்குகள், பேருந்துகள் என்று பிரமிப்பு. பெற்றவர்களை விட்டு விட்டுத் தனியாக இருப்பதும் என்பதும் ஒரு புது அனுபவம். அப்பா, பையனைப் படிக்கச் சொல்லிவிட்டு முக்கால் ரூபாயில் ஒரு டிரங்குப் பெட்டி, கோரைப்பாய்; தலையணை, வேட்டி துண்டு, குட்டி லாந்தர், மண்ணெண்ணெய் பாட்டில் எல்லாவற்றையும் வெல்லம் விற்ற காசில் வாங்கிக் கொடுத்து விட்டுப் போனார்.

அம்மா 'வராகனுக்கு வீசம்' என்கிற கணக்கில் தம்முடைய சேமிப்பை வட்டிக்கு விட்டு, அதில் வந்த பணத்தில் ஐந்து ரூபாயைப் பையன் படிப்புக்காக அனுப்பி வைத்தார். (வராகன் என்பது மூன்றரை ரூபாய். வீசம் என்பது இன்றைய ஆறு காசு).

பேராசிரியர் வீட்டுக்கு எதிர்வீட்டுத் திண்ணையில் தங்கிக் கொள்வது; பெட்டி மற்ற உடைமைகளை அந்த வீட்டின் கதவுக்குப் பின்னால் வைத்துக் கொள்வது; இருபத்து நாலு மணி நேரமும் தண்ணீர் கொட்டும் குழாயில்

முயற்சிதான் முக்கியம்!



தாகமெடுத்தால் குடித்துக் கொள்வது. மாதம் ஐந்து ரூபாய் கட்டணத்தில் பக்கத்துத் தெருவில் ஒரு அம்மாள் மூன்று வேளை சோறு போட்டார்.

தினமும் காலையில் பழைய சோறுதான். அமாவாசை போன்ற நாட்களில் மட்டும் அபூர்வமாகப் பலகாரம் கிடைக்கும். ஞானப்பிரகாசம் என்று ஒரு குளம் இருந்தது. அதில், அல்லது பாலமான் கால் வாயில் குளித்துத் துணிகளைத் நுவைத்துக் கொள்வது –

இந்த வசதிகளோடு சிதம்பரத்தில் ராமானுஜ வித்யா சாலை என்ற பள்ளியில் இலவசமாகப் பயிற்சி கிடைத்தது. நுழைவுத் தேர்வு ஒன்றுக்கு அங்கு சொல்லிக் கொடுப்பார்கள். பழைய இண்டர் தரத்துத் தேர்வு அது. அதில் தேர்ச்சி பெற்றால் அண்ணாமலையில் வித்துவான் பட்டப் படிப்பில் சேர்த்துக் கொள்வார்கள்.

திருஞானசம்பந்தம் நுழைவுத் தேர்வில் முதல் ராங்க் வாங்கித் தேர்ச்சி பெற்றது முக்கியமான திருப்பம். அதன் பலனாக வித்துவான் படிப்பு நாலு ஆண்டுக்காலமும் மாதம் பத்து ரூபாய் உதவித் தொகையும் கிடைத்தது.



நெற்றியடி!

இதுவரை ஏழெட்டுக் கட்சிகள் மாறிவிட்டதாக அஜித்சிங் மீது கூறப்படும் புகார்களுக்கு அவர் அளித்த பதில்:

"என்னைப் பொருத்த வரையில் நாட்டில் இரண்டு கட்சிகள்தான் உண்டு. ஒன்று ஆளுங்கட்சி, மற்றொன்று எதிர்க்கட்சி. நான் இந்த இரண்டு கட்சிகளுக்குள் தான் மாறிக் கொண்டிருக்கிறேன்."

– அ. ஷண்முகசுந்தரம்

முதல் ஆண்டு வித்துவான் தேர்விலும் நல்ல தேர்ச்சி. தமிழ்த் தாத்தா உ.வே.சா. ஏற்பாடு செய்திருந்த ஐம்பது ரூபாய்ப் புத்தகப் பரிசு கிடைத்தது. "அவ்வளவு ரூபாய்க்கு என்னென்ன நூல்கள் வாங்குவது? இறுதியாண்டுத் தேர்வுக்கான நூல்களைப் பட்டியல் போட்டுக் கொடுத்தேன். அறுபது ரூபாயைத் தாண்டி விட்டது. ஆனாலும் உ.வே.சா. அவ்வளவு நூல்களையும் வழங்கி விட்டார். ஆண்டு விழாவில் என் பெயர் சொல்லிப் பரிசு பெற அழைத்தார்கள். என்னை விட உயரமாக இருந்தது நூல் அடுக்கு. 'சும்மாத் தொட்டுட்டுப் போ... போறும்' என்றார்கள். என் அறைக்குப் புத்தகங்களை ஒரு பணியாள் கொண்டுவந்து கொடுத்தார்" என்கிறார் நன்னன்.

அது தமிழிசை இயக்கம் தோன்றியிருந்த காலம். தண்டபாணி தேசிகர் இசை நிகழ்ச்சி நடத்தியபோது, எதிர்ப்பாளர்கள் அவரைப் பாட விடாமல் கெடுத்தார்கள். உடனே தமிழ் இசை ஆதரவு அணியினர் மதுரை மணி அய்யர், டைகர் வரதாச்சாரி போன்றவர்களைப் பாட விடாமல் தடுக்க முயன்றார்கள். அப்போதுதான் தமிழ்மொழி என்கிற உணர்வில் பலர் ஒன்றுபட்டார்கள். சுயமரியாதைக் கட்சியின் மீது ஈடுபாடு ஏற்பட்டது. இப்போதைய நாவலர், பேராசிரியர் போன்றவர்களின் நட்புக் கிடைத்தது. திருநீற்றில் பதினாறு பட்டையணிந்து தீவிர சைவராக இருந்த திருஞானசம்பந்தம் அந்த இளைஞர்களோடு கலந்து பழகியதில் பக்தி உணர்வு பின்னடைந்தது.

தாம் பகுத்தறிவாளராக மாறிய அனுபவத்தைச் சொல்கிறார் நன்னன். "கல்லூரியில் பேசப் பெரியாரை அழைத்தார்கள். அப்போது கல்லூரியில் சொன்ன நிபந்தனைகள் : 'கடவுளைத் திட்டக் கூடாது; காங்கிரசைத் திட்டக் கூடாது; பிராமணர்களை இழிவு செய்து பேசக் கூடாது.' பெரியார் வந்தபின் அண்ணா வந்தார். 'ஆற்றோரம்' என்ற தலைப்புத் தந்து அவருக்கும் ஓர் எல்லை விதித்தார்கள் எதிர்ப்பாளர்கள். அண்ணா, நைல் நதிக்கரை தொடங்கி, கங்கை, காவிரி என்று உலகம் முழுவதிலுமான நதிக்கரை நாகரிகங்கள் பற்றிப் பேசிய அற்புதமான பேச்சு அது. எதிர்த்தவர்களே அண்ணாவின் பேச்சில் மயங்கி, ஆங்கிலத் துறையில் பேச அழைத்தார்கள்!"

பின்னர் மறைமலை அடிகள் கல்லூரிக்குப் பேச வந்தபோதுதான் பெயர் மாற்றும் எண்ணம் வந்ததாம். "நல்ல தமிழ்ப் பெயர், அதுவும் சுருக்கமாக இருக்கவேண்டும் என்று இலக்கியப் பெயர்களாகப் பார்த்து நன்னன் என்று எடுத்துக் கொண்டேன். நாவலர் நெடுஞ்செழியன், அன்பழகன் இன்னும் மூவர்... ஆக ஆறு பேர் ஒரே நாளில் பெயர் மாற்றிக் கொண்டு ஒளிப்படமும் எடுத்துக் கொண்டோம். அந்தப் படத்துக்குக் கூடக் 'கடற் பாறைகள்' என்று தலைப்புக் கொடுத்தோம்" என்கிறார் நன்னன்.

முதலில் திருச்சி மாவட்டம் லப்பைக் குடிக்காட்டில் தமிழாசிரியர். அப்புறம், தாம் படித்த ஸ்ரீமுஷ்ணம் பள்ளியில். அதன் பிறகு கோயம்புத்தூர் அரசு கல்லூரியோடு இணைந்த உயர் பள்ளியில் தமிழாசிரியர். அதற்கு 'செகண்டரி டிபார்ட்மெண்ட்' என்று பெயர்.

வேலை பார்த்துக் கொண்டே படிப்படியாக இண்டர்மீடியட், பட்டவகுப்பு, எம்.ஏ., என்று உயர்ந்து, எதிர்ப்புகளுக்கு இடையிலும் மேலே வர முடிந்தது என்றால் உழைப்பே அடிப்படைக் காரணம். நேரடித் தேர்வில் உதவிப் பேராசிரியராகி, ஆட்சி மொழித்துறைத் தலைவர் என்று உயர்ந்து, இன்றும் தொலைக் காட்சித் தொடர்பில் பணியாற்றிக் கொண்டிருக்கும் திறமையான ஆசிரியர் நன்னன்.

ஆரம்ப நாட்களில், நன்னன் வகுப்பு எடுக்கும் போதும் சரி கூட்டங்களில் பேசும் போதும் சரி பெரிதாக இரைந்து பேசுவார். ஒருநாள் கோவையில் பாடம் நடத்தும்போது கவனித்தார் தலைமையாசிரியர் வீரராகவய்யர். பாலக்காட்டுக்காரர். அவர் நன்னனை எச்சரித்தார்.

"யேய்...! ஏன் இப்படிக் கத்தறே...' தொண்டை போயிடும் தெரிஞ்சுக்கோ... கடைசி பெஞ்சிலே ஒக்காந்திருக்கானே ஒர்த்தன். அவனுக்குக் கேட்டாப் போறும்." ஆசிரியராக முறைப்படி பயிற்சி பெறாத தமக்கு இந்த அறிவுரை கண்திறந்தது என்கிறார் நன்னன். அதன் பிறகு நன்னன் அதிர்ந்து பேசி, பாடம் நடத்தியதில்லை. இப்போது பார்க்கும் 'வாழ்க்கைக் கல்வி'யிலும் அதே அமைதிதான்.

- சுப்ர.பாலன்



ஜாலி போட்டி - 18

பரிசு ரூ. 5000/-

மழைக்காலம் இன்னமும் தொடர்ந்து கொண்டிருப்பதால் மழை பற்றியே ஒரு போட்டி. போட்டி ரொம்பவும் எளிமையானதுதான்.

கீழே ஐந்து வார்த்தைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அந்த வார்த்தைகளெல்லாம் மழை தொடர்பான சினிமா பாடல்களின் முதல்வரிகளில் வரும் வார்த்தைகள்.

நீங்கள் செய்ய வேண்டியது என்ன தெரியுமா?

நாங்கள் கொடுத்திருக்கும் வார்த்தைகளுக்கு முன்னால் வரும் வார்த்தைகள் என்ன என்று கண்டறிந்து எழுத வேண்டும்.

ஐந்து பாடல்களின் முதல் வரிகளில் வரும் வார்த்தைகளையும் கண்டு பிடித்து, கீழுள்ள கூப்பனில் எழுதி எங்களுக்கு அனுப்புங்கள். நாங்கள் வைத்துள்ள விடைகளுடன் ஒத்துப் போகிற விடைகளை எழுதும் நபருக்கு ரூ.5000/- பரிசு!

பலர் சரியாக எழுதினால் குலுக்கல் முறையில் ஒருவருக்கே ரூ.5000/-

முடிவு தேதி: 9.12.96

ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

ஜாலி போட்டி - 18

பாடலின் ஐந்து வரிகள்:

1) .... பந்தலிட்டு

2) .... வானம்

3) .... பொழிகிறது

4) .... மழைத்துளி

5) .... பாக்குது

பெயர்: ....

முகவரி: ....

....

....

நடந்த விஷயங்கள்;

நமது கமெண்ட்கள்!

த.மா.கா.வின் உள்ளாட்சி மன்ற மக்கள் பிரதிநிதிகள் மாநாடு சென்ற வாரம் ஈரோட்டில் நடந்தது. அதில் கிடைத்த வித்தியாசமான காட்சிகளை புகைப்படக்காரர் 'சாய்வர்ஷா' கிளிக் செய்தார். நாம் சில்மிஷம் செய்திருக்கிறோம்_



ஒரு தியாகி இன்னமும் காந்தியை ஞாபகம் வைத்துக் கொண்டு, மகாத்மாவின் பட மொன்றைத் தமக்குப் பரிசளிப் பதைப் பார்த்து மூப்பனாரே ஷாக் ஆகிவிட்டார் போலிருக்கிறது!



காங்கிரஸிலேயே இருந்திருந் தால் இப்படியெல்லாம் குழாய்த் தண்ணீரில் கொப்பளிக்கும் நிலை வந்திருக்குமா? பன்னீரில் கொப்பளித்திருக்கலாமே!




"ஐயய்யோ, காலில் விழும் கலாசாரம் காலை வாரும் கலாசாரமாகி விட்டதே! மூப்பனார் அவர்களே உஷாராக இருங்கள்!



நிதியமைச்சரல்லவா! அதனால்தான் பாக்கெட்டில் கை விட்ட பிறகும் எடுப்பதற்கு இத்தனை யோசிக்கிறாரோ! இது மற்ற அமைச்சர்களுக்கு ஏன் விளங்கமாட்டேன் என்கிறது!

TV மர்சனம்



●● "காதல் தேசத்தில் உங்களை ஓரம் கட்டி, அப்பாஸுக்கு நிறைய வாய்ப்புக் கொடுக்கப்பட்டது போல் தெரிகிறது?" - கேள்வி கேட்டவர் சிண்டு வேலையைத் தொடங்க, தாம் அப்படி உணரவில்லை; சம வாய்ப்பு தரப்பட்டிருப்பதாகவே நினைப்பதாக வினீத் சொன்னார். உபரியாக அப்பாஸ் பற்றி : "அவர் மிகத் திறமையான இளைஞர். ஏற்கெனவே மாடலிங் பண்ணிக் கொண்டிருந்தவர். அவர் நடையைக் கவனியுங்கள். நளினமாக, அற்புதமாக நடக்கிறார். அதற்கு மயங்காதவர்கள் இருக்க முடியாது!" சகநடிகரைப் பாராட்டியவரைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

●● லக்ஷ்மண் சுருதிக்குப் பெயர் வேண்டும். நிகழ்ச்சியை நடத்திய ஜுவல்லரி ஷாப்புக்கு விளம்பரம் வேண்டும். ராஜ் டீவிக்கு ஒரு வி.ஐ.பி. நிகழ்ச்சி வேண்டும். விளைவு? நட்சத்திரங்கள் பாடிய இன்னிசை(?) நிகழ்ச்சியைக் கேட்ட/பார்த்த ரசிகர்களுக்கு ப்ளட் பிரஷர் வராவிட்டால் ஆச்சர்யம்! 'ராக்கு முத்து ராக்கு' என்று எடுத்தவுடனே ராஜிவ் உச்சஸ்தாயிக்குப் போய் விட்டதால் அடுத்த வரியிலேயே மூச்சுவாங்கி, வரிவரியாக, பேரா பேராவாக விழுங்கி, இட்டு நிரப்ப வாத்தியங்களால் முடியாமல் வழிந்து நிற்க, நிகழ்ச்சியில் நேர்கிற தவறுகளுக்கெல்லாம் லட்சுமணன் ஒட்டுமொத்தமாக மன்னிப்பு கேட்டுக் கொண்டு விட்டதால் பிழைத்தார்கள். இல்லையென்றால், அழகிப் போட்டிக்கப்புறம் எதை எதிர்ப்பது என்று தெரியாமல் தவிக்கிறவர்களையெல்லாம் இதுமாதிரி நட்சத்திர நிகழ்ச்சிகளை நோக்கி திசைதிருப்பி விடலாமா என்று யோசனை வந்தது.

●● ஈஎஸ்பிஎன்னில் தென்னாப்பிரிக்க டொனால்டைத் தாக்குப்பிடிக்க முடியாமல் நம்மவர்கள் பெவிலியனுக்குப் பாதயாத்திரை நடத்திக் கொண்டிருந்த இரண்டாவது இன்னிங்ஸ். டெண்டுல்கரும் சொற்ப ரன்களில் போய்விட, புதுமுகம் விவிஎஸ். லட்சுமணன் மட்டும் மானம் காத்த மாவீரனாக ஐம்பதை எட்டிப் பார்த்ததும் ஸ்கொயர் லெக் பகுதி கேலரியிலிருந்து ஒரு வாசக அட்டை சில விநாடிகள் லேசாக ஆடி கவனத்தைக் கவர்ந்தது. அதன் மொழியாக்கம் : 'ராமன் கோட்டை விட்டாலென்ன? லட்சுமணன் மானம் காத்தார்.'


கிரிக்கெட் கிரௌண்டிலும் கவித்துவ நெஞ்சங்கள்.

●● வாணிஜெயராமுடன் ஒரு பேட்டி - விஜய் டீ.வி.யில். 'புதிதாகப் பாடவரும் இளைஞர் - இளைஞிகளுக்கு உங்கள் அறிவுரை என்ன?' என்ற வழக்கமான கேள்விக்கு வித்தியாசமான பதிலளித்தார். "எந்தவொரு வேலையானாலும் அதை முழு ஈடுபாட்டோடு செய்ய வேண்டும். பெருக்குகிற வேலையானாலும் அதையும் நூறு சதவிகித ஈடுபாட்டோடு செய்தால்தான் மற்றவர்களின் கவனத்தைக் கவர முடியும்!" என்ற வாணிஜெயராமின் பதில், அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய நூற்றில் ஒரு வார்த்தை.

●● 'தாகம் தாகம்' நிகழ்ச்சி - ராஜ் டீவியில். ஓர் இளைஞரிடம் அவரது ஆசையைக் கேட்டபோது, "கிழிந்த சட்டையுடனும் லுங்கியுடனும் நண்பர்களோடு (அவர்களும் இதே டிரஸ்ஸில்தான்!) போய் ஸ்டார் ஹோட்டலில் சாப்பிட வேண்டும்!" என்றார். அந்த மாதிரி அழைத்துச் சென்றபோது ஹோட்டலில் இருந்தவர்களின் ரியாக்ஷன் எப்படியிருந்தது? ஹோட்டல் சிப்பந்திகளுக்கு முன்கூட்டியே தெரியும் என்பதாலோ என்னவோ, இவர்களைப் பார்த்த அவர்களுக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை. எது எப்படியானால் என்ன? அந்த இளைஞர்களுக்கு வெஜ், நான்வெஜ் என்று பலத்த விருந்து!


— 'டிஷ்'

ஆஹ்ஹாஹ்ஹா!



"இவ்வளவு பெரிய ப்ரீஃப்கேஸைத் தூக்கிட்டு வந்து, எங்க கட்சி எம்.எல்.ஏக் களைப் பார்க்கணும்னு சொன்னா என்ன அர்த்தம்! உங்களை கிட்டயே விட மாட் டோம்!"

"வருமான வரித்துறை ரெய்டு நடத்தி ஒரு பீரோவுல அஞ்சு கோடி ரூபாய் பறிமுதல் பண்ணாங்க; போலீஸ்ல அதை எண்ணிப் பார்த்துட்டு இரண்டு கோடின்னு கணக்கு சொன்னாங்க.... ஆனா சி.பி.ஐக் காரங்க பீரோவே காலியாயிருந்ததுங் கறாங்க.... இது ஏமாத்து வேலைன்னு சொல்ல வரலை, பாவம்! அவங்களுக்கு எண்ணத் தெரியலை...."





"குறைந்தபட்ச செயல்திட்டம்னா என்ன...? அதாவது.... அப்படின்னா... குறைஞ்சபட்சம் பதவி நாற்காலியை விடாம கெட்டியா பிடிச்சுக்கணும்...."

"ஒரு வேடிக்கை கவனிச்சீங்களா... இந்த இரண்டு நிகழ்ச்சிகளுக்கும் ஆளுங் கட்சியோ எதிர்க்கட்சியோ ஒருத்தரை ஒருத்தர் குறை சொல்லிக்கவேயில்லை...."



பேபி, பேபி பேபி பேபி பேபி!

சிஷ்யா

மந்தர ஸ்தாயிக்கு இறங்கி பஞ்சமத்தில் சங்கமமாகிக் கொண்டிருந்தான் ராமகிருஷ்ணன்.

"பேபி! பேபி பேபி பேபி பேபி!...." காட்டுக் கத்தலாய்ப் பின் மண்டையில் வந்து அறைந்தது. ஆணா பெண்ணா என்று சொல்ல முடியாத அசுரக் குரல்.

ராமகிருஷ்ணன் தம்பூராவை வெகு கவனமாய் மடியிலிருந்து இறக்கிக் கீழே வைத்தான். அசுரக் குரல் உச்சத்துக்குப் போய்விட்டது. வார்த்தைகள் துறந்து அலறியது. "யே......ஆ....ஊ...." திரும்பவும் இடுமென்று ஞாபகம் வந்ததுபோல் தொடர்ந்தது : "பேபி பேபி பேபி.... பேபி பேபி...!"

ராமகிருஷ்ணன் காதுகளைப் பொத்திக் கொண்டு எழுந்தான். பக்கத்து மொட்டை மாடியில்... குட்டிச் சுவர் மேல் ஸ்டீரியோ காஸெட் ப்ளேயர். எக்ஸ்டென்ஷன் கார்டு மூலம் மின் இணைப்புப் பெற்று திசைகளைக் கிழித்துக் கொண்டிருந்தது.

கூடவே ஒரு பெண் - நடனமாடிக் கொண்டு... இல்லை! கையில் கனமான புத்தகம். பார்வை அதில் பதிந்திருக்க குறுக்கும் நெடுக்கும் நடந்தபடி காற்றில் விரல்களால் கோலம் போட்டுக் கொண்டிருந்தாள்.

இரண்டு நிமிடம் காத்துப் பார்த்தான் ராமகிருஷ்ணன். 'இந்தப் பக்கம் திரும்ப மாட்டாளா... அப்போது சொல்லிவிடலாம் - வால்யூமைக் கொஞ்சம் குறைச்சு வைச்சுக்கங்க ரொம்ப தொந்தரவா இருக்கு....'

ஊஹூம்! ஏகாக்ர சித்தத்துடன் அவள் புத்தகத்தில் கண், விரல்களால் கோலம் என்ற நிலைகளிலிருந்து மாறாமல் நடையைத் தொடர்ந்தாள்.

ராமகிருஷ்ணன் தொண்டையைச் செருமிக் கொண்டு மொட்டை மாடி சுவரருகே வந்தான்.

"ஹலோ!..."

ஸ்டீரியோவை மிஞ்ச முடியவில்லை. பலமாகக் கைத்தட்டிக் கத்தினான்.

"ஹலோ!"

அவள் நிமிர்ந்து பார்த்தாள். அழுக்கு ஜீன்ஸுக்கு மேல் அதைவிட அழுக்காய் ஓர் உடுப்பு. அப்போதுதான் கவனித்தான்.

"கொஞ்சம் வால்யூம் குறைச்சு வைச்சுக்கக் கூடாதா...? ரொம்ப தொந்தரவா இருக்கு..."

அவள் சுவரருகே வந்து ஸ்டீரியோவை அணைத்தாள்.

"என்ன சொன்னீங்க...?"

"இவ்வளவு சத்தமா அலற விடறீங்களே ரொம்ப தொந்தரவா இருக்குங்க."

"தொந்தரவா இருந்தா கீழே இறங்கி வீட்டுக்குள்ள போயிடறதுதானே. எனக்கு இந்த மியூசிக் இல்லாம படிக்க முடியாது!"

'ஞானசூன்யம்! இந்தக் காட்டுக் கத்தலுக்குப் பேரு மியூசிக்கா...' மனத்தில் எழுந்ததைச் சொல்லாமல் விழுங்கிக் கொண்டான்.

"இங்க பாருங்க... கடந்த பத்து வருஷமா தினமும் சாயங்காலம் மொட்டை மாடியில சாதகம் பண்ணிண்டு வரேன். எங்க வீடு சின்னது. இடம் போதாது. எனக்கு நாளைக்குக் கச்சேரி இருக்கு. இப்ப பிராக்டிஸ் பண்ணியாகணும்."

"எனக்கும் நாளைக்கு எக்ஸாம் இருக்கு. படிச்சாகணும்."

"நீங்க தாராளமா படியுங்க - மத்தவங்களுக்குத் தொந்தரவு கொடுக்காம..."

"உங்க பேரு தெரியலையே..."

"ராமகிருஷ்ணன். பி.கே. ராமகிருஷ்ணன்."

அந்தப் பெயர் கூட அவளிடம் எந்த

மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. கர்நாடக சங்கீதமென்றால் கிலோ என்ன விலை என்று கேட்கும் ரகம்! 'ஞானசூன்யம் ஞானசூன்யம்!' ராமகிருஷ்ணன் மனத்துக்குள் சபித்தான்.

"மிஸ்டர் ராமகிருஷ்ணன் - இல்ல நான் கிருஷ்ணன்னே கூப்பிடறேன். நமக்குள்ள அப்படியொண்ணும் வயசு வித்தியாசம் இருக்கற மாதிரி தெரிலை. இன்னிக்கு ஒரு நாள் பொறுத்துக்கோ. இன்னியோட என் மிட் டெர்ம் எக்ஸாம் முடிஞ்சுடுது. நாளைலேர்ந்து இந்தத் தலைகாணி புக்ஸுக்கு ஒரு வாரம் லீவ். அதுக்குள்ள எங்கப்பாகிட்டே கெஞ்சி கூத்தாடி ஒரு வாக்மேன் வாங்கிடுவேன். அப்புறம் உனக்கு இந்தத் தொந்தரவு இருக்காது..."


ராமகிருஷ்ணன் பேசாமல், பின்வாங்கியிருக்கலாம். ஆனால் விதி வலியது! அதுவும் எதிரே அழகாய் ஒரு பெண் வந்து நின்று கண்களால் சிரிக்கும் போது அது முழு வீச்சுடன் விளையாடத் தொடங்குகிறது. அன்று ராமகிருஷ்ணனை விதி, பின்வருமாறு பேசும்படி இயக்கியது :


"இதப் பாரும்மா... உனக்குப் பாட்டுதானே காதுல விழணும். அந்த டேப்பை ஆஃப் பண்ணு. எப்படியும் நான் இன்னும் ஒண்ணரை மணி நேரம் சாதகம் பண்ணுவேன். அந்த நேரத்துல நீ படிச்சுக்கோ..."

"ஐய்யோ!" என்றாள், ராமகிருஷ்ணன் பெயர் கேட்க மறந்துபோன சுவேதா. "எனக்கு உன் ததரினன்னாவெல்லாம் சரிப்பட்டு வராது... ஆளை விடு..."

அத்தனை நேரம் மனத்துக்குள் இட்ட சாபத்தை வெளிப்படையாக்கினான் ராமகிருஷ்ணன்.

"ஞானசூன்யம்! உனக்கு சங்கீதத்தோட அருமையும் தெரியலை. பாடறவங்க அருமையும் தெரியலை... போன மாசம் வரை உங்க வீட்ல குடியிருந்தாங்களே அவங்களால ஒரு தொந்தரவு உண்டா!






புக்கர் வாஷிங்டன் என்ற நீக்ரோ தலைவர் ஒரு சமயம் தென் கரோலினா மாகாணத்தில் பிரசங்கம் செய்ய வேண்டியிருந்தது. ஒரு குதிரை வண்டிக்காரனிடம் சென்று ''வரு கிறாயா?'' என்று கேட்டார்.

அவன் ஒரு வெள்ளைக்கார அமெரிக்கன், ''நான் நீக்ரோக்களுக்கு வண்டி ஓட்டுவதில்லை'' என்று மறுத்தான்.

''அப்படியானால் சரி, நான் உனக்கு ஓட்டுகிறேன்'' என்று சொல்லி வண்டிக்குள்ளே வண்டிக்காரனை உட்கார வைத்து தாம் வெளியே அமர்ந்து நகர மண்டபத்தை நோக்கி வண்டியைச் செலுத்தினார் புக்கர். விரைவிலே அங்கு போய்ச் சேர வேண்டியது தானே அவரது இலட்சியம்?

– 'உலக அறிவுகள் ஓராயிரம்' என்ற நூலிலிருந்து: எஸ். எஸ். பூங்கதிர்.



கணவனின் எந்த வார்த்தை ஒரு பெண்ணுக்கு அளவில்லாத மகிழ்ச்சியைக் கொடுக்கும்? ஒரு முறை அமெரிக்காவில் நடந்த போட்டி ஒன்றில் இக் கேள்வி கேட்கப்பட்டபோது, எந்த பதிலுக்கு முதல் பரிசு கிடைத்தது தெரியுமா?

இரவு 3 மணிக்கு குழந்தை அழும்போது மனைவி எழுந்திருக்க முற்பட, அப்போது கணவன் 'நீ எழுந்திருக்க வேண்டாம்; நான் குழந்தையை பார்த்துக் கொள்கிறேன்' என்று கூறும் வார்த்தைகள்தான்.

– பூங்கோதை கிருஷ்ணராஜ்

இப்படி ஞானசூன்யமா வந்து சேர்ந்திருக்கியே!''

''சும்மா வார்த்தைய அள்ளி விடாதே! பரீட்சை நேரம். உன்னோட வாதாடினா எனக்குத்தான் டயம் வேஸ்ட்!''

மீண்டும் காஸெட் ப்ளேயரை ஆன் செய்து விட்டான். ராமகிருஷ்ணன் இயலாமையுடன் சிறிது நேரம் முறைத்துப் பார்த்துவிட்டுக் கீழே இறங்கிப் போய்விட்டான்.

பசி வயிற்றை நிரப்பி அழுத்தியது. ஒரு நல்ல கச்சேரி முடித்து மேடை விட்டு இறங்கினால் இப்படித்தான் பசிக்கும். ராமகிருஷ்ணனுக்குத் திருப்தியாய் இருந்தது.

''ஆட்டோகிராஃப் ப்ளீஸ்!'' பரவசத்தைக் கண்களில் தேக்கி ரசிகர்கள் கேட்டபோது 'இசைபட வாழ்க! என்றும் அன்புடன், ராமகிருஷ்ணன்' என்றும் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தான். விமர்சகர் ராமானுஜஜுலு கைகுலுக்கினார்.

''தர்பார் ராகம் ரொம்ப பிரமாதம்! அந்த ஸ்ரீராமனின் தர்பார்தான்போ, சாக்ஷாத்...!''

''தேங்க்ஸ்!''

''ஹலோ, கிருஷ்ணன்!''

தோளுக்குப் பின்னாலிருந்து உரிமையாய்க் குரல் கேட்டுத் திரும்பினால், மொட்டை மாடிப் பெண்! அழுக்கு ஜீன்ஸுக்கு பதில் ஆரஞ்சு – கறுப்பு சல்வார் கமீஸ்.

'இவள் எங்கே வந்தாள்? ஞானசூன்யம்!'

''கொஞ்சம், ஒரு நிமிஷம் இப்படி வர்றியா...''

கூட்டம் விட்டு விலகியபோது சொன்னாள்.

''ஸாரி!''

''எதுக்கு...?''

''என் தொந்தரவால நீ ரொம்ப பாதிக்கப்பட்டுட்டே.... இன்னிக்கு தர்பார் ராகம் பாடறச்சே இரண்டு முறை 'நாயகி' சாயல் அடிச்சுடுச்சு...''

ராமகிருஷ்ணனுக்குச் 'சொரே'ரென்றது. யாராவது கேட்கிறார்களா என்று சுற்றுமுற்றும் அவசரமாகப் பார்த்துக் கொண்டான். கேட்கும் தூரத்தில், நல்ல காலம், யாருமில்லை!

சுவேதாவுக்கு கொரியரில் ஒரு பார்சல் வந்தது. பிரித்தாள். உள்ளே புத்தம்புது பளபளக்கும் வாக்மேன்! கூடவே சுருட்டி மடக்கிய நீள காகிதம். அதில், பேபி பேபி பேபி என்று ஸ்ரீராமஜெயம் போல் அங்குலம் விடாமல் எழுதியிருந்தது. கீழே கையெழுத்து : அன்புடன், பி.கே. ராமகிருஷ்ணன் என்று போட்டு, அடைப்புக் குறிக்குள் : (கிருஷ்ணன்)

சி.எஸ் ஸுக்கு உணவு உற்பத்திப் பெருக்கத்துக்கான நார்மன் போர்லாக் விருது வழங்கப்பட்டது.

1960 களில் பஞ்சாபில் வெடித்தது பசுமைப் புரட்சி. வளரும் நாடுகளிடையே இந்தியாவை ஓகோ என்று உயரே தூக்கி வைத்த புரட்சி அது. விவசாயத்தில் பஞ்சாபை முதலிடம் பிடிக்க வைத்த புரட்சி. அதைச் சாதித்தவர்களில் முக்கியமான ஒரு நபர் தமிழ்நாட்டைச் சேர்ந்த காங்கிரஸ்காரர். லால் பகதூர் சாஸ்திரியின் அமைச்சரவையில், உணவுத்துறை அமைச்சரான சி. சுப்பிரமணியம்! சி.எஸ். மூத்த



அமைச்சர்களில் ஒருவர். ஆனால் அன்றைக்கு விவசாய மற்றும் உணவுத்துறையை வகிப்பவருக்கு அமைச்சரவை வரிசையில் கீழே தான் இடம்! உணவுப் பற்றாக்குறை இருந்த நாட்டில், இப்படி விசித்திரமான நிலை இருந்ததுதான் வேடிக்கை.

மூத்த அமைச்சர்களில் எவரையும், விவசாயத்துறை அமைச்சகத்தின் முக்கியத்துவம் என்ன என்பதை எடுத்துச் சொல்லி, அமைச்சர் பொறுப்பை ஏற்க வைக்க சாஸ்திரியால் முடியவில்லை. சி.எஸ்.ஸால் மட்டும்தான் சாஸ்திரி என்ன எதிர்பார்க்கிறார் என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. ஒரு சவாலை ஏற்பது மாதிரி, அந்த அமைச்சரவைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அதற்குப் பிறகு நடந்தது அதிசயம்; அற்புதம்! வறட்சியால் வாடிய இந்தியா ஐந்தே ஆண்டுகளில் உணவு தானிய உற்பத்தியில் ஓகோ என்று முன்னேறியது.


புதிய பாசனத்திட்டங்களுக்கு, முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் அரசு நிறையச் செலவழித்ததால், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில், தொழில் வளர்ச்சிக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இது தவறு என்ற எச்சரிக்கையை அலட்சியப்படுத்தியதால், அதற்குப் பிறகு உண்டான வறட்சி கொடூரமாய் இருந்தது போதாக்குறைக்கு இரண்டு போர்கள்! பத்து-பதினோரு மில்லியன் டன் உணவு தானியத்தை இறக்குமதி செய்ய வேண்டிய கட்டாயம். அமெரிக்கா மட்டுமே உதவ முடிந்த சமயம் அது. ஆனால் அதிபர் லிண்டன் ஜான்சனைச் சந்திக்க சி.எஸ். போனபோது, அவர் நடந்து கொண்ட முறை சி.எஸ்.ஸுக்குப் பிடிக்கவே இல்லை. அப்போதைக்கு அமெரிக்காவிடமிருந்து தானியம் பெற வழி செய்தாரே தவிர, இந்தியா உணவு உற்பத்தியில் தன்னிறைவு

வேதனையில் பிறந்த சாதனை!

எறும்பார் கடிக்கிறார்!

''தமிழக உள்ளாட்சித் தேர்தலில் பாரதிய ஜனதாவின் வெற்றி மகத்தானது...!''

—எல்.கே.அத்வானி



பெற்றாக வேண்டும் என்று உறுதி பூண்டார் சி.எஸ்.

இரண்டு முக்கிய முடிவுகளை எடுத்தார் சி.எஸ். இந்திய விஞ்ஞானிகளை அழைத்து, விவசாயத்துறையில் நவீன விதைகள், உரங்கள் விஷயத்தில் புதிய தொழில்நுட்ப ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டினார். நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி நார்மன் போர்லாக், தமது மெக்ஸிகோ ஆராய்ச்சிக் கூடத்திலிருந்து 150 கோதுமை வகைகளைப் பஞ்சாபிலும், மேற்கு உத்திரப் பிரதேசத்திலும் பரிசோதித்துப் பார்க்க அனுப்பி வைத்தார். லூதியானா விவசாயப் பல்கலைக் கழகம் இதில் பெரும் பங்கு வகித்தது. ஆனால் சி.எஸ்.தான் இந்தப் புதிய கோதுமை வகைகளை, தேவையான புதிய உரங்கள் வழங்கி, செயல்முறை விளக்கங்கள் நடத்தி, தீவிரமான பிரசாரம் செய்தார். விளைச்சலில் தோல்வி கண்டால் விவசாயிகளுக்கு அரசே நஷ்ட ஈடும் தரும் என்று உறுதி அளித்தார். பஞ்சாபின் சீக்கிய விவசாயிகள் அதீத உற்சாகத்தோடு போட்டி போட்டுக் கொண்டு விளைச்சலில் சாதனை நிகழ்த்தினார்கள்; செல்வத்தில் கொழித்தார்கள்.

இரண்டாவது, சற்று சர்ச்சைக்கு இடமான முடிவு. தானிய விளைச்சலுக்கு மிகக் குறைச்சலான கொள்முதல்விலை இருப்பதை மாற்றி, விவசாயிகளுக்கு ஊக்கம் தராவிட்டால், விளைச்சலில் முன்னேறாமல் பின்தங்கி விடுவோம் என்றார். உற்பத்தியில் விவசாயிகளுக்குக் கணிசமான லாபம் கிடைக்க, அரசு ஆதார விலையை நிர்ணயிக்க வேண்டும் என்று அமைச்சரவையில் வாதாடினார். நாடு முழுக்க, தானிய விலை மளமளவென்று ஏறி விடும் என்று அமைச்சர்கள் முட்டுக்கட்டை போட்டார்கள். விலைவாசி ஏறிப் போய், நகரங்களில் அமைதிக்குப் பங்கம் விளையும் அபாயம் உண்டு என்று எச்சரித்தார் மற்றொரு தமிழரான மூத்த அமைச்சர் டி.டி.கே.

'அப்படியானால் விவசாய விளைச்சல் தன்னிறைவு அல்லது நகரங்களில் அமைதி யின்மை-இரண்டில் ஒன்றை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்!' என்று சொல்லி விட்டார் சி.எஸ்! அமைச்சரவை, வேறு வழியின்றி 15 சதவிகித தானிய விலை உயர்வுக்கு ஒப்புக் கொண்டது. அது மட்டுமல்ல; எல்.கே. ஜா தலைமையில் விவசாய விளைபொருள் விலை நிர்ணயக்குழு உருவாக்கப்பட்டது. மறுபடி அமெரிக்காவிடம் கையேந்தும் நிலையை மாற்றி அமைத்தவர் சி.எஸ்.தான்.

- எம்.ஜே.அக்பர் எழுதிய **INDIA: THE SIEGE WITHIN** நூலிலிருந்து: **சாருகேசி**

ஜாலி போட்டி - 14 முடிவு

சரியான தலை நகரங்கள்:

1. அங்கோலா - லூரவாண்டா
2. ஆஸ்திரியா - வியன்னா
3. உருகுவே - மோன்டே வீடியே
4. எஸ்தோனியா - தாலின்
5. கனடா - ஒட்டாவா
6. கிரீஸ் - ஏதென்ஸ்
7. அல்பேனியா - திரானா
8. டென்மார்க் - கோபன் ஹேகன்
9. நியூஸிலாந்து - வெல்லிங்டன்
10. பாப்வா நியூ கினியா - போர்ட் மோர்ஸ்பி

சரியான விடை எழுதி, குலுக்கலில் ரூ. 5000/- பரிசு பெறுபவர்:

எஸ். ஷீலா,
5B, ரேனால்ட்ஸ் ரோடு,
கண்டோன்மெண்ட்,
திருச்சி - 620 001

வாழ்த்துக்கள்!

சொல்லாதது

"எக்ஸ்க்யூஸ் மி. கூப்பிட்டீர்களா?"

தேன் வந்து பாய, அவன் கண் திறந்து பார்த்தான். விளக்கேற்றினாற்போலப் பளிச்சென்று புன்னகைப் பூவுடனும் நர்ஸ்கள் உண்டா இந்த ஆஸ்பத்திரியில்?

"இப்படி பினாயில் ஊற்றி மெழுகியிருக்கிறார்களே? எனக்குத் தாங்கவில்லை. அலர்ஜி. தும்மல் வரத் தொடங்கினால் நிற்காது..."

"மன்னிக்கவும். இதோ ஒரு நிமிஷம்."

வினாடியில் வந்து உதித்த ஸ்வீப்பர் கையில் தண்ணீர் பக்கெட்டும் துணி கட்டிய நீளக் கழியும். அவன் அறை மறுபடி கழுவப்பட்டு ரூம் ஸ்ப்ரே பரவ, வியந்து போனான்.

"நன்றி..." சொல்லத் திரும்பியபோது அவள் இல்லை. யார் இவள்?

வலது கைக்கட்டு வலித்தது. இடுப்பு இருக்கிறதா என்று இனிமேல் தான் பார்க்க வேண்டும். சரியான அடி. ஒரு லாரியின் நிஜமான பலம் என்னவென்று நேற்றுத்தான் அவன் அறிந்திருந்தான். ஒரு உரசல். உடனே தடுமாற்றம். மோதலில் தூக்கி எறியப்பட்ட அவனது டிவிஎஸ் ஐம்பதும் வாங்கிச் சென்ற எலுமிச்சம்பழங்களும்.

விழித்த போது ஆஸ்பத்திரியில் இருந்தான். உயிர் போகிற வலியை சுற்றமும் நட்பும் தத்தம் சம்பாஷணைகளால் அதிகப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

லாரியைப் பிடிக்க முடிந்ததா? நம்பரையாவது கவனித்ததா? வண்டி வேண்டாம் என்றால் கேட்டால்தானே? தலைக்கு வந்தது கையோடு போயிற்று. ஒரு நடை சமயபுரம் போய்வர வேண்டும். எப்போது சரியாகும்? தோராயமாக என்ன செலவாகும்? வைப்பு நிதியை உடைக்க வேண்டி வரக்கூடும். எண்பது பைசாவில் பல்லவனில் ராஜா போல் போய் வரலாம். அடம் பிடித்து வண்டி வாங்கியதால் வந்த அவதி.

நாளெல்லாம் இப்படிப் படுத்துக் கிடந்தது கிடையாது. பணிகள் ஏதுமற்று, பேச்சுத் துணைக்கும் ஆளில்லாமல் நான்கு சுவர்களுக்கு நடுவே எத்தனை நேரம் கண்மூடிக் கிடப்பது? எழுந்திருக்க முடியாதபடிக்கு இடுப்பில் ஒரு மௌன யுத்தம். திரும்பினால் பிராணன் போகிறது. ஆய்வுக் கூடத்து கண்ணாடிப் பெட்டியில் அசைவற்று நிற்கும் இயற்பியல் தராசுபோல் எத்தனை நேரம் கிடப்பது?

"பாட்டு கேட்கிறீர்களா?"

வாசலில் நிழலாடிய அவள் உருவம். இவளென்ன இட்சிணியா? அவன் கரங்கள் சிறகுகளாவது போல் உணர்ந்தான். வார்த்தைகள் அற்ற சங்கீதம் செவிகளில் மோதி மோதிச் சுழல, வலி மறந்து, கொஞ்சம் சிரிக்க முயன்றான்.

சன்னலில் போட்டிருந்த வெளிர் நீல கர்ட்டன் காற்றில் பறந்து அடங்க, அவள் மாட்டிவிட்டுப் போன வாக்மனிலிருந்து ஊர்மிளா தன்ஹா, தன்ஹா என்று நடனமாட ஆரம்பித்தாள்.

அவனுக்கு வீட்டில் கல்யாணத்துக்குப் பார்க்க ஆரம்பித்திருந்தார்கள். படித்த பெண். படிக்காத பெண். வேலைக்குப் போகிற பெண். போகாத பெண். ஒரே பெண். நிறைய பெண்களில் ஒருத்தி. கொஞ்சம் கறுப்பு. மகாலட்சுமி களை. ஹிந்தி தெரியும். ஸ்கூல் டீச்சர். வீட்டுக் காரியங்களில் விற்பன்னள். நடனம் தெரிந்தவள். ஜர்னலிஸ்ட்.

வெறும் காகித விவரங்களைக் கொண்டு பேசிக் கொண்டிருந்தார்கள். கட்டம் போட்ட ஜாதகக் காகிதங்கள்.

அவன் விருப்பம் என்ன?

யாரும் கேட்கவில்லை. வரும் ஜனவரியில் கல்யாணம் முடிந்தாக வேண்டும். அம்மா தீர்மானமாகச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

அவன் மிரண்டு இருந்தான். ஆயுள் முழுவதற்குமான ஓர் ஒப்பந்தம். இப்படியா ஜவுளி போல் பரபரவென்று தூக்கிப் போட்டு எடுப்பது? ஓர் இழை பிசகினால் வாழ்க்கை என்னாவது? யாராவது அவனிடம் கருத்துக் கேட்டார்களா?

"சரி, சொல்லு. உன் மனசுல என்னதான் வெச்சிருக்கே?"

அப்போது அவன் ஏதும் தீர்மானம் வைத்திருக்கவில்லை.

பா. ராகவன்

"என்ன சார், வலி தேவலையா?"

வந்து பத்து நாட்களாகி விட்டன. நான்கு நாட்களாகத்தான் இவள் வருகிறாள். கூடவே ஒரு தென்றலையும் கூட்டிக் கொண்டு. அது, அவள் புன்னகை. அதன் ஒளியில், பிரதேசமே பொலிந்து விடுகிறது. சொல்லி வைத்தாற் போல அவள் வருகைக்காகக் காத்திருந்து, மனம் துள்ளிக் குதிக்கிறது. கரங்கள், சிறகுகளாகி விடுகின்றன.

இவளிடம் ஏதாவது பேச வேண்டும். ஏதாவது கேட்க வேண்டும். கேட்டால் அவள் பதில் சொல்வாள். அதிலிருந்து ஒரு கொக்கி. வேறொரு கேள்வி. மறுபடி பதில். உங்கள் பெயர்? எங்கே இருக்கிறீர்கள்? அப்பா, அம்மா? பூ பிடிக்குமா? பட்டாம் பூச்சி? அப்படியானால் என்னையும் பிடிக்கும். சொல். ஏதாவது இதழ் பிரித்து, உதிர்த்துப் போடு. உன்னைக் காதலிக்கிறேன் என்று மடல் அவிழ்.


ஆனால் விடலை வயது கடந்து விட்டது. எதற்கும் ஒரு நாகரிகம் தடுக்கிறது. நாகரிகம் தானா? தயக்கம் எனலாமா? எதிர்பாராத எதையும் எதிர்பார்க்க அனுமதிக்காத ஒரு தயக்கம். வயசு. உத்தியோகம். இருப்பு நிலை. சீ போ என்று சொல்லி விட்டால்? மனசும் மூளையும் ஏன் எப்போதும் ஒத்துப் போவதே இல்லை?

"ஹலோ, எங்கே ஞாபகம்?"

அவன்தான் கேட்கிறாள்.

அவனுக்குப் பேச வார்த்தைகள் ஏதும் இல்லை. வழக்கம் போல் ஒரு புன்னகை. "ம்? ஒண்ணுமில்லை."

நிஜமாகவே ஒண்ணுமில்லையா? நர்ஸ் என்





ம.பொ.சி. தெரியும். அந்த எழுத்துக்கள் எதைக் குறிக்கின்றன தெரியுமா?

மயிலாப்பூர் பொன்னுச்சாமி சிவஞானம்.

ஆதாரம் : 'எனது போராட்டம்'.
தகவல் : என். ஜெயராமச்சந்திரன்

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

பவள் பாதி டாக்டர் இல்லையா? நீதான் என்னைத் திறந்து பார்த்துத் தெரிந்து கொண்டோன்?

"இன்று உங்கள் கட்டு பிரித்து விடுவார்கள்."

"நன்றி."

"அப்புறம் கொஞ்சநாள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்."

"..."

"அதிக ஸ்ட்ரெயின் கூடாது."

"......"

"கொஞ்சநாள் வண்டியில் போகாதீர்கள்."

இது அவள் கடமையா? அவள் பணியில் ஒரு பகுதியா? பேஷண்ட்டை அறிவுறுத்துகிற சாதாரண நடைமுறை மட்டும் தானா?

இல்லை என்று சொல்வேன். உன் மேல் மட்டும் ஒரு பிரத்தியேக ஈர்ப்பு என்று சொல்வேன். சொல்லக் கூட வேண்டாம். ஒரு குறிப்பு? பட்டும் படாமலும் ஒரு உணர்த்தல்? சின்ன – மிகச் சின்ன ஒரு அர்த்தப் பார்வை? வேண்டாம். நான் கேட்கட்டுமா? கேட்டு விடட்டுமா? உன் மறுமொழி என்னவாயிருக்கும்? 'ஸாரி. ஐ'ம் எங்கேஜ்ட் டு ஸம்படி எல்ஸ்.'

அப்படியா?

'ஐ ஹால் நாட் கிவன் எனி தாட் டு இட்.' இஸிட்?

எதுவாயினும் நீ சட்டென்று சொல்லி விடக்கூடும். நான் தான் கிடந்து தவிக்கிறேன். ஒருவேளை நீயும் என்போல் குழப்ப கேஸ் தானோ?

"நீங்கள் பேசவே மாட்டீர்களா?"

அவன் தான். அவன் தவித்துக் கொண்டிருந்தான். நான் பேச நினைப்பதெல்லாம் நீ பேச வேண்டும். எத்தனை பெரிய சுயநலம். கையாலாகாத்தனத்தின் ஒட்டுமொத்த வெளிப்பாடு. பேசித்தான் பார்ப்போமே என்றால் குரலைப் பிடித்து முறிப்பது எது? என் குடும்பமா? சொஸைட்டி? ஸோ கால்ட் நாலு பேர்? ஈகோ?

கோழைத்தனம்! அதுதான். இது என்ன யாசகமா? என் விருப்பம் இது. உன் விருப்பம் என்ன? அவ்வளவுதான்.

அவ்வளவுதானா?

அவள் போய் விட்டாள்.

மிஸ்டர் சூர்யநாராயணன், இன்று நீங்கள் டிஸ்சார்ஜ் ஆகிறீர்கள். கிளம்பலாம். ஆல் தி பெஸ்ட்.

தலைமை டாக்டர் கை குலுக்கிவிட்டுப் போய்ப் பத்து நிமிஷங்கள் ஆகின்றன. வீட்டிலிருந்து வந்திருந்த சோப்பு, சீப்பு, கூடை, கேரியர் எல்லாம் புறப்படத் தயார். அவன் தயார் இல்லை. அவனுக்கும் அவனுக்குமே ஒரு ரகசிய யுத்தம் நடந்து, அவன் படு மோசமாகத் தோற்கடிக்கப்பட்டிருந்தான். அடுத்தடுத்து அவளைப் பார்க்கிறபோதெல்லாம் எழுகிற உணர்வுகள் பொங்கிப் பொங்கி பல தடவை வடிந்து விட்டன.

துணிச்சல் இல்லை. வளர்ப்பு அப்படி என்று சமாதானம் கொள்ள முயன்றால், தன் மீதே எரிச்சலும் வெறுப்பும் கோபமும்தான் வருகிறது.

இருபத்தெட்டு வருடங்கள். படித்து, உத்யோகம் தேடிக் கொண்டு, சம்பாதித்து, என்ன பயன்? ஸில்லி.

ஒரு பெண்ணுக்கு முன்னால் வார்த்தை வர மறுக்கிறது. ஐ லவ் யூ. ஐ லவ் யூ. ஐ லவ் யூ ஸோ மச். மனசுக்குள் ஆயிரம் முறை கூவிக் கூவிக் கூவினாலும் கேட்கவா போகிறது? இது என் எல்லை. இதுதான் என் எல்லை. வெல். குட்பை. எத்தனையோ விஷயங்களைப் போல இதையும் எப்போதாவது நினைத்து, சுகமான சோகத்தில் லயிக்க மட்டுமே உபயோகப்படுத்துவேனாயிருக்கும்.

திடீரென்று எப்படியாவது அவளைப் பழி வாங்கிவிட வேண்டும் போல் வெறி உண்டானது அவனுக்கு. ஏன்? எதற்கு? எப்படி?

தீவிரமாக யோசித்து, ஒரு முடிவுடன் வெளியே வந்தான்.

எங்கே அவள்? யாரைக் கேட்பது? என்ன பெயர்?

"ஹலோ மிஸ்டர் சூரி..."

சட்டென்று பின்னால் திரும்பினான். அவள்தான். மடிப்புக் கலையாத வெள்ளை டிரெஸ்ஸும் புன்னகையும்.

"என்ன, கிளம்பி விட்டீர்களா?"

"....."

"இப்போதும் பேசுவதாக இல்லை. அப்படித்தானே?"

"....."

"சரி. கிளம்புங்கள். ஆல் தி பெஸ்ட்."

அவன் ஒரு முடிவோடு அவளை நிமிர்ந்து பார்த்தான்.

"தேங்க்யூ சிஸ்டர். வருகிறேன்."

திரும்பிப் பார்க்காமல் போய்க் கொண்டிருந்தான்.



ராவ் Vs கேசரி

ஜெயிக்கப் போவது

நிதித் துறைச் செயலர் மாண்டெக் சிங் அலுவாலியாவின் பதவிக்காலம் முடியப் போகிறது. மன்மோகன்சிங்கின் அபிமானியான அலுவாலியாவுக்கும் நிதியமைச்சர் சிதம்பரத்துக்கும் அவ்வளவாகப் போதாது. அலுவாலியா ரிசர்வ் வங்கி கவர்னர் பதவி மீது ஒரு கண் வைத்திருக்கிறார். ஆனால் இது இரண்டு வருடங்களுக்குப் பிறகே காலியாகும். பதவி நீட்டிப்பு கிடைக்குமா என்று சற்றே கவலையாய் இருக்கிறார் அலுவாலியா.

● ஜனதா தளத் தலைமைப் பதவியை, மாட்டுத் தீவன ஊழலில் சிக்கியிருக்கும் லாலு பிரசாத் யாதவிடமிருந்து கைப்பற்றி விட தேவேகௌடா முனைந்திருக்கிறார். எஸ்.ஆர். பொம்மைக்கு இதில் உள்ளூர சந்தோஷம். ஹவாலா ஊழலில் சிக்கியிருக்கிறார் என்று தானே அவரிடமிருந்த கட்சித் தலைமைப் பதவியைப் பறித்துக் கொண்டார் லாலு? தேவேகௌடாவிடம் ஜனதாதளத் தலைமைப் பதவியை ஒப்படைக்க சி.எம்.இப்ராகிம் தீவிரமான நடவடிக்கைகளில் மூழ்கியிருக்கிறார்.

● ராம்விலாஸ் பாஸ்வானுக்கும், லாலு பிரசாத் யாதவுக்கும் இடையிலான பனிப் போர் இன்னும் நீடிக்கிறது. போன வாரத்துப் பத்திரிகையாளர் கூட்டத்தில்கூட, பீகாரில் ரயில்வே இருப்புப்பாதைகளில் நடக்கும் நாச வேலைகளைக் குறிப்பிட்டு, 'சட்டம்-ஒழுங்கு பராமரிப்பு மாநில அரசைச் சேர்ந்தது' என்று ஒரு குத்து குத்தியிருக்கிறார் பாஸ்வான். லாலுவுக்குப் பாவம், போதாத காலம்!

● நாடாளுமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவராக மன்மோகன்சிங் நியமிக்கப் படுவார் என்ற செய்தி வலுவிழந்து விட்டது. ராவ் அவ்வளவு எளிதாக அந்தப் பதவியை விட்டு விடப் போவதில்லையாம். கேசரி-ராவ் நிழல் யுத்தத்தில் ராவ்தான் இறுதியில் ஜெயிப்பார் என்கிறது ஒரு செய்தி. எம்.பிக்கள் ஆதரவு யாருக்கு அதிகம் என்று வெளிப்படையாகவே பலருக்கும் தெரியும் என்கிறார் சுரேஷ் கல்மாடி.

● எந்தப் பிரச்னையைப் பற்றிப் பேசத் எடுத்தாலும் 'நான் கர்நாடகத்தில் முதல் மந்திரியாக இருந்தபோது இப்படித்தான் சமாளித்தேன்....' என்று தேவேகௌடா சொல்லி வருவது, அமைச்சரவை வட்டாரத்தில் இப்போது ஒரு ஜோக் ஆகிவிட்டது. ஆஃப்கானிஸ்தான் பிரச்னையில் அவரிடம் அபிப்ராயம் கேட்டால்கூட, 'நான் கர்நாடக முதல்வராய் இருந்தபோது...' என்று பிரதமர் ஆரம்பித்து விடுவார் என்று கிண்டலடிக்கிறார்கள்.



யார்?

● ராஜ்ய சபா தேர்தலுக்குப் பிறகு, உத்தர பிரதேச சட்டசபையை ஆளுநர் கலைத்து விடுவார் என்றும் மறுபடி ஜனாதிபதி ஆட்சியை அங்கு அமல்படுத்த காங்கிரஸ் துணை செய்யும் என்றும் தெரிகிறது. ஆளுநர் ரமேஷ் பண்டாரி தேர்தல் முடியட்டும் என்று காத்திருக்கிறாராம்.

● முன்னாள் மத்திய அமைச்சர் கமல் நாத்தின் ஐம்பதாவது பிறந்தநாளைப் படு அமர்க்களமாகக் கொண்டாட அமைக்கப் பட்ட குழு, எக்கச்சக்கமாய் நன்கொடைகள் திரட்டி வந்திருக்கிறது. கமல்நாத்தின் வாழ்க்கை வரலாறு ஒரு புத்தகமாக வெளி யிடப்பட இருக்கிறது. பல மாநில அமைச் சர்கள், முதலமைச்சர்கள் பங்கு கொள்ளும் இந்த நிகழ்ச்சியை ஒரு திருவிழா மாதிரி காங்கிரஸ் நடத்தத் திட்டமிடப் பட்டிருக்கிறது. கமல்நாத்துக்கு அதிர்ஷ்டம்!

● ஜெயின் கமிஷன் முன் சாட்சியம் சொல்ல தில்லிக்குச் சென்ற ஜெயலலிதாவால், பிரதமரை மட்டுமே சந்திக்க முடிந்தது. சந்திப்பிலும் தேவேகௌடா அப்படி ஒன்றும் அதீத அக்கறையோ, நட்போ காட்டவில்லை யாம். வளர்ப்பு மகன் திருமணத்துக்கு வந் திருந்து வாழ்த்திய சீதாராம் கேசரி, சமயம் பார்த்து வெளியூர்ப் பயணம் போய் விட்டார்.

தில்லி நியூஸ்:

ராவும் ஊரில் இல்லையாம். இருந்திருந் தால்கூட ஜெ போய்ச் சந்தித்திருக்க மாட்டார் என்று ஒரு தகவல்!


● தம் நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் தொழிற்சாலையைத் திறந்து வைக்க என்றே சென்ற வாரம் பெங்களூர் வந்தார் பிரதமர். நண்பர் பெரும் பணக்காரர் மட்டுமல்ல; ஜனதாதளக்காரர்கூட.

● இப்போது தலித் பெண்மணி என்ற காரணத்துக்காக மாயாவதியை உ.பி. முதல் வராக்க முனைந்திருக்கும் கேசரி, பீகாரில் காங்கிரஸ் கட்சித் தலைவராக 67-ல் இருந்த போது, அப்போதைய ஸம்யுக்த விதாயக் தள முதல்வர் போலா பஸ்வான் சாஸ்திரியின் மீது அவதூறுகளைக் கிளப்பிப் புழுதி வாரி வீசி யிருக்கிறாராம். போலா பஸ்வான் சாஸ்திரி ஒரு தலித். இப்போது பழைய கதையைத் தோண்டி எடுத்துக் கேசரிக்குத் தர்மசங்கடம் உண்டாக்கப் பார்க்கிறது ஐக்கிய முன்னணி.

● நரசிம்மராவின் முன்னாள் தனி அதிகாரி ஏ.வி.ஆர். கிருஷ்ணமூர்த்தியின் ஹைதராபாத் லாக் கரை உர ஊழல் சம்பந்தமாக சில வைத்



• லாலு பிரசாத் யாதவ்



• ராம்விலாஸ் பாஸ்வான்

தார்கள். முன்னாள் சி.பி.ஐ. அதிகாரி ராமராவும் சரி; இப் போதைய ஜோகிந் தர் சிங்கும் சரி - ஏன் அதைத் திறந்து பார்க்கவில்லை என்று ஒரு கேள்வி இப்போது எழுந்திருக்கிறது. அதில் முக்கியமான தடயங்கள் நிறையவே சிக்குமாம்!

— நியூஸ்வாலா



• ஆஸிட் அரசியல்!



பெயர்தான் அதிகமாகப் பயன்படுத் தப்படுகிறது; அத்வானி என்ன செய் கிறார்?

' வாஜ்பாயின் பெயர் அதிகம் பயன் படுத்தப்படலாம். ஆனால், காரியங் கள் அத்வானி விருப்பப்படி தான் நடக்கின்றன. இல்லா விட்டால் ஹிந்துத்வா கொள் கையை மீண்டும் வலி யுறுத்தி, அதுவே தாரக மந்திரம் என்று பி.ஜே.பி.

• 'அழகிய விருந்து!

தொண்டர்களுக்கு 'ஜெ' லட்டு கொடுத்திருக்கிறாரே?

● டி.எஸ்.ஏ. பிள்ளையன், திருநெல்வேலி.

? அழகிப் போட்டி பங்கேற்பாளர்களுக்கான விருந்தில் ரஜினிகாந்த் கலந்து கொண்டது குறித்து என்ன நினைக்கத் தோன்றுகிறது?

! அவர் அமிதாப்பின் நண்பர் என்று!

● ஆர். முருகானந்தம், எஸ். மாரியூர்

? பாரதத்தின் பொருளாதார வளர்ச்சி இப்போது யார் கையில்?

! சிதம்பரம் கையில் பாதி, கம்யூனிஸ்ட் கட்சியிடம் பாதி என்று சிக்கித் திணறுகிறது. ஜனநாயக சோஷலிஸம் மாதிரி மார்க்ஸிய மன்மோஹனிஸம் என்றொரு புதிய 'இஸம்' பிறந்துள்ளது. நாடு உருப்படவா செய்யும்?

● பென்னை சி.முருகன், பென்னாட்டகரம்

? ஜெ, நரசிம்மர் போன்றோர் ஊழல் வழக்குகளிலிருந்து தப்பித்து விட்டால்...? (ஒரு கற்பனைதான்...)

! கற்பனைகள் நிஜமாகாது என்பதற்கு உத்தரவாதம் இல்லையே.

● மீனா முருகேசன், மதுரை - 12.

? முன்னாள் அமைச்சர் இந்திரகுமாரி, தமது சிறைவாசத்தை காந்தி, நேருவின் சிறைவாசத்துடன் ஒப்பிடுகிறாரே...?

! அது மட்டுமா? கீதைக்கு உரை எழுதப் போகிறேன் என்று வேறு பயமுறுத்துகிறார். கிருஷ்ணா, கிருஷ்ணா! இதுவும் உன் லீலைகளுள் ஒன்றோ!

● க. சேகர், பெங்களூர் - 53.

? பி.ஜே.பி. வட்டாரங்களில் வாஜ்பாய் அண்மையில் அறிக்கை விட்டிருக்குமா...?

● உஷா, மயிலாப்பூர்.

? கமங்கலிகள் கலந்து கொள்ளும் பூஜையில் வெள்ளைப் புடைவை கட்டவே மாட்டார்கள். 'அவ்வை சண்முகி' யில் கமல் எப்படி இந்தத் தவறைச் செய்தார்!

! ஹூம்! சண்முகியில் கமல் செய்தது அந்த ஒரு தவறு தானா? அவ்வை டி.கே. சண்முகம் மன்னிப்பாராக!

● இ. ராதாகிருஷ்ணன், பட்டுக்கோட்டை.

? 'இந்த நாட்டை ஆண்ட மன்னர்களிலேயே அசோகருக்கு அடுத்தபடியாக, தெருவோரம் மரங்களை நடச் சொன்னவர் டாக்டர் கலைஞர் ஒருவர் தான்...' என்று அமைச்சர் முல்லை வேந்தன் முதல்வரைப் புகழ்ந்துள்ளாரே?

! முல்லை சும்மாவேனும் பூச் சூட்டுகிறார் என்பது முதல்வருக்குத் தெரியாதா? இந்த மாதிரி புளித்த புகழுரைகளில் மயங்கியதால் தான் ஜெயலலிதாவின் அழிவு ஆரம்பமாயிற்று என்பது அவருக்கு ஞாபகமிருக்காதா என்ன!

● எஸ். மதியழகன், நாகூர்.

? லக்குபாய் பதக் விவகாரம் எப்படி உள்ளது?

! ஊறுகாய் போட்டுவிட முயற்சி நடக்கிறது. நீதி மன்றம் அனுமதிக்கக்கூடாது.

● வ. திருநாவுக்கரசு, இராணிப்பேட்டை.

? அ.தி.மு.க.வின் இருபத்தைந்தாவது ஆண்டு விழாவின்போது ஜெயலலிதா, தொண்டர்



• கற்பனை...



• .... நிஜமாகலாம்!

❐ ரூ. 25 பரிசு பெறுபவர்:
பழங்கூர் மீரா முருகன்,
3/55 அண்ணாசாலை,
பழங்கூர்கிராம அஞ்சல்,
திருக்கோவிலூர் - 605 751.

களுக்கு லட்டு கொடுத்தாராமே...?

! தொண்டர்களுக்கு என்றைக்குமே லட்டு தான். மக்களுக்குத்தான் அல்வா!

● பழங்கூர் மீரா முருகன், திருக்கோவிலூர்.

? உமது 17.11.96 இதழ் தலையங்கத்தில், ராவுக்கு ஜாமீன் மறுத்த நீதிபதி பிரேம் குமாரைப் புகழ்ந்து தள்ளினீரே...! அந்த வழக்கில் (மேல்கோர்ட்டில்) அவருக்கு ஒட்டு மொத்தமாக ஜாமீன் தரப்பட்டுள்ளதைக் கவனித்தீரா? உமது தலையங்கத்துக்கு இனி மவுசு இல்லை என்பதை ஒப்புக் கொள் கிறீரா..?

! நீங்கள் நினைப்பதற்கு நேர்மாறாக, மேல் கோர்ட்டில் ராவ் ஜாமீன் பெற முடிந்தது காரணமாகவே அந்தத் தலையங்கத்தின் மவுசும் நீதிபதி பிரேம்குமாரின் மதிப்பும் மேலும் உயரவே செய்கின்றன.

●ஜோ. ஜெயக்குமார், நாட்டரசன்கோட்டை.

? 'என்னுடன் தங்கியிருந்த பாவத்துக்காக சசிகலாவும் அவர் குடும்பத்தாரும் சம்பாதித் துள்ள சொத்துக்களை பூதக் கண்ணாடி கொண்டு பார்க்கிறது தி.மு.க. அரசு..' என ஜெயலலிதா கூறியிருக்கிறாரே..?

! மோசம் போனாலும் பாசம் போகாது என்பார்கள். ஜெ. மோசம் போகவுமில்லை; அவர் பாசமும் போகவில்லை என்பது தெளி வாகிவிட்டது!

●எஸ். விஜயலதா, தூத்துக்குடி.

? குமரியாரின் ஸ்கூட்டர் ஊர்வலம் பற்றி...?

! பெட்ரோல் விற்கிற விலையில் அந்நியச் செலாவணி நஷ்டமாவதுதான் நிகர லாபம்!

●எம். இரத்தினவேல், கொட்டப்பட்டு.

? சமீபத்தில் தாங்கள் துயரமடைந்த ஒரு செய்தியையும் மகிழ்ச்சியுற்ற ஒரு செய்தியை யும் சொல்லுங்களேன்..?

! இரண்டு நிலைகளுக்கும் ஒரே செய்தி காரணமாய் அமைந்தது: பம்பாயில், பதி னான்கு வயதுப்பெண் கடத்தப்பட்டாள் என்கிற செய்தி மிகவும் வேதனை அளித்தது. அதே பெண், சமயோசிதமாக ரயில் டாய் லெட்டில் ஒளிந்து கொண்டு, தப்பி, சென்னை வந்த செய்தி மகிழ்ச்சி தந்தது.

● வி.பி. காந்தி, மதுரை.

? ஷார்ஜாவில் இலங்கை அணியை பாகிஸ் தான் துவம்சம் செய்து விட்டதே...?

! அது அவ்வளவு ஆச்சர்யமில்லை. நியூஜி லாந்து தாக்குப்பிடித்து இறுதி ஆட்டத்துக்கு வந்து சேர்ந்ததுதான் அதிசயம்! உயிரைக் கொடுத்து ஆடினார்கள் என்று சொல்வது முற்றிலும் பொருந்தும். வெற்றியைக் காட்டி லும் அந்த முயற்சிதான் முக்கியம்.

● ச.தேவி, விருதுநகர்.

? பஞ்சாயத்துத் தலைவர் தேர்தலினால் கிராமங்கள் புத்துயிர் பெறுமா? அல்லது அங்கும் ஊழல் பரவலாக்கப்படுமா...?

! கட்சிக் கண்ணோட்டத்தைக் கடந்து, மெய்யான மக்கள் பிரதிநிதிகளாகப் பஞ்சாயத்துத் தலைவர்கள் செயல்பட்டால், கிராமங்கள் வேகமாகப் புத் துயிர் பெறலாம். நடந்து முடிந் துள்ள தேர்தலில் பெரும் பாலும் கட்சிக்காரர்களே பதவிகளைப் பெற்றிருக் கிறார்கள்; எனவே மக்களின் விழிப்புணர்வு சதா செயல்பட வேண்டும்.



• கிருஷ்ண லீலை!

● என். கார்த்திகேயன், சென்னை - 91.

? டெல்லி அருகே நடந்த நெஞ்சை உலுக்கும் விமான விபத்து குறித்து...?

! 'சர்வதேச விதிகள்படி ஆயிரம் அடி இடைவெளி விட்டுத்தான் இரு விமானங் களும் பறந்தன...' என்று இது நாள்வரை விமான நிலைய 'டவர்' கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகள் கூறி வந்தனர். ஆனால், நிபுணர்கள், 'பறக்கும் இரு விமானங்களிடையே உயரத்தில் ஆயிரம் அடி இடைவெளி இருந்தால் போதாது. அவை ஒன்றன் கீழ் ஒன்று நிழல் போல் பறக்காமல் பக்கவாட்டிலும் போதுமான இடைவெளி தரப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு தரப் பட்டிருந்தால் இந்த விபத்து தவிர்க்கப்பட்டிருக்கும்' என்று அதிர்ச்சியளிக்கும் கருத்தை சமீபத்தில் வெளிப்படுத்தி யிருக்கிறார்கள். இதற்கு யார் பொறுப்பேற்பார்கள்?



• ரிமோட் கண்ட்ரோல்!



• மன்னிப்பாரா...?

●அஜார், தேனாம்பேட்டை.

? 'சந்திரலேகா மீது திராவகம் வீசிய வழக்கில் கைதாகி யிருக்கும் மதுசூதனனுடன் கைகோக்கவில்லை; அ.தி. மு.க.வுடன்தான் கை கோத் துள்ளோம்' என்று சு.சுவாமி சால்ஜாப்பு கூறியிருப்பது பற்றி...?

! சு. சுவாமியின் இன்றைய அரசியலே ஒரு திராவக வீச்சுதான்!



• புது சரித்திரம்



• லாபமும் நஷ்டமும்

"தந்தை வழிச் சொத்தாக எங்களுக்குக் கிடைத்திருப்பவை பற்றி உலகம் நன்கு அறியும். பணம், பேர், புகழ் என்று பட்டியல் நீளும். ஆனால் இதில் அடங்காத அற்புதச் சொத்தாக அவர் விட்டுச் சென்றிருப்பது எல்லோரும் பாராட்டும் விதத்தில் அமைந்துள்ள அற்புதமான மனிதர்கள் கொண்ட சுற்றம்."

-ஏவி.எம்.சரவணன்.

ஏவி.எம். நிறுவனத்தின்முக்கியமான பொறுப்புகளில் பணிபுரிபவர்களைச் சுருக்கமாக இனிஷியல் சொல்லிக் குறிப்பிட்டால்தான் பலருக்குப் புரியும். ஜி.ஆர்., ஆர்.ஆர் என்பவை ஜி.ரங்கசாமி, ஆர்.ரங்கசாமி ஆகி யோரைக் குறிக்கும். மெய்யப்ப செட்டியார் காரைக் குடியில் ஸ்டுடியோவை ஆரம்பித்தபோதே அவருடன் இணைந்து செயல்பட்டு, பின்னர் சென்னைக்கு வந்து பணியைத் தொடர்ந்து அவரது வெற்றிக்கு உறுதுணையாக இருந்தவர்கள் பலர்! அவர்களின் வாரிசுகளும் தொடர்ந்து. எம்.சரவணன், எம்.எஸ்.குகன் ஆகியோரிடம் பணியாற்று கிறார்கள். அந்த வரிசையில் என்.கே. என்று குறிப்பிடப் படும் என்.கிருஷ்ணன், சரவணனின் நேர்முக உதவி யாளராகப் பணிபுரி கிறார்.

தமது 21-வது வயதில் ஏவி.எம். ஸ்டுடியோவில் வேலைக்குச் சேர்ந்த என்.கே. கடந்த 33 வருடங் களாகப் பணி புரிந்து வருகிறார். சுருக்கெழுத் தாளராகச் சேர்ந்து, அலுவலக கண்காணிப் பாளராக உயர்ந்து, கடுமையான உழைப்பின் பலனாக சரவணனின் நேர்முக உதவியாளராகி யிருப்பவர்.

"எங்களுக்குப் பூர்வீகம் சிதம்பரம் என்றா லும், நான் வளர்ந்தது எல்லாம் திருவல்லிக் கேணியில்தான். நேஷனல் பள்ளியில்தான் படித்தேன். அந்தக் கால கட்டத்தில் திருவல்லிக் கேணி பகுதியில் புட் பால், மற்றும் கிரிக்கெட் கிளப்புகள் இருந்தன. ஸ்கூல் பைனல் முடித்து விட்டு மேலே படிக்கத் தயாராக இருந்த சமயத்தில், ஒரு புட்பால் மேச்சில் ஆடும்போது கீழே விழுந்து கையில் பலமான அடி. குணமாகும்வரை கட்டாய ஓய்வு. அப்புறம் கல்வி யாண்டு துவங்கிவிட, தட்டெழுத்து, சுருக்கெழுத்து என்று படிப்பு திசைமாறிப் போய்விட்டது. என்றாலும் இந்த அற்புதமான நிறுவனத் தில் வேலைக்குச் சேர்ந்ததில் திருப்தி!" என்கிறார் என்.கே.



• சரவணன்



• என்.கே.

"தவறுகளையும் மென்மையாகச் சுட்டிக் காட்டுவதால் தவறு செய்யக் கூடாது என்கிற எண்ணமே வருகிறது!"

காலையில் அலுவலகத்துக்கு வந்ததும் பதிவு செய்யப்பட்ட காஸெட் ஒன்றை என்.கே.யிடம் கொடுத்து விடுவார் சரவணன். அதில் அன்றைய தினத்துக்கான அவருடைய அறிவுரைகள், வழிகாட்டு நெறிகள், ஊழியர்களுக்கு ஆலோசனைகள் ஆகியவை அடங்கி இருக்கும். அந்தக் காஸெட்டைக் கேட்டு, அதில் உள்ளவற்றை டைப் செய்து சம்பந்தப்பட்ட இலாகாக்களுக்கு அனுப்பி வைப்பார் என்.கே. அத்துடன் பணி முடிந்து விடாது. அந்த விஷயங்களைத் தொடர்ந்து கண்காணிப்புச் செய்வதுதான் மிகவும் முக்கியம்.

ஏவி.எம். நிறுவனத்தில் பட விநியோகம், இறக்குமதி, ஏற்றுமதி ஆகிய பல விஷயங்களில் சட்ட வல்லுனர்களின் கருத்துப் பெற்றுச் செயல்படுவது என்பது மிக முக்கியமான ஒன்று. அப்படிப்பட்ட சட்ட வல்லுனர்களின் கீழ் பல காலம் பணிபுரிந்த அனுபவம் என்.கேக்கு உண்டு. அந்த அனுபவத்தின் காரணமாக இன்றும் ஏதாவது அக்ரிமெண்ட் போன்ற சட்டம் தொடர்பான விஷயங்கள் என்றால் என்.கே.யிடம் அந்தப் பொறுப்பு வந்துவிடும்!

"அவர் (சரவணன்) ஆட்டுவிக்கிறார், நாங்கள் ஆடுகிறோம். அவர் கர்த்தர், நாங்கள் கருவி. என்ன புண்ணியம் செய்தோமோ, இப்படிப்பட்ட முதலாளிகளிடம் பணி புரியும் பெரிய பாக்கியம் எங்களுக்குக் கிடைத்திருக்கிறது!" என்று மனம் நெகிழ்ந்து சொன்ன என்.கே.யிடம், வேலைக்குச் சேர்ந்த போது, நிரந்தரத் தன்மை இல்லாத சினிமாத் தயாரிப்பு நிறுவனத்தில் சேருகிறோமே என்று தயங்கியதுண்டா என்று கேட்டோம். டக்கென்று பதில் வந்தது:

"நோ... நோ... நீங்கள் நினைப்பது போன்ற சினிமாத் தயாரிப்பு நிறுவனம் அல்ல இது. ஒரு பெரிய தொழிற்சாலையைப் போன்றது. இங்கு பல பிரிவுகள் இருக்கின்றன. அதற்குப் பொறுப்பான அதிகாரிகள் இருக்கிறார்கள். துவக்கத்தில் இருந்தே இப்படித்தான். ஆகையால் எந்தவிதத் தயக்கமுமின்றி இதில் சேர்ந்தேன். என்னை இங்கு சேர்த்து விட்டவர், தலைமை எலெக்டிரிஷியன் ஆக இருந்த சந்துரு. 130 ரூபாய் சம்பளத்தில் என் பணியைத் துவக்கினேன். இங்கு வேலை செய்வதில் கிடைக்கும் திருப்தி ஒன்றே போதும். உழைப்புக்குக் கிடைக்கிற பாராட்டு, நீங்கள் 'நிரந்தரம்' என்று சொல்லும் இடங்களில் கிடைக்காது! உதாரணமாக ஒன்று சொல்கிறேன்...

"மெய்யப்ப செட்டியார் அவர்களுக்கு டி.பி.பாலு என்ற மிக மிக நம்பிக்கையான நேர்முக உதவியாளர் இருந்தார். அவர் ஒருமுறை விடுப்பில் சென்றபோது அந்தப் பொறுப்பில் நான் இருந்தேன். என்னுடைய உழைப்பைப் பாராட்டும்விதமாக அவர் எனக்கு ஒருமாதம் போக்குவரத்துப் படி கொடுத்தார்" என்று பெருமையுடன் குறிப்பிடுகிறார் என்.கே.

"சரவணன் பற்றி?"

"அவருடைய தங்கமான குணமும், உழைப்பும், நேர்மையும், நாணயமும், பாசமும், பரிவும் இந்த உலகத்துக்கே தெரியும். எங்களையெல்லாம் ஒரே குடும்பமாக எண்ணிச் செயல்படுவார் அவர். பணக்காரர் வீட்டுத் திருமணத்துக்குச் செல்வதா? அதே நேரம் எங்கள் நிறுவன ஊழியர் வீட்டுத் திருமணத்துக்குச் செல்வதா என்கிற நிலை வருகிறபோது, ஊழியர் வீட்டுத் திருமணத்திற்குத்தான் முன்னுரிமை கொடுப்பார்.

"நான் நேர்முக உதவியாளராக அவரிடம் சேர்ந்தபிறகு, பல பெரிய பொறுப்புகள் அவரைத் தேடி வந்தன. அந்தப் பணிகளின் காரணமாக, அவரது வேலைப் பளு அதிகரித்தது. அப்போதெல்லாம் அவர் கூட இருந்து உதவியது மிகப் பெருமையாக இருக்கிறது.

"அவரது தினசரி நிகழ்ச்சிகளை வரிசைப்படுத்திக் கொடுப்பதும் நான்தான். ஒருமுறை ஜிம்கானா கிளப்பில் கல்யாண ரிசப்ஷன் என்பதற்குப் பதிலாக, கிண்டி கிளப்பில் என்று குறித்துக் கொடுத்து விட்டேன். அவரும் கிண்டிக்குச் சென்று பார்த்துவிட்டு, பின்னர் விசாரித்து ஜிம்கானா கிளப்பிற்குப் போய் விட்டு வந்தார். மறுநாள் அலுவலகத்தில் என்னிடம் மிகச் சாதாரணமாக "ரிசப்ஷன் ஜிம்கானாவில்தான், கிண்டியில் இல்லை" என்று சொன்னதும் எனக்கு ஷாக். தவறைச் சுட்டிக்காட்டும் பண்பு இது. இப்படிப்பட்ட மனிதரிடம் பணிபுரியும்போது 'தவறே செய்யக்கூடாது' என்கிற வெறி தானாகவே வந்து விடுகிறது!" என்கிறார் என்.கே.

சினிமா தயாரிப்பு நிறுவனத்தில் வேலை செய்தாலும், ஷூட்டிங் பார்ப்பது, ரஷ் பார்ப்பது என்கிற பழக்கமெல்லாம் என்.கேக்கு கிடையாது. "குகன் அவர்கள் சொன்ன பிறகு 'பாட்டி சொல்லைத் தட்டாதே' என்ற எங்கள் நிறுவனப் படத்தைப் பார்த்தேன். அவ்வளவுதான். அதற்கப்புறம் எந்தப் படமும் பார்க்கவில்லை. இப்போது நான் ஸ்டுடியோவுக்குள் சென்றால், 'யாரப்பா அது?' என்று காவலாளி கேட்டாலும் கேட்பார்!" என்று சிரித்துக் கொண்டே சொல்கிறார் என்.கே.

- ப்ரியன்

படம்: பேஜர் கே. மூர்த்தி



"அசந்தும் வியந்தும் நிற்கிறோம்!"

✿ கல்கி தீபாவளி மலரைப் பார்த்து அசந்து, வியந்து நிற்கிறேன். அழகு, அமைப்பு, தரம், அளவு என்று மிக உயர்ந்து, சிறந்து விளங்குகிறது கல்கி தீபாவளி மலர். ஒரே வார்த்தையில் சொல்வதென்றால் கல்கி தீபாவளி மலருக்கு ஈடுஇணையேதுமில்லை என்று சொல்லி விடலாம்.
மங்கைநல்லூர், 'சின்னஞ்சிறுகோபு'.

✿ கல்கி தீபாவளி மலர் இந்த ஆண்டும் சிறப்பாக உள்ளது. மலரைப் பார்த்த நண்பர்கள் (அவர்கள் வேறு மலர்களை வாங்கியவர்கள்) கல்கி தீபாவளி மலர் நன்றாக உள்ளது என்று மகிழ்வுடன் தெரிவித்துள்ளனர். வளர்க கல்கியின் தமிழ்ப் பணி!
கோயம்புத்தூர், எஸ். ஜி. சேஷகிரி.

✿ தீபாவளி மலரின் ஒவ்வொரு பக்கமும் பிரமிப்பூட்டும்விதமாக இருந்தது. அரவணைத்த புன்னகையில் ரமணரைப் பற்றிக் கூறியிருந்த பல்வேறு தகவல்கள் இன்னும் என் மனத்தை விட்டு அகலவேயில்லை. சிந்தனைகளைத் தூண்டி அறிவை வளர்க்கும் கருத்துப் பெட்டகமாய் விளங்குகிறது.
சென்னை - 39, அ.க. கிருஷ்ணன்.

✿ 'தீபாவளி மலர்' அட்டைப் படம் பார்த்தவுடன் கையெடுத்து வணங்க வைத்து விட்டது. ம.செ. அவர்களுக்கு மனமார்ந்த பாராட்டுக்கள்.
காப்பரத்தாம்பட்டி, கே. ராஜாதிருவேங்கடம்.

✿ தீபாவளி மலர் வழக்கமான மலர்களை விடவும் சிறப்பாக நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டுள்ளது. என்றும் நினைவில் நிற்கும் கட்டுரைகளையும், என்றும் படிக்கப் படிக்கத் திகட்டாத கதைகளையும் உள்ளடக்கியுள்ளது பாராட்டுக்குரியது.
ஊத்தங்கரை, கவி. செங்குட்டுவன்.

[redacted]

அச்சுவின் போன வாரத்துப் பத்திரிகையைத் தொப்பென்று மேஜையில் போட்டான்.

"புரட்டிப் பாரு..."

பார்த்தேன். அங்கங்கே கறுப்பு மசியோ, வர்ணமோ கட்டை பிரஷால் பூசிய படங்கள். 'அவ்வை சண்முகி' புடைவை விளம்பரத்தில் கமல் மாமி இடுப்பிலும் கறுப்புப் பட்டை!

''கல்கிப்லேருந்து தீபாவளிக்கு வந்த சிநேகிதன் கொண்டு வந்தான்... அங்கே எல்லாம் இப்படி சென்ஸார் பண்ணித்தான் விலைக்குக் கொடுப்பாங்களாம்...''

தணிக்கை என்ற சர்ச்சைக்குரிய சமாசாரத்தைப் பற்றி நான் யோசித்துக் கொண்டிருக்கும்போது, அச்சுவின் கம்ப்யூட்டரை இயக்கிக் கொடுத்த இன்டர்நெட் விலாசம் : http://www.euro.net/interest.link

''தணிக்கை செய்யப்பட்ட புத்தகம், நாடகம், சினிமா அப்படீன்னு சகலமானதைப் பற்றியும் இங்கே போட்டு வச்சிருக்காங்க... எதுக்காக தணிக்கை பண்ணினாங்க... என்ன மாதிரி தடை... எந்த நாட்டிலே... எப்போ... நீக்கினாங்களா இல்லையா... இதைப் பார்த்தா எல்லாம் தெரியும்.. ஆராய்ச்சி செய்யறவங்களுக்கு வரப்பிரசாதம்...''


அச்சுவின் 'வெகுஜன அபிப்பிராயப்படி'

'A' படங்கள்

தணிக்கை' என்ற பகுதிக்குள் நுழைந்தான். இப்ஸனின் புகழ்பெற்ற நாடகமான 'பேய்கள்', ('The Ghosts') *1851* முதல் ஐம்பது வருடம் தடைசெய்யப்பட்டிருந்த விவரம் அங்கே... வாழ்க்கையை முடித்துக் கொள்ளும் உரிமை (voluntary euthanasia), சிக்கலான உறவுமுறைகள் போன்றவற்றைப் பற்றிய இந்த நாடகத்தில் விதவை அம்மாவும், பாரிசிலிருந்து திரும்பி வரும் மகனும்தான் முக்கிய பாத்திரங்கள். நார்வே, பிரான்ஸ், இங்கிலாந்து என்று பல நாடுகளில் தடைசெய்யப்பட்ட இந்த நாடகத்துக்கு *1915*இல் இங்கிலாந்தில் தடைநீக்கம் செய்தது அப்போதைய பிரதமர் சேம்பர்லின்.

"இங்கே பாரு... சிங்கப்பூர் அரசாங்கம் 'அடல்ஸ்ட் ஒன்லி' சினிமாப் படங்களை, குறைந்தபட்ச வருமானம் உள்ளவங்க இருக்கிற பகுதிகளில் மட்டும் காட்டத் தடை செய்

திருக்காங்களாம். அதாவது, குறைந்த வருமானம் உள்ளவங்க அது மாதிரியான படங்களைப் பார்த்தா கெட்டுப் போயிடுவாங்க... அப்படிக் கெட்டுப் போனா அவங்க



...ார்க்க ஏழைகளுக்குத் தடை!

வருமானம் பாதிக்கப்பட்டு குடும்பம் கஷ்டப்படும்னு நினைக்கிறாங்க போலிருக்கு..."

அச்வின் மேற்கொண்டு போக, 1820 வரை ஷேக்ஸ்பியரின் 'கிங் லியர்' நாடகத்தை இங்கிலாந்தில் தடைசெய்ததற்கு விநோதமான காரணம் – மனநோயாளியான லியர் அரசன் பாத்திரம். இங்கிலாந்து மன்னன் மூன்றாம் ஜார்ஜ்தான் என்று யாரும் நினைத்து விடக் கூடாதாம்!

"சக்கரவர்த்தி இருக்கட்டும்... நம் போல சாமானியர்களைப் பார்ப்போம்..."

அச்வின் கொடுத்த அடுத்த விலாசம் ஒரு தமிழ் வீடு – pacific.net.sg/pala

வீட்டுக்காரர் சிங்கப்பூர் பழனியப்பன். சிங்கை நாடாளுமன்றத்தில் மொழிபெயர்ப்பாளராக இருக்கிறார். தவிர, திருமணப் பத்திரிகை, வாழ்த்துப்பா, சிறப்புமடல் போன்றதும் ஒழிந்த நேரத்தில் அமைத்துத் தருவார்.

"எல்லாம் தமிழ்ச் சேவை என்று ஏமாற்ற விரும்பவில்லை.. நேர்மையான பிழைப்புக்குத் தான்..." என்று வெளிப்படையாகக் குறிப்பிடுகிற பழனி சார்... 'தமிழ்ச் சேவை'யை 'தழிச் சேவை'ன்னு போட்டிருக்கீங்களே, திருத்தியாச்சா?

'முரசு' மின் பத்திரிகையில் நுழைய, 'இம்மாதப் பாடல்'.

"கேட்போமா?" என்றான் அச்வின்.

"வேணாம்... மீன் சத்தம் போல ஆகிவிடப் போகிறது..."

என் மறுப்பை லட்சியம் பண்ணாமல், முரசு பாடலை (ரொம்ம்ப நீளம்) எங்கள் கம்ப்யூட்டருக்கு இறக்குமதி செய்தான் அச்வின்.

"எனக்கும் உனக்கும் இசைந்த பொருத்தம் என்ன பொருத்தமோ..."

கம்ப்யூட்டரிலிருந்து இனிமையான பெண் குரலில் உருக்கமான அருட்பா. யார் குரலோ?

"வெளிநாட்டிலே கம்ப்யூட்டர் என்ன விலை விக்குதுன்னு பாக்கலாம்... சடசடன்னு விலை குறைஞ்சுட்டு வருதுன்னு பேசிக்கறாங்க..."

http:/www.intel.com என்ற விலாசத்தில் நுழைந்தான் அச்வின்.

"கம்ப்யூட்டரோட இதயமா இருக்கே மைக்ரோப்ரோசஸர் சில்லு.. அதை உற்பத்தி பண்றவங்க இவங்க... பாரு.. ஐநூறு டாலருக்கு, இன்டர்நெட்டிலே இணைச்சு சகல வேலையும் செய்யறதுக்கு கம்ப்யூட்டர் வந்துக்கிட்டு இருக்காம்..."

அவன் மலிவு விலை கம்ப்யூட்டரின் குணாதிசயங்களைப் படித்துக் கொண்டே போக, நான் உஸ்மான் ரோடு நடைபாதையில் பேரம் பேசி கம்ப்யூட்டர் வாங்குவதைக் கற்பனை செய்து கொண்டிருந்தேன்.

"பாங்கோ... பாங்கோ..."

அச்வின் ஏதோ நகைச்சுவைப் பக்கத்தைப் படித்துவிட்டு இடிச்சிரிப்பு சிரித்தான். நானும் படித்தேன்... சாரி... அது அசைவ ஜோக்!

– இரா. முருகன்

இன்டர்நெட் கம்ப்யூட்டர் உதவி : SAP Computer(P) Ltd., Chennai - 17.

கனவு

கல்கி – அனுபவ் குரூப் இணைந்து நடத்திய கவிதைப் போட்டியில் ஆறுதல் பரிசு ரூ. 1,000 பெறும் கவிதை.

- சதை பொசுங்கும் தகிப்புடன் சூரியன்
செயற்கை வெளிச்சக் கூட்டுக்குள்
மக்கள்!

- தண்ணீர் ஏற்றிவந்த கப்பல்
கடலில் மூழ்கியதால் பொருளாதார
வீழ்ச்சி -
கூவியது தொலைக்காட்சிப் பெட்டி!

- மாசத்துக்கு மூன்று லிட்டர் மட்டுமே
ரேஷனில் குடிநீர் -
அரசாங்கக் கட்டுப்பாடு!

- ஸ்பாஞ்ச் ஒத்தடமே
குளியலாகிப்போன
வாழ்க்கை முறை!

- பிராணவாயு முகமூடி அணிந்த
மக்கள் ஆர்ப்பாட்டம் -
ஆக்ஸிஜன் சிலிண்டர்
விலையேற்றத்தால்!

- ஆறு, ஏரி, குளம் -
புத்தகத்தில் மட்டுமே சாத்தியமான
புவியியல் பாடம்!

- உலகின் எட்டாவது அதிசயம் -
இந்தியாவின் தென்மூலை
கிராமத்தின் தண்ணீர்க் கிணறு!

- வீதிகளில் கவச உடை மக்கள் -
அணுக்கதிர் வீசும் சுற்றுப்புறச் சூழல்!

- சுளீரென என்மேல் வெயில்பட
அலறிக் கண்விழித்தேன்
நல்லவேளை, 1996 என்றது
காலண்டர்!

- நிம்மதியாய் ஜன்னல்வழியே
எட்டிப்பார்த்தேன்
தலையாட்டியபடி மரங்கள்!

- கிருஷ்ணா



பாரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - விமானத் தபால் : ரூ. 525/-.

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka